
வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 12.02.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 65 | பக்கங்கள் : 20


07 துருப்புச் சீட்டாகும் ஈழப் பிரச்னை!



08 '13' என்று சொல்வதை தவிர்த்த ஜனாதிபதி


10 இன பிரச்னைக்கு முட்டுக்கட்டை போடுகிறதா பௌத்த தேசியவாதம்?


11 33 வருடங்களாக அஞ்ஞாத வாசம் செய்த தமிழர்கள்

# தமிழ், சிங்களத் தலைவர்கள் சேர்ந்தால் நாடு முன்னேறும்

## கலாசார நிலைய திறப்பு விழாவில் ஜனாதிபதி ரணில் பகிரங்க அழைப்பு



யாழ்ப்பாணம், பெப். 12

நல்லிணக்கம், அபிவிருத்தி மற்றும் கலாசாரம் என்பனவே அரசின் கொள்கை என்றும் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக புதிய எதிர்பார்ப்புடன் அனைத்து இனத்தவர்களும் சகோதரத்துவத்துடன் கை கோர்த்து செயற்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

19



## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் நேற்று ரணிலுக்கு எதிராகப் பேரணி

யாழ்ப்பாணம், பெப். 12

சுய நிர்ணய உரிமை கோரியும் யாழ்ப்பாணத்தில் நேற்று ஜனாதிபதி தலைமையில் கொண்டாடப்பட்ட சுதந்திர தின நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் நேற்று எதிர்ப்புப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக முன்றலிலிருந்து ஆரம்பமாகிய பேரணி, பரமேஸ்வரா சந்தி வரை சென்று

19

## யாழ்.கலாசார நிலையம் நேற்று திறந்துவைப்பு ‘சரஸ்வதி மண்டபம்’ என பெயரிட்டார் ரணில்!

யாழ்ப்பாணம், பெப். 12

இந்தியாவின் நிதி அனுசரணையில் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கலாசார மத்திய நிலையம் நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இந்நிகழ்வு நேற்று முற்பகல் நடைபெற்றது.

யாழ். கலாசார மத்திய நிலையத்துக்கு, ‘சரஸ்வதி மண்டபம்’ என பெயரிடுவதாக நிகழ்வில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்தார்.

இந்திய இணை அமைச்சர் கலாநிதி லோகநாதன் முருகனும் இந்திய இராஜதந்திரிகளும் இந்த நிகழ்வில்

19

## வடக்கில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள 100 பிள்ளைகளுக்கு இந்திய புலமைப்பரிசில்!

### யாழ்ப்பாணத்தில் அறிவித்தார் இந்திய அமைச்சர்



யாழ்ப்பாணம், பெப். 12

“இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டலின் பேரில் வட மாகாணத்திலுள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 100 பிள்ளைகளுக்கு இந்திய அரசின் சார்பில் புலமைப்பரிசில் வழங்கும் திட்டமொன்று அறிமுகம் செய்யப்படும்.”

- இவ்வாறு தெரிவித்தார்

19



## றெமீடியஸ் காலமானார்

யாழ்ப்பாணம், பெப். 12

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான

19

## கஜேந்திரன் எம்.பி. உட்பட 18 பேர் யாழ்.நகரில் வைத்து அதிரடி கைது!

### ரணிலின் வருகைக்கு எதிர்ப்பு வெளியிட்டமையால்

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 75ஆவது சுதந்திர தின நிகழ்வுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர்





சட்டத்தரணி க.சுகாஷ் உட்பட 18 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

75ஆவது சுதந்திர தின நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்

19



## சிவாஜிலிங்கமும் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று இடம்பெற்ற சுதந்திரதின நிகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையிலும் போராட்டம் நடைபெற்றது.

சுதந்திர தின நிகழ்வுக்கு

19

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023
தமிழ் தேசிய கூட்டமைப்பு
தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# இப்படியும் நடக்கிறது...!

யாழ்ப்பாண கலாசார மண்டபம் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுவிட்டது.

அது கையளிக்கப்பட்ட விழாவில் யாழ்ப்பாண மாநகர சபை புறக்கணிக்கப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதுடன், அந்த விழாவில் கலந்துகொள்வதையும் தற்போதைய முதல்வர் ஆர்னோல்ட் தவிர்த்திருப்பதாக அறிவித்திருந்தார்.

இந்த கலாசார மண்டபம் இன்று இலங்கை அரசிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த சம்பவங்கள் பற்றிய செய்தி வெளிவருகின்றபோது பழைய சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

அப்போது இலங்கை தொழிலாளர் காங்கிரசின் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் உயிரோடு இருந்தார். அவர் அப்போது அமைச்சர்.

புதுடில்லிக்கு சென்றிருந்த இலங்கை அரச குழுவில் இடம்பெற்றிருந்த தொண்டமான், பாரதப் பிரதமர் மோடியைச் சந்தித்தபோது, ஒரு கோரிக்கையை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் கட்டி முடிக்கப்பட்ட கலாசார நிலையத்தை நிர்வகிக்கின்ற நிலையில் யாழ்ப்பாண மாநகர சபை இல்லை என்பதால் அதனை மத்திய அரசிடம் கையளிக்கவேண்டும் என்பதே அவரது அந்தக் கோரிக்கை.

அப்போது பாரதப்பிரதமர் மோடி சொன்னது, 'அது யாழ்ப்பாண மக்களுக்காக கட்டப்பட்டது. அதனை யாழ்ப்பாண மக்களிடமே கையளிக்கவேண்டும்".

ஆனால் அவரது விருப்பத்திற்கு மாறாக இன்று அந்த நிலையம் இலங்கை அரசிடம், (அதாவது யாழ்ப்பாண மக்களிடம் அல்ல) கையளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த கையளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலையிடம் ஆறு. திருமுருகன் பகிரங்க கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

"தமிழர்களின் மண்ணில் தமிழருக்காக இந்திய அரசாங்கத்தால் கட்டிக்கொடுக்கப்பட்ட கலாசார மண்டபத்தைத் தமிழர்களிடம் கையளிக்க வேண்டும். அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்".

பல கோடி ரூபா செலவில் இந்திய அரசாங்கத்தால் கட்டி முடிக்கப்பட்ட இந்த கலாசார நிலையம் உண்மையில் யாழ்ப்பாண மாநகர சபையிடமேயே கையளிக்கப்படவிருந்தது. ஆனால் அதனை நிர்வகிக்கக் கூடிய நிலையில் யாழ்ப்பாண மாநகரசபை இருக்கவில்லை.

அந்த நிலையத்தை பராமரிப்பதற்கு மாதம் ஒன்றிற்கு குறைந்தது ஐந்து மில்லியன் ரூபாய்களாவது தேவை. அதாவது ஐம்பது லட்சம் ரூபாய்கள். இத்தனை பெரிய தொகையை மாதம் தோறும் செலவிடும் நிலையில் யாழ்ப்பாண மாநகரசபை இல்லை. அதனால் அதனை பொறுப்பேற்க மாநகரசபை முன்வராததாலேயே இத்தனை ஆண்டுகளாக அது தொடர்ந்து இந்திய அரசின் பராமரிப்பிலேயே இருந்துவந்தது.

அதனை பராமரிக்க அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இந்திய அரசு முன்வந்தபோதிலும் அந்த நிதியை மாநகரசபை நேரடியாக பெறமுடியாது. அது மத்திய அரசின் ஊடாகவே வரவேண்டும். இதனாலேயே அந்த கலாசார நிலையத்தின் பராமரிப்பு இன்று இலங்கை அரசின் கைகளுக்கு சென்றிருக்கின்றது.

இந்த காலத்தில் யாழ்ப்பாண மாநகரசபைக்கு இருவர் முதல்வராக இருந்திருக்கிறார்கள். இந்த இருவரில் எவருமே இதனை எப்படி நிர்வகிப்பது என்பது குறித்து எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமது மக்களிடம் கருத்துக் கேட்டதாகவும் நாம் அறியவில்லை. கலாசார நிலையம் என்ற பெயரை பண்பாட்டு நிலையம் என்று பெயர் மாற்றுங்கள் என்று முதல்வர் மணிவண்ணன் கோரிக்கை விடுத்திருந்தார் என ஞாபகம்.

இது குறித்து யாழ். மாநகர சபை நிர்வாகம் உரிய முன்னெடுப்புக்களை செய்திருந்தால், ஆறு. திருமுருகனின் சிவபூமி அறக்கட்டளை கூட அதனை பாராமரிக்க உதவியிருக்கலாம். அதிகம் ஏன், பல தனியார் நிறுவனங்கள் கூட அனுசரணை வழங்கியிருக்கலாம்.

மாதம் ஓர் இந்தியக் கலைஞர்களை வரவழைத்து (இந்திய தூதரக அனுசரணையுடன்) நிகழ்ச்சிகளை நடத்தியே அந்த நிலையத்தின் பராமரிப்பை கவனித்திருக்கலாம். அதனை செய்ய முயற்சிக்காமல் இருந்துவிட்டு, எங்களை அழைக்கவில்லை, எங்களுக்கு உரிய கௌரவத்தை வழங்கவில்லை என்று அறிக்கை விடுப்பது எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.!

**- ஊர்க்குருவி**

# துணைவேந்தர் தெரிவு முறையில் மாற்றம்!

கொழும்பு, பெப். 12

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பதற்கான தெரிவு முறையில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன என்பதனால் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பம் கோருவதை மறுஅறிவித்தல் வரை நிறுத்தி வைக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக் கழகங்களை அறிவுறுத்தியுள்ளது.

இந்த அறிவிப்பால், யாழ்ப்பாணம் மற்றும் களனி பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் பதவிக்காக இம்மாத தொடக்கத்தில் கோரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர் பதவி நியமனத்துக்காக நடைமுறையில் இருக்கும் சுற்றறிக்கை மீளாய்வு செய்யப்பட்டு, புதிய நடைமுறைகள் விரைவில் அறிவிக்கப்பட இருப்பதனால், துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பம் கோருவதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் ஆரம்பிக்கவேண்டாம் எனவும், புதிய நடைமுறைகள் கொண்ட சுற்றுநிருபம் வெளிவந்த பின்னர் அதன் அடிப்படையில் விண்ணப்பங்களைக் கோருமாறும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க பல்கலைக் கழகங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தரை நியமிப்பதற்கு 2020 ஆம் ஆண்டு வரை, அந்தந்தப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களின் வாக்களிப்பு முறை மூலம் முன்மொழியப்படும் மூவரில் ஒருவரை பல்கலைக்கழக சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தின் படி ஜனாதிபதி தெரிவு செய்வார். அதன் பின் 2020 ஆம் ஆண்டு வெளிவந்த-தற்போது வரை நடைமுறையில் இருந்து வந்த சுற்று நிருபத்தின் படி, துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களின் திறமை அடிப்படையில் முதல் ஐந்து பேரை தகுதி வாய்ந்த துறைசார் நிபுணர்களைக் கொண்ட மதிப்பீட்டுக் குழு தெரிவு செய்து பேரவைக்குப் பரிந்துரை செய்யும். அந்த ஐவரில், அவர்களின் தகுதி, தராதரங்களின்படி - புள்ளி வழங்கப்பட்டு முன்னிலை பெறும் மூவரின் பெயர்கள் ஜனாதிபதியின் தெரிவுக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும். முன்மொழியப்படும் மூவரில் ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி அறிவிப்பார்.

இந்த நடைமுறைகளின் படி, பதவியில் இருக்கும் துணைவேந்தர் ஒருவரின் பதவிக் காலம் முடிவடைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் புதிய துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்களைப் பகிரங்கமாகக் கோருதல் வேண்டும். இதன் அடிப்படையில், யாழ்ப்பாணம் மற்றும் களனி பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் தமது பதவிக் காலத்தை எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துடன் நிறைவு செய்ய இருப்பதனால் - பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# பலாலி விமான நிலையத்தில் தீர்வையற்ற கடை திறப்பு



யாழ்ப்பாணம், பெப். 12

பலாலியில் உள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று தீர்வையற்ற கடை திறந்து வைக்கப்பட்டது.

தீர்வையற்ற கடையினை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி பயணி ஒருவருடன் இணைந்து நாடா வெட்டி திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் வடபிராந்திய சுங்கத் திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் யாழ்ப்பாண பலாலி விமான நிலையத்தின் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

விரைவில் சென்னை - பலாலி இடையிலான விமான சேவை அதிகரிக்கப்படவுள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சந்திரசிறிதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலாலி விமான நிலையத்தில் தீர்வைற்ற கடையினை திறந்து வைத்தமையையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். விமானத்தின் ஊடாக பயணிக்கும் பயணிகளுக்காக மேலும் பல வசதிகளை ஏற்படுத்த உள்ளோம்.

தற்போது நான்கு விமான சேவைகள் மாத்திரமே வாரத்தில் இடம்பெறுகின்றன எதிர்வரும் காலங்களில் ஏழு விமான சேவைகள் ஒரு வாரத்தில் இடம் பெறுவதற்குரியவாறு எயார்லைன்ஸ் நிறுவனத்தினருக்கு அறிவுறித்தியுள்ளோம்.

அதேபோல இரத்மலானை பலாலிக்கிடையிலான உள்ளூர் விமான சேவையினையும் விரைவில் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கை எடுத்துள்ளோம். அத்தோடு பலாலி விமான நிலையத்தினை மேலும் விஸ்திரித்து இங்கே பயணிக்கும் பயணிகளுக்கும் மேலும் பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நாங்கள் முயற்சிகளை எடுத்துள்ளோம். வர்த்தக ரீதியில் மேலும் பல அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இன்று முதலாவது தீர்வையற்ற கடை திறக்கப்பட்டுள்ளது. அதேபோல மேலும் பல கடைகள் இந்த அரசாங்கத்தின் அனுமதியோடு திறப்பதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம். அதில் அழகு சாதன பொருட்கள் மற்றும் மேலும் பாருட்கள் அடங்கிய தீர்வையற்ற கடைகள் 4 திறக்கப்படவுள்ளன.

விமான நிலையத்தை மேலும் விஸ்தரித்து பயணிப்போர் மிகவும் வசதியாக பயணிப்பதற்கு முயற்சிக்கின்றோம். தீர்வையற்ற கடைகளுக்காக ஒரு தனியான கட்டடத் தொகுதியை அமைக்கவுள்ளோம். அதேபோல் விமானத்திற்குள் உள் நுழையும் வெளியேறும் பாதைகள் விஸ்தரிக்கப்பட்டு பயணிகள் சௌகரியமாக பயணிக்கக் கூடியவராக ஏற்பாடுகள் மேற்கொள்ள உள்ளோம்.

குறிப்பாக சுங்கம் மற்றும் அரசாங்கத்தின் கேள்விகோரல் முறையின்படி உரியபடி விண்ணப்பித்து தீர்வையற்ற கடைகளுக்குரிய அனுமதியினை பெற்றுக் கொள்ள முடியும் . குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களும் இந்த நடைமுறைகளை பின்பற்றி தீர்வையற்ற கடைகளுக்கான அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியும்-என்றார். (அ)











யாழ்ப்பாணம் கலாசார நிலையம் நேற்றுக் காலை ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்த வைபவத்தில் இந்திய மத்திய மீன்பிடி இணை அமைச்சர் எல்.முருகன், இலங்கை பௌத்த கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பா.ஜ.க. தமிழக தலைவர் அண்ணாமலை ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# பெரும் நில நடுக்கங்கள் இலங்கையில் ஏற்படலாம்

கொழும்பு, பெப்.12

இந்தோ - அவுஸ்திரேலிய கண்டத் தட்டுக்களின் நகர்வு காரணமாக எதிர்காலத்தில் பெரிய நில நடுக்கங்களை இலங்கை எதிர்பார்க்க முடியும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

புத்தல, வெள்ளவாய மற்றும் மொனராகலையின் பல பகுதிகளில் பதிவான நிலநடுக்கமும் கண்டத் தட்டுக்களின் நகர்வு காரணமாக ஏற்பட்டதாக பேராதனை பல்கலைக் கழகத்தின் புவியியல் பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து 1,000 மைல்களுக்கு அப்பால் இத்தகைய நடுக்கம் ஏற்படுவதால் அதன் தாக்கம் குறைவாகவே இருப்பதாக பேராசிரியர் கூறினார்.

இந்தோ - அவுஸ்திரேலிய கண்டத் தட்டுக்கள் ஏற்கனவே இரண்டாகப் பிளவுபடத் தொடங்கியிருப்பதாகவும், கடந்த 15 முதல் 20 ஆண்டுகளில் இது நிகழும் வீதம் அதிகரித்திருப்பதாகவும் நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தியப் பெருங்கடலை உலுக்கிய சமீபத்திய பாரிய நிலநடுக்கங்களும் பூமியின் மேற்பரப்புக்குள் ஒரு புதிய தட்டு எல்லையை உருவாக்குவதற்கான சமீபத்திய படியை சமிக்ஞை செய்துள்ளன. (அ)

# மாயாஜால வித்தை காட்டி எங்களை ஏமாற்ற முடியாது

## கூறுகின்றார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, பெப். 12

அதிகாரப்பகிர்வு என்ற பேர்வையில் மாயாஜால வித்தை காட்டி தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை வெருகல் பிரதேச சபையில் தமிழரசுக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழ் மக்கள் கோரும் சமஷ்டித் தீர்வு என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தெற்கில் எவ்வாறான மாற்றம் ஏற்பட்டாலும் தம்மைத் தாமே ஆள அதிகாரம் பகிரப்படவேண்டும் என்ற வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் நிலைப்பாட்டில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களது இந்த நிலைப்பாடு எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வெளிப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

# இலங்கையில் மீண்டும் நிலநடுக்கம்!

கொழும்பு, பெப். 12

புத்தல - வெள்ளவாய பிரதேசத்தில் 2.3 ரிச்டர் அளவில் மற்றுமொரு சிறிய நிலநடுக்கம் உணரப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என அந்நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் மொனராகலை மாவட்டத்தின் பல பகுதிகளில் 3.0 ரிச்டர் அளவில் சிறிய நில நடுக்கம் பதிவாகியிருந்தது.

பல்லேகல, மஹகனதராவ மற்றும் ஹக்மன ஆகிய இடங்களில் அமைந்துள்ள நில அதிர்வு அளவை நிலையங்களில் இந்த அதிர்வுகள் உணரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நிலக்கரிக்கு பணம் இல்லை

கொழும்பு, பெப். 12

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் உற்பத்திக்கு தேவையான நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி ஒதுக்கீடுகள் இதுவரை கிடைக்கவில்லை என இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதத்தில் 22 பில்லியன் ரூபா தேவைப்படுவதாக அதன் தலைவர் ஷெஹான் சுமணசேகர தெரிவித்தார்.

ஆனால் அதற்காக 2.5 பில்லியன் ரூபா மாத்திரமே கிடைத்துள்ளதாக அவர் கூறினார். (அ)

# மண்ணெண்ணெய் அருந்திய 2 வயது குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, பெப். 12

நிட்டம்புவ பிரதேசத்தில் 2 வயது குழந்தையொன்று மண்ணெண்ணெய் அருந்தி உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை வீட்டில் வைக்கப்பட்டிருந்த கொள்கலனில் இருந்த மண்ணெண்ணெயை குடித்ததாக குழந்தையின் உறவினர் ஒருவர் தெரிவித்தார்.

மண்ணெண்ணெய் குடித்த குழந்தை வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோதும் குழந்தையின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# யாழில் 197 குடும்பங்களுக்கு நேற்று காணி உறுதிப்பத்திரம்

## ஜனாதிபதி ரணில் வழங்கினார்

யாழ்ப்பாணம், பெப்.12

வடக்கில் மீள்குடியேற்றப்படும் 197 குடும்பங்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் மற்றும் மீள்குடியேற்ற கொடுப்பனவுகள் ஜனாதிபதியின் தலைமையில் வழங்கப்பட்டன.

வடக்கில் மீள்குடியேற்றப்படும் 197 குடும்பங்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் மற்றும் மீள்குடியேற்றக் கொடுப்பனவாக தலா 38,000 ரூபா வீதம் வழங்கப்படும் காசோலைகள் என்பவற்றைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய, யுத்தத்தின் போது பாதுகாப்பு படையினரால் பயன்படுத்தப்பட்ட வடக்கில் உள்ள காணிகளை அதன் உரிமையாளர்களான பொது மக்களிடம் மீள ஒப்படைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த காணிகள் விடுவிக்கப்பட்டன.

இதனடிப்படையில் காணி உறுதிப் பத்திரங்கள் மற்றும் காசோலைகளை கையளிக்கும் அடையாள நிகழ்வு நேற்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வட மாகாணத்துக்கான ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் எல்.இளங்கோவன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# சமுர்த்தி பயனாளர்கள் பணத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலை

கொழும்பு, பெப். 12

சமுர்த்தி பயனாளர் ஒருவர் அதிலிருந்து விலகும்போது, அவருக்கு உரித்தான வைப்பு மற்றும் பங்கு பணத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் அசௌகரியங்களை எதிர்நோக்கி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சமுர்த்தி மானியத்திலிருந்து விலகுபவர்களுக்கு, உரிய வைப்புத்தொகை மற்றும் பங்குகள் வழங்கப்படவேண்டும் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்பவர்களில், சிலர் சில காரணங்களினால் அதனை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது, தங்களது வைப்புப் பணம் மற்றும் பங்குகளை பெற்றுக்கொள்வதில் பிரச்சினையை எதிர்நோக்க நேரிடுவதாக, சம்பந்தப்பட்ட ஒரு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

சமுர்த்தி மானியத்திலிருந்து வெளியேறும் மக்களுக்கு அவர்களது வைப்புத்தொகை மற்றும் பங்குகளை வழங்குமாறு உரிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

சமுர்த்தி மானியத்தில் இருந்து விலகிய மக்களுக்கு சில சமுர்த்தி வங்கிகள் வைப்புத் தொகை மற்றும் பங்குகளை வழங்கத் தவறி வருவதாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சாமர மத்துமகளுகே குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

# உள்ளூராட்சி நிறுவன வளங்களை துஷ்பிரயோகம் செய்வது அதிகரிப்பு

கொழும்பு, பெப். 12

உள்ளூாராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை 60 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி இவ்வாறு கூறினார்.

இதேவேளை, உள்ளூராட்சி நிறுவனங்களின் வளங்களை துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்கள் அதிமம் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சட்டவிரோத பிரசாரத்தில் ஈடுபடும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்களுக்கு இலஞ்சம் கொடுப்பது தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் எனவும் அவர் கோரினார். (அ)

# நில நடுக்கத்துக்கு இதுதான் காரணம்!

கொழும்பு, பெப். 12

புத்தல பிரதேசத்தில் உணரப்பட்ட நிலநடுக்கத்திற்கு இந்திய - அவுஸ்திரேலியா டெக்டோனிக் தகடுகளில் ஏற்பட்ட விரிசலே காரணம் என்று பேராதனை பல்கலைக் கழக புவியியல் பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தோ - அவுஸ்திரேலிய தட்டுக்கு நடுவே இடம்பெறும் இந்த மோதல் சுமார் 15-20 ஆண்டுகளாக வேகமாக நடந்து வருவதாகவும், விளிம்பில் இருக்கும் நாடு என்பதால் இலங்கை சிறிய நிலநடுக்கங்களை எதிர்கொள்ளும் என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்த சிறிய நிலநடுக்கத்தினால் மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம் என அவர் கூறினார்.

இலங்கையில் இருந்து சுமார் 1000 மைல்களுக்கு அப்பால் உள்ள இந்த தட்டுக்கள் மோதுவதால், எதிர்காலத்திலும் குறிப்பிடத்தக்க ரிக்டர் அளவில் நிலநடுக்கங்கள் ஏற்படக்கூடும் எனவும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன் தினம் பிற்பகல் வெல்லவாய - புத்தல - பெலவத்த பிரதேசங்களில் 3.0 ரிச்டர் அளவில் சிறிய நில அதிர்வுகள் பதிவாகியிருந்ததுடன் நேற்று அதிகாலை 3.48 மணியளவில் 2.3 அலகுகளாக ரிச்டர் அளவுகோலில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கங்கள் குறித்து, மக்கள் தேவையற்ற அச்சத்தில் கொள்ள வேண்டாம் என புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# ஜப்பானிய நிறுவனங்களின் நம்பிக்கையை மீளப் பெற இலங்கை முயற்சிக்கவேண்டும்

கொழும்பு, பெப். 12

ஜப்பானிய நிறுவனங்களின் நம்பிக்கையை மீளப் பெறுவதற்கான முயற்சிகளை இலங்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்காக இலங்கையில் உள்ள பிரச்னைகள் மற்றும் தடைகளை தீர்த்து வைக்க வேண்டும் என்று கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது. சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்திருந்த ஜப்பானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் டேக்கி சன்சுகே, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் கலந்துரையாடிய போது இந்த கருத்தை வலியுறுத்தியதாக ஜப்பானிய தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

ஜப்பானின் நிதியுதவியுடன் கூடிய இலகு தொடரூந்து திட்டத்தை இலங்கை ஒருதலைப் பட்சமாக ரத்து செய்ததை ஜப்பானிய அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த காலத்தில், கற்றுக்கொண்ட பாடங்களைக் கருத்தில் கொண்டு, சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பட்ட பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை இலங்கை சீராக அமுல்படுத்தும் என்று தாம் நம்புவதாக ஜப்பானிய இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# தமிழர் பிரச்னைக்குத் தீர்வை வழங்க காலம் தாழ்த்தாதீர்கள்

## இந்திய அமைச்சரிடம் நல்லை ஆதீனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 12

காலம் தாழ்த்தாது தமிழர் மக்களுக்கு உரிய வழங்குவதற்கு இந்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என நல்லை ஆதீன சுவாமிகள் இந்திய மீன்வள இணை அமைச்சரிடம் தெரிவித்தார் என தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய மத்திய அரசின் மீன்வள இணை அமைச்சர் நல்லை ஆதீனத்துக்கு விஜயம் மேற்கொண்டு நல்லை ஆதீன முதல்வர் மற்றும் இந்து மாமன்றத்தின் உப தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பின்போது நல்லை ஆதீன முதல்வர் மேற்படி கோரிக்கை விடுத்ததாக கலாநிதி ஆறு திருமுருகன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழரின் பிரச்னை தொடர்பில் காலம் தாழ்த்தாது தீர்வு வழங்குவதற்கு இந்திய அரசு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருக்கின்றோம் - என்றார். (அ)

# சட்டவிரோத கைத்துப்பாக்கிகள் மீள கையளிப்பதற்கு அவகாசம்

கொழும்பு, பெப். 12

அனுமதிப்பத்திரம் இன்றி தம்வசம் கைத்துப்பாக்கியை, வைத்திருப்பவர்கள், அதனை மீள கையளிப்பதற்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதி கடந்த 6ஆம் திகதி முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அனுமதிப்பத்திரம் இன்றி கைத்துப்பாக்கியை தம்வசம் வைத்திருப்பவர்கள், குறித்த காலப்பகுதியில், அருகில் உள்ள காவல்நிலையங்களில் அதனைக் கையளிக்க முடியும் என பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
12.02.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், தை 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# Born again - கிறிஸ்தவ பிரிவின் மீதான குற்றச்சாட்டு?

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை வீழ்த்தியதற்கு பின்னால் Born again - 'போன் எகயின்' மதக் குழுவொன்று இருந்ததாகவும் - போன் எகயின் மதக் குழுவின் கட்டுப்பாட்டில் உலகில் எந்தவோர் அரசாங்கமும் இல்லை - அவ்வாறானதொரு அரசாங்கத்தை இலங்கையில் ஏற்படுத்துவதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

பசில் ராஜபக்ஷ கூறும் மதப்பிரிவினர் றோமன் கத்தோலிக்கத்திற்கு எதிரான மதப்பிரிவினராவார். இவர்கள் அடிப்படையில் மதமாற்றத்தை ஒரு பிரதான நிகழ்ச்சிநிரலாகக் கொண்டிருக்கும் குழுவினர். உலகெங்கும் பரவியிருக்கும் இவர்கள், இந்திய உபகண்ட நாடுகளில் பரவலாக செயற்பட்டு வருகின்றனர். இலங்கையில் பல்வேறு குழுக்கள் இந்த மதப்பிரிவின் கீழ் செயற்படுகின்றன. வடக்கு, கிழக்கிலும் இந்தக் குழுவினர் பல்வேறு மதப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தியாவிலும் செயற்பட்டுவருகின்றனர். வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் இவர்கள் இந்து மதத்திலிருப்பவர்களை 'போன் எகயின்' மத நம்பிக்கையாளர்களாக மாற்றுவதற்கு பல்வேறு பிரச்சாரங்களை முன்னெடுத்துவருகின்றனர். வறுமையில் இருப்பவர்களே இவர்களது பிரதான இலக்காகும்.

பொதுவாக இந்த மதப் பிரிவினர் அரசியலோடு தொடர்புபடுத்தப்படுத் தப்படுவதில்லை. ஆனால் இந்த மதப்பிரிவை பிரதிநித்துவப்படுத்துபவர்கள் பலர் அரசியலில் இருக்கின்றனர். அவர்கள் இப்போது ஒரு சக்தியாக திரட்சி பெறுகின்றனரா? பசில் இவ்வாறானதொரு குற்றச்சாட்டை எந்த அடிப்படையில் முன்வைக்கின்றார்? மேற்குலக நாடுகளின் பின்னணியை சுட்டிக்காட்டும் நோக்கில் இதனை கூறுகின்றாரா அல்லது, எதிர்கட்சிகளை குறிப்பாக சஜித் பிரேமதாசவின் பின்னணியை கருத்தில்கொண்டு இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைக்கின்றாரா? ஏனெனில், சஜித் பிரேமதாசவின் தாய் மற்றும் மனைவி ஆகியோர் 'போன் எகயின்' மதப் பிரிவை சேர்ந்தவர்களாவர். ஆட்சி மாற்றங்கள் ஏற்படும் போது பொதுவாக வெளிநாட்டு உளவுத் துறைகள் மீதுதான் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதுண்டு. இலங்கையில் இரண்டு தரப்பிலும் இவ்வாறான கதைகள் தாராளமாகவுண்டு - குறிப்பாக இந்திய உளவுத் துறையின் மீது குற்றம்சாட்டுவதை பல்வேறு சந்தர்பங்களில் நாம் கண்டிருக்கின்றோம். 2015இல் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த போதும் அவ்வாறான குற்றச்சாட்டுகளையே மகிந்த ராஜபக்ஷ முன்வைத்திருந்தார். ஆனால் முதல் முதலாக 'போன் எகயின்' மதப் பிரிவினர் மீது குற்றம்சாட்டுவதானது, சற்று மாறுபாடான ஒன்றாகும்.

கோட்டாபய வெறுப்பிற்கு பின்னால் பல்வேறு காரணங்கள் இருந்தன. அதில் பிரதானமானது அவரது அரசியல் தலைமைத்துவம். இராணுவ பின்னணியிலிருந்து வந்த அவரிடம் அரசியலை கையாளுவதற்கான அனுபவமோ, ஆற்றலோ இருந்திருக்கவில்லை. அரசியலிலும் ஓர் இராணுவ அதிகாரி போன்றே செயற்பட எத்தணித்தார். இரண்டாவது, பொருளாதார நெருக்கடியை கையாள முடியாமல்போனமை. மூன்று, மற்ற எவரை விடவும் தானே உண்மையான சிங்கள - பௌத்தன் என்பதை காண்பிப்பதற்காக கடும்போக்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க முற்பட்டமை. அதில் பிரதானமானது, இலங்கையை ஒரு பௌத்த - சிங்கள நாடாக பிரகடனம் செய்யும் வகையில் பௌத்த சாசன யாப்பு ஒன்றை கொண்டுவர முயற்சித்தமை. கோட்டாபயவை வெறுப்பதற்கு ஒவ்வொருவருக்கும் பல்வேறு காரணங்கள் இருந்தன. இவ்வாறான காரணங்களால் வாய்ப்பு கிடைத்த போது, அனைவரும் அணிதிரண்டனர். சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டனர்.

உள்ளூராட்சி தேர்லொன்றுக்கு முகம் கொடுக்க முற்படும் போது, பசில் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார். ஆனால் பகிரங்கமாக இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைப்பதை சாதாரணமாகவும் எடுத்துக் கொள்ள முடியாது. ஒரு விடயம் தெளிவாக தெரிகின்றது. அதாவது, 2024 ஜனாதிபதி தேர்தலானது, பல்வேறு சிக்கல்கள் கொண்டதாகவே இருக்கப் போகின்றது. அதிகாரத்தை கைப்பற்றும் போட்டியில் ஒவ்வொருவரும் உச்சளவில் பலப்பரீட்சையில் ஈடுபடக் கூடும். தமிழ் சூழலிலும் அவ்வாறானதொரு நிலைமை தெரிகின்றது. தமிழரசு கட்சிக்குள்ளும் தலைமையை கைப்பற்றும் முயற்சிகள் தீவிரமடையலாம். கூட்டமைப்பா அல்லது தமிழரசு கட்சியா என்னும் போட்டியில், தமிழ் தேசிய அரசியல் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்படவும் வாய்ப்புண்டு. ஒரு வேளை கூட்டமைப்பு வெற்றிபெற்றால் அவ்வாறான நெருக்கடி ஒப்பீட்டடிப்படையில் குறைவாகவே இருக்கும்.

# 13 ஐ நடைமுறைப்படுத்துவது பிரச்னைகளுக்கு தீர்வாகாது!

## அனுரகுமார கூறுகின்றார்



கொழும்பு, பெப். 12

அனைத்து பிரஜைகளின் உரிமைகளையும் பாதுகாக் கும் புதிய அரசியலமைப்பு இலங்கைக்கு தேவை என்றும், 13 அல்லது 13 பிளஸை அமுல்படுத்துவது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வாகாது என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இனவாதத்தையும் வன் முறையையும் விரும்பும் சிலர் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை பொறுத்துக் கொள்ள முடியாமல் அவர் களை தூண்டிவிடும் செயற்பாட்டில் ஈடுபடுவதாக அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அரச நிறுவனங்களின் வசம் உள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பதில் தமக்கு எந்த ஆட்சேபனை களும் இல்லை என தெரிவித்த அவர், 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்த தமது நிலைப் பாட்டை கடந்த தலைவர் கள் எழுத்துபூர்வமாக அறிவிக்கவேண்டும் என்றும் கூறினார்.

வெவ்வேறு விடயங்களை கூறிவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் கையொப்பமிடப்பட்ட குறித்த எழுத்து பூர்வமான ஆவணத்தை தமக்கு தர வேண்டும் என்றும் அனுரகுமார கோரினார்.

அண்மைய தசாப்தங்களில் இலங்கை அரசியல் இனவாதத்தால் உந்தப்பட்ட இந்தச் சூழலில் தேர்தலும் நெருங்கி வருவதால் அரசியல்வாதிகள் அதனைச் சாதகமாக பயன்படுத்துகின்றார்கள் என்றும் அவர் குற்றம் சாட்டினார். (அ)

# ரயில் பாதைக்காக இறக்குமதி செய்த இரும்புகள் திருடிய 4 அதிகாரிகள்!

கொழும்பு, பெப். 12

மாஹோ முதல் ஓமந்தை வரையான ரயில் பாதையை புனரமைக்கும் திட்டத்துக்காக இறக்குமதி செய்யப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான இரும்புகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் ரயில்வே திணைக்களத்தின் நான்கு அதிகாரிகளின் சேவையை இடைநிறுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட நான்கு அதிகாரிகளும் திட்டத்தில் உயர் பதவியில் இருப்பவர்கள் என்றும், சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்களால் திருடப்பட்டதாக கூறப்படும் இரும்பின் பெறுமதி இதுவரை மதிப்பிடப்படவில்லை எனவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (அ)

# ரூ.6 கோடிக்கு வலம்புரி சங்கு விற்க முயன்ற இருவர் கைது

கொழும்பு, பெப். 12

ஹற்றன் மல்லியப்பு பகுதியில் 6 கோடி ரூபாவுக்கு வலம்புரி சங்கை விற்பனை செய்வதற்கு முற்பட்ட இருவர், நுவரெலியா பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட வலம்புரி சங்கு மற்றும் கைதான இரு சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைகளுக்காக ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஹற்றன் - கொழும்பு வீதியில் வசிக்கும் சந்தேக நபர், வலம்புரிச் சங்கை 6 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முற்படுகின்றார் என இராணுவ புலனாய்வு பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து விசேட அதிரடிப்படைக்கு இவ்விடயம் பற்றி தெரிவிக்கப்பட்டு, சந்தேக நபரை கைது செய்வதற்கு கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வலம்புரிச் சங்கை வாங்குவதற்காக செல்லும் பாணியிலேயே சந்தேக நபர்கள் இருவரையும் விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

கைதானவர்கள் ஹற்றன் மற்றும் நுவரெலியா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், பிரதான சந்தேக நபரின் வீட்டிலேயே வலம்புரிச் சங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்தது எனவும் சுற்றிவளைப்பை மேற்கொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# காணவேண்டிய கனவு பற்றியது...

பகிர்வு -68

கணபதி சர்வானந்தா

ஒரு மனிதனுக்கு அவன் கனவில் இருந்து அழிக்க முடியாததொரு பொக்கிஷமாக அவன் படித்த பள்ளிக் கூடம் இருக்கும். அவன் வாழ்வில் வீட்டை அடுத்து அவன் எண்ணங்களில் பதித்துப் பாதுகாத்து வைத்திருக்கும் ஒரு முக்கிய விடயமாகவும் பள்ளிக் கூடம் காணப்படும். அதனைப் பலர் தமது அனுபவங்களுக்கூடாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். தலைசிறந்தவர்கள் எனப் போற்றப்பட்டவர்கள் பலரது வாழ்வில் பள்ளிகளும் அங்கு கற்பித்த ஆசிரியர்களும் ஏற்படுத்திய தாக்கங்களே அவர்களை உச்சத்தைத் தொட வைத்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஒருவனுக்கு முன்னேற்றகரமான எண்ணங்களை, கற்பனைகளை உருவாக்குவதாகக் கல்விச் சாலைகள் அமைந்திருக்க வேண்டும். அங்கு அவன் காணுகின்ற கனவுகள் யாவும் அவன் வாழ்வில் மெய்ப்பட வேண்டும். அவை அவனைச் செம்மைப்பட வைக்க வேண்டும்.

உனது பள்ளிக் கூடம் எப்படி இருக்க வேண்டும் என நீ விரும்புகிறாய்? என்று கிராமத்துப் பாடசாலை ஒன்றில் கற்றுத் தேர்ந்த ஒரு மாணவனிடம் கேட்டேன்.

இந்த உலகத்துக்குப் பல நல்ல ஒழுக்கமுள்ள மனிதர்களை உருவாக்கும் பயிற்சிக் கூடமாகப் பள்ளிகள் இருக்க வேண்டும். அவை முற்போக்குச் சிந்தனைகளை விதைப்பதாகவும் அவன் நல்ல மனிதனாகச் சமூகத்தில் வாழ வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும். அங்கே மகிழ்ச்சியோடு பணியாற்றுபவர்களாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட சிறப்புகளைக்கொண்டதொரு கூடமாகப் பள்ளிகள் இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்.

எனது பள்ளியைச் சுற்றி மரங்களும் செடிகளும் நிறைந்த பூந்தோட்டம் இருக்க வேண்டும். ஓடி விளையாட விசாலமானதொரு மைதானம் இருக்க வேண்டும். மொத்தத்தில் குப்பை கூழமற்ற தாகப் பள்ளிகள் இருக்க வேண்டும்.

மாணவர்களுக்குக் கல்வியைப் புகட்டும் பாடசாலையாக மட்டும் பள்ளிகள் இருக்காமல் அவர்களைச் சமூகத்துக்கு உதவுபவர்களாகவும் சமூகத்தைத் தூக்கி நிறுத்துகின்ற தூண்களாகவும் உருவாக்கும் ஒரு தொழிற்சாலையாக இருக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

பலர் பலவிதமாகத் தாம் படித்த பள்ளிக் கூடம் பற்றிய பதிவுகளை விட்டுச் சென்றாலும் எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் பார்வை பின்வருமாறு இருக்கக் கண்டேன். அதனைத் தனது முகநூலில் பதிவிட்டு மீள எண்ண உதவியவர் நண்பர் சிவராஜ்.

வாழ்க்கையில் என்னைக் கனவில் ஆழ்த்திய முதல் இடம் நான் படித்த பள்ளி என்று சொல்ல வேண்டும். வகுப்பறைகள் அல்ல, பள்ளி! பள்ளியின் மீது நான் கொண்டிருக்கும் கவர்ச்சி காலப்போக்கில் அழுத்தம் பெற்றுவருகிறது. என் நினைவுகளிலிருந்து அதைப் பிரிக்க முடிவதில்லை. அது மிகப்பெரிய கட்டிடம். கம்பீரமான முகப்பு. உச்சி மீது அழகான கூண்டு. கூண்டின் மீது திசைகளைச் சுட்ட காற்றில் சுழலும் அம்புக்குறி. அகலமான வராண்டாக்கள். பிரம்மாண்டமான தூண்கள். வெவ்வேறு மட்டங்களில் விரிந்து கிடக்கும் மைதானங்கள். ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு இறங்கப் படிக்கட்டுகள். மரங்கள். வேம்பு,மா, புன்னை என்று பல. காலையிலும் மாலையிலும் இன்றும் நாள் தோறும் அங்கு போய்வருகிறேன். வேப்பமரங்களை ஒரு நாள் பார்க்கவில்லை என்றாலுங்கூடக் குறையாக இருக்கிறது. – சுந்தர ராமசாமி

கல்விக் கூடங்கள் வெறுமனே புத்தகக் கல்வியை மட்டும் புகட்டுகின்ற ஒரு இடமாக இல்லாது ஒருவனை நல்வழிப் படுத்த உதவுவதாக அனுபவக் கல்வியையும் சேர்த்து அவனுக்கு அளிக்க வேண்டும் என்பது எனது வாதம். அதனால்தான் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று மாணவர்களோடு பகிர்வுகளை மேற் கொள்ளுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். கனவுகள் மெய்ப்பட ஒருவனுக்கு புத்தகக் கல்வியைவிட அனுபவக் கல்வியே அதிகம் தேவைப் படுகிதென்பதே எனது கருத்து. புதிய இடங்களைச் சென்றடைய புத்தகக் கல்வியை விட அனுபமே அதிகம் வழிகாட்டுகிறது. பொதுவாகப் பயணக்கட்டுரைகள் தரும் படிப்பினையும் அதுவே. ஒருவனின் அனுபவ அறிவே அதனூடாக முதன்மைப்படுத்தப் படுகிறது.

குறிப்பாகப் பாடசாலைகளில் ஆய்வு கூடங்களை அமைப்பதும் கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்துவதுவும் இதன் அடிப்படையிலே தான் என்பது எனது கருத்து. பொதுவாக அனுபவக் கல்வி என்றால் என்ன? புலன்களினூடாக விடயங்களை உணர்த்துவது மட்டுமல்லாது அதனூடாக அவதானத்தை ஏற்படுத்தி அது தொடர்பான செயற்பாடுகளை அதிகரிப்பது என்று சொல்லப்படுகிறது.

கல்விபற்றிய எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் இன்னும் ஒரு அனுபவப் பதிவையும் பின்வருமாறு முகநூலில் கண்டேன்.

அறியாமை பற்றிய அறிவு துளிர்விடத் தொடங்கியபோது மனத்தில் கவிந்தது துக்கம். விலைமதிப்பற்ற இந்தத் துக்கம், காலப்போக்கில் வளர்ந்து கல்வியின் மதிப்பை உணரச் செய்ததுடன் 'சுயகல்வி' என்ற வாசலை எனக்கு ஒருக்களித்து வைத்தது. சுயகல்வி என்ற வாசல் திறந்தபோது வாழ்க்கைக்கும் எனக்குமான உறவில் ஒரு குணவேறுபாடு தோன்றத் தொடங்கிற்று. வாழ்க்கையே ஒரு பள்ளி என்பதும் சகமனிதன் மூலமாகவும், புத்தகங்கள் வாயிலாகவும் எண்ணற்ற அறிவுகளை முடிவின்றிப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு இருப்பதும், தொடர்ந்து கற்றுக் கொண்டு வந்தாலும், 'கற்றது கைமண் அளவ் கல்லாதது உலகளவு' என்ற நிலையே தொடரும் என்பதும் தெரியவந்தது. கல்வி மீதான என் உறவும் அக்கறையும் கல்லாத கல்வி அளித்த துக்கத்திலிருந்து பிறந்தவை.

– சுந்தர ராமசாமி

அனுபவங்களை அனுபவங்களாகவும், அனுபவங்களுக்கூடாகவும் கற்றுக் கொடுக்க வேண்டும் என அண்மைக் காலத்தில் அரசு பல முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது.இருந்தும் நடைமுறையில் அது எந்த அளவுக்குச் சாத்தியப்பட்டிருக்கிறதென்பது கேள்விக்குரிய விடயம்.

## இந்தவார ராசிபலன் 12.02.2023 - 18.02.2023

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : சப்தமி



பெப்ரவரி 12 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - தை 28




சொத்து விவகாரத்தில் எதிர்பார்த்த வெற்றிகளை அடைவீர்கள். சங்கடங்கள் தோன்றும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். தொழிலில் இருந்த தடைகள் அகலும். செலவு அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்பட நன்மை உண்டாகும். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். எதிர்பாராத சங்கடம் தோன்றும். அதன்பின் எதிர்பார்ப்பு நிறைவேறும. தொழிலில் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர். குடும்பத்தின் நலனுக்காக செலவு செய்வீர்கள்.




லாப குருவால் புதிய முயற்சிகள் விறுவிறுப்பாக நடந்தேறும். யோசித்து செயல்பட்டு லாபம் காண்பீர்கள். ஆறாமிட கேதுவால் ஆற்றல் அதிகரிக்கும். எதிரிகள் விலகிச் செல்வர். செயல்களில் கவனம் தேவை. பத்தாமிட சூரியனால் திங்கள் முதல் செல்வாக்கு உயரும். பணியில் இருந்த பிரச்னைகளை சரிசெய்வீர்கள். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். லாப குருவால் எதிர்பார்த்த வருவாய் உண்டாகும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் முடிவிற்கு வரும். வெளிநாட்டிற்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.




தட்சிணாமூர்த்தியை வழிபட தடைகள் விலகும். எண்ணங்கள் நிறைவேறும் வாரம் இது. நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். பாக்கியஸ்தான சுக்கிரனால் எதிர்பாராத வரவுகளால் உற்சாகம் அதிகரிக்கும். அரசு வழியிலான முயற்சி நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சி எளிதாக நிறைவேறும். பிள்ளைகளுக்காக செலவு அதிகரிக்கும். அவர்களால் பிரச்னையும் ஏற்படலாம். நெருக்கடி ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். உடல்நலனில் கவனம் தேவை. லாபம் அதிகரிக்கும்.




குரு பகவானின் பார்வைகளால் உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். நினைத்ததை சாதிப்பீர்கள். உங்கள் செயல்களில் வேகம் அதிகரிக்கும். குடும்ப நலனில் அக்கறை கூடும். புதிய பொறுப்புகள் உண்டாகும். செயல்களில் வேகம் இருக்கும். பொருளாதார நிலை உயரும். ஒரு சிலர் வீடு வாகனம் என்று வாங்குவீர்கள். தொழில், உத்தி யோகத்தில் உங்களுடைய விருப்பம் நிறைவேறும். திருமணம் கைகூடும்.




மூன்றாமிட கேதுவும், ஆறாமிட சனியும் உங்கள் நிலையை உயர்த்துவார்கள். நீங்கள் நினைத்ததை அடைவீர்கள். ஞாயிறு வரை ராசிநாதன் அருளால் தெளிவாக செயல்பட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். அரசியலில் ஈடுபட்டுள்ளோர் செல்வாக்கடைவீர்கள். நெருக்கடிகள் அதிகரித்தாலும் நினைத்ததை சாதிப்பீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். புதிய நண்பர்களால் ஆதாயம், எண்ணம் நிறைவேறும்.




உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். ஞாயிறு முதல் வருமானம் அதிகரிக்கும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். திங்கள் முதல் ஆறாமிட சூரியனால் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். உங்கள் நீண்ட நாள் பிரச்னை ஒன்றை செலவுகளின் வழியே முடிவிற்கு கொண்டு வருவீர்கள். ஞாயிறு திங்களில் குடும்பத்தில் சுபச்செலவுகள் உண்டாகும். புதிய இடம் வாங்கும் எண்ணம் நிறைவேறும். திட்டமிட்டு செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள்.




வாரத்தின் முதல் இரண்டு நாட்களும் எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். செயல்களில் முன்னேற்றம் உண்டாகும். நண்பர்கள் உதவியால் சங்கடங்களை சமாளிப்பீர்கள். சப்தம ஸ்தான ராகுவால் எதிர்பாலினர் உங்களுக்கு தவறான வழி காட்டுவார்கள். சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடாமல் இருப்பது உங்களுக்கு நன்மையாகும். உங்கள் முயற்சிக்கேற்ப வருவாய் உண்டாகும்.




உங்கள் முயற்சிகளில் எளிதாக வெற்றிகளைக் காண்பீர்கள். சனி ஞாயிறில் செலவுகள் அதிகரிக்கும், திங்கள் முதல் தொழில் உத்தியோகத்தில் உங்கள் எண்ணம் நிறைவேறும். ஒரு சிலருக்கு உத்தியோகத்தில் விரும்பிய மாற்றம் உண்டாகும். செல்வாக்கு உயரும்.பிரதான கிரகங்கள் உங்களுக்கு சாதகமாக இருப்பதால் உங்கள் முயற்சிகள் லாபமாகும். எதிரிகள் பின்வாங்குவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சுபச்செலவுகள் தோன்றும்.




குருவின் பார்வை பலத்தால் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். மனதில் தெளிவு பிறக்கும். செயல்களில் வெற்றி அடைவீர்கள். பொருளாதார நிலை உயரும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும் என்றாலும் மூன்றாமிட சூரியனால் முயற்சிகள் வெற்றியாகும். உங்கள் செயல்களில் லாபம் காண்பீர்கள். எதிரிகள் விலகிச்செல்வார்கள். சந்திரனின் சஞ்சார நிலையால் திங்கள் மாலை வரை வருமானம் அதிகரிக்கும்.




கடந்த வார சங்கடங்கள் விலகி நிலைமை சீராகும். திட்டமிட்டு செயல்படுவதால் முயற்சிகள் உங்கள் வெற்றியாகும். பொருளாதார நிலை உயரும். நீண்ட நாட்களாக வராமல் இருந்த பணம் வந்து சேரும். உடல்நிலை சீராகும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு ஏற்றமடைவீர்கள். செயல்களில் இருந்த சிரமம் நீங்கும். பிரச்சினைகளைக் கண்டறிந்து சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும்.





உங்கள் செயல்களில் சில சங்கடங்கள் தோன்றும். அதன்பின் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் லாபமாகும். ஒரு சிலருக்கு புதிய சொத்து சேர்க்கை உண்டாகும். வரவேண்டிய பணம் வந்து சேரும். இந்த வாரத்தில் உங்கள் செயல்களில் கவனமும் எச்சரிக்கையும் தேவைப்படும். திட்டமிட்டு செயல்படுவதால் பொருளாதார நிலை உயரும். நெருக்கடிகள் விலகி உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வாரத்தின் முதல் நாளில் நெருக்கடிகளை சந்தித்தாலும் முன்னேற்றம் தோன்றும்.




முயற்சிகள் எளிதாக நிறைவேறும். அரசு வழியிலான செயல்களில் ஆதாயம் காண்பீர்கள் என்றாலும் வார்த்தைகளில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை ஒத்தி வைப்பது நன்மையாகும்.வாரத்தின் முதல் இரண்டு நாட்களும் புதிய முயற்சிகள் இழுபறியாகும். அலைச்சல் அதிகரிக்கும். அதன்பின் உங்கள் செயல்கள் வெற்றியாகும். அரசு வகையில் இருந்த நெருக்கடிகள் விலகும். முயற்சிகள் வெற்றியாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வாக்குஸ்தான ராகுவால் வார்த்தைகளில் எப்போதும் கவனம் தேவை.செயல்களில் சங்கடம் உண்டாகும். கவனமுடன் செயல்படுங்கள்.

# ஒன்றுபடவேண்டிய நேரத்தில் தேர்தல் பிரச்சார கசப்புணர்வு



சென்னை மடல்

-பகவான் சிங்-

இலங்கை உள்ளாட்சித் தேர்தல்களை மார்ச் 9 அன்று நடத்தும் தேர்தல் கமிஷனின் முடிவில் தலையிட முடியாது என்று உச்ச நீதி மன்றம் தெரிவித்து விட்டதையடுத்து, இலங்கை, ஜனநாயகத்திற்கு மிகவும் முக்கியமான இந்தத் தேர்தலைச் சந்திக்கத்தான்போகிறது. ஆனால், இது பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்பதையும் மறுப்பதற்கில்லை. 10 பில்லியன் ரூபாய்கள் செலவாகக் கூடிய இந்தத் தேர்தலை ஆறு மாதத்திற்கு முன்னால், பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி ரணில் விக்கிரமசிங்க அரசு தள்ளி வைத்தது. 1948இல் ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்தரம் பெற்றதிலிருந்து எப்போதுமில்லாத பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துவரும் இலங்கையில், தன் மக்களுக்குத் தேவையான உணவைக்கூட வழங்க முடியாத நிலையில், இவ்வளவு பெரிய

தொகையைத் தேர்தலுக்கு ஒதுக்குவது என்பது அரசுக்கு இயலாத காரியமே. குழந்தைகள் பசியால் வாடும் கொடுமையான சூழலில், குடும்பத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளின் கல்விக்கும் நிதி வசதி இல்லாமல் ஒரு குழந்தையை மட்டுமே கல்விகற்க அனுப்புகிறார்கள் பெற்றோர் என்று இலங்கையிலும் வெளி நாடுகளிலும் வெளியாகும் ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

தங்கள் நிர்வாகத்துக்குட்பட்ட மக்களுக்கு நிதியுதவி அளிக்கும் அதிகாரமோ, நிர்வாக அதிகாரமோ போதுமான அளவில் இல்லாத இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குப் புதிதாகத் தேர்தல் நடத்தி என்ன பெரிய லாபம் ஏற்பட்டுவிடப் போகிறது? நமது மாண்புமிகு முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள், ஒன்பது ஆண்டுகளுக்குமுன் ஓர் ஊடகத்துக்கு அளித்த பேட்டி எனக்கு இன்னும் நினைவில் இருக்கிறது. வடக்கு மாகாணத்தின் அப்போதைய முதல்வராக இருந்த அவருக்கு எந்த நிதி அதிகாரமும் இல்லை என்றும், கொழும்பால் நியமிக்கப்பட்ட ஆளுநர் மற்றும் மாகாண சபையின் முதன்மைச் செயலர் ஆகியோரே நிர்வாகத்தை நடத்திவருவதாகவும், போரின் வடுக்களிலிருந்து மீண்டுகொண்டிருக்கும் அப்பிராந்தியத்தின் இயல்பு வாழ்க்கையை இராணுவமே கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாகவும் அவர் வேதனையுடன் குறிப்பிட்டார். இப்போது மட்டும் நிலைமை மாறிவிட்டதா, என்ன? நான் அப்படி நினைக்கவில்லை. மாறாக, கடந்த சில ஆண்டுகளில், பட்டினிக் குறியீடு பல முறை உயர்ந்து நிலைமை மேலும் மோசமாகத்தான் ஆகியுள்ளதைக் காண்கிறோம்.

எனவே, முதலில் நமது அரசியல் சாஸனத்தின்கீழ் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்தி, நாட்டை இராணுவத்தின் கெடுபிடியிலிருந்து மீட்டு, சர்வதேச செலாவணி நிதியத்தால் உறுதியளிக்கப்பட்டுள்ள 2.9 பில்லியன் டொலர் உதவியை உடனடியாக வழங்க ஒப்புக்கொள்ளவைக்கும் பணியைத் துரிதப்படுத்தி, நாட்டை மீண்டும் வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டுவரும் ரணிலின் முயற்சிக்கு உதவலாமே! சீனா தனக்கான இலங்கையின் கடனை மாற்றியமைப்பதைத் தாமதப்படுத்தி, சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கான கடனைத் திரும்பச் செலுத்துவதற்கான காலக்கெடுவை இரண்டாண்டுகள் நீட்டிப்பது குறித்துப் பேசிவருவதால், சர்வ தேச செலாவணி நிதியம் உறுதியளித்த தொகையை விடுவிப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. இந்தத் தடைகளெல்லாம் விலகி, பொருளாதார மீட்பு எஞ்சினை ஜனாதிபதி விரைவில் முடுக்கிவிடுவார் என்று நான் நம்புகிறேன்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் பொது நிதி பற்றிய பெரிய விஷயங்களை அதிகம் அறியாத ஒரு சாமான்யனாக, ஜனாதிபதியும் அவரது ஆலோசகர்களும் தங்களது முன்னுரிமைகளைக் குழப்பிக்கொண்டு, தவறான பாதையில் செல்வதைக் காண என்னாலேயே முடிகிறது. எதிர்க்கட்சிகளும் இதே தவறான ஆட்டத்தைத்தான் ஆடுகின்றன - உள்ளாட்சித் தேர்தல்களை அரசு வேண்டுமென்றே தாமதப்படுத்துவதாகக் குற்றம் சாட்டி, இனி விரைவில் தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தன. 2018இல் நடந்த தேர்தலில், ராஜபக்ஷ குடும்பத்தினரின் சிறிலங்கா பொதுஜன பெரமுன(எஸ் எல் பி பி) கட்சி, 340 உள்ளாட்சி இடங்களில் அறுதிப் பெரும்பான்மை பெற்று பெருவெற்றி பெற்றிருக்கும் சூழலில், இந்த அடிமட்ட நிலையில் ஜனநாயகத்தை உயிர்த்தெழச் செய்ய, எதிர்க்கட்சிகள் மிகுந்த அவசரம் காட்டிவருகின்றன.

இந்த அரசியல்வாதிகள், நாட்டுக்கும், துன்பப்படும் அதன் மக்களுக்கும் நன்மை எது என்பதைவிட, தங்கள் சுய நன்மையைத் தான் பெரிதாகக் கருதுகிறார்கள். எனவே, ஜனாதிபதியின் முன்னுள்ள பொருளாதார மீட்பு என்ற பெரும் பொறுப்பை நிறைவேற்ற உதவக்கூடிய, 13ஆவது சட்டத்திருத்தம் உள்ளிட்ட முக்கிய விவகாரங்களில் நாடாளுமன்றத்தில் ஒருமித்த கருத்தை எட்டும் ஒற்றுமையைக் கொண்டுவருவது போன்ற முக்கிய அரசியல் விவகாரங்களில் எதிர்க் கட்சி அரசியல் தலைவர்கள் கவனம் செலுத்தத் தவறுகிறார்கள்.

நீங்கள் ஓர் அந்நியராக, சர்வதேச செலாவணி நிதியம் அல்லது கடன் வழங்கும் ஏதோ ஒரு நாட்டின் அதிகாரத்தில் இருந்தால், இச் சமயத்தில், உள்ளாட்சித் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபாய் செலவு செய்யவிருக்கும் இலங்கையின் முடிவு பற்றி என்ன கூறுவீர்கள்? ஏற்கெனவே கடந்த ஆண்டு, ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இத்தேர்தல், இன்னோர் ஆறு மாதம் ஒத்திவைக்கப்பட்டால், வானம் இடிந்தா விழுந்துவிடும்? கொழும்பின் அரசியல் ஸ்திரமற்ற நிலை மற்றும் நாட்டு நலனை

விடச் சுய நலத்துக்கு முன்னுரிமை தரும் மூத்த அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற தன்மை இவற்றால் நம்பிக்கை இழந்திருக்கும் சர்வதேச நிதியுதவி நாடுகள் மற்றும் அமைப்புகளின் நம்பிக்கையைப் பெற, சரியான அரசியல் சூழலையும் ஒற்றுமையையும் எட்ட நாம்

## யாழ். வந்த முருகனும் - அண்ணாமலையும்: துருப்புச் சீட்டாகும் ஈழப் பிரச்னை!




முயற்சிக்க வேண்டிய தருணம் இது. இந்தப் பொருளாதார நெருக்கடியை எதிர்த்துப் போராட, ஒரு வலுவான தேசத்தை உருவாக்க அனைவரும் ஒன்றுகூடவேண்டிய இந்தத் தருணத்தில், இந்தத் தேர்தல் பிரச்சாரக் கசப்புணர்வு பிரிவினைகளையே அதிகப்படுத்தும். இது நாட்டைக் கட்டமைக்கும் பணியிலிருந்து நம்மைத் தடம் மாறச் செய்யும் என்று நான் மிகுந்த கவலைகொண்டுள்ளேன்.

சரி, இப்போது நான் நிகழ்கால நடைமுறை உலகிற்கு வருகிறேன். மார்ச் 9 தேர்தலுக்காக அனைத்துக் கட்சிகளும் தங்கள் வேட்பாளர்களை நிறுத்திவிட்டனர். தலைவர்கள், உரத்த பிரச்சாரங்களைத் தொடங்கி விட்டனர். மக்களும், சுவரொட்டிகள், கோஷங்கள், மேடை கர்ஜனைகள் இவற்றுடன் தங்களின், தங்கள் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்திபெற்ற தங்கள் வாக்குகளைச் செலுத்துவதற்கு முன்னர், செலவுக்குச் சிறிதளவு பணம் ஆகிய கொண்டாட்டங்களுக்குத் தயாராகி வருகின்றனர். யதார்த்த நிலையுடன் நாமும் சேர்ந்து பயணிப்போம் - தேர்தல் நடக்கவிருக்கின்றன, சமூக-அரசியல்-பொருளாதார ரீதியாக நமது எதிர்காலம் மேம்படவும் முக்கியமாக, பொறுப்பான தலைவர்களால் வழிநடத்தப்படும் அறிவார்ந்த, விஷயம் தெரிந்த மக்கள் நிறைந்த வலுவான நாடாக நம்மை, நமக்குக் கடன் வழங்குவோரின்முன் நிலைநிறுத்திக் கொள்ளவும் இந்தத் தேர்தல் உதவட்டும். எனது அன்புக்குரிய வாசகர்களில் சிலருக்கு எனது கருத்து மனதுக்குப் பிடிக்காததாகவும் முட்டாள்தனமாகவும் கூடத் தோன்றலாம். ஆனால், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை எது என்று மனதில் உள்ளவற்றை வெளிப்படையாகக் கூறுவது என் கடமை. இதில் எனக்கு எந்தச் சுயநலமோ லாபமோ இல்லை. கேட்போரது மனங்களைக் கவரும் வகையில் பேசுவது அரசியல்வாதியின் பணி. சமூகப் பொறுப்புள்ள, நேர்மையான ஒரு பத்திரிகையாளனின் பணி அதுவன்று. நான் கடந்த 40 ஆண்டுகளாக அப்படித்தான் வாழ்ந்துள்ளேன். என் இறுதி மூச்சுவரை அப்படியே வாழ்வேன்.

சனிக்கிழமையன்று, யாழ்ப்பாணத்தில் ஒரு வரலாற்று நிகழ்வைக் கண்டிருப்பீர்கள். இந்தியாவின் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் லோகநாதன் முருகன், பாஜக தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை குப்புசாமியுடன் இணைந்து, யாழ்ப்பாணக் கலாசார மையத்தை இலங்கை மக்களுக்கு அர்ப்பணித்து வைத்தார். இந்த மையம், இந்திய அரசின் மானியத்துடன் கட்டப்பட்டது. 2015 மார்ச் மாதம் பிரதமர் நரேந்திர மோடி தனது இலங்கைப் பயணத்தின் போது இதற்கு அடிக்கல் நாட்டினார். அவரே இதைத் தொடங்கிவைப்பார் என்றும் எதிர்பார்க்கப்பட்டு வந்த நிலையில், கோவிட் பெருந்தொற்று காரணமாக அது சாத்தியப்படவில்லை என்று கூறப்பட்டது. அண்மையில், ஜனவரியில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கர் இலங்கைக்கு வந்தபோது தொடக்க விழா நடைபெறும் என்று நம்பட்டது. ஆனால், அவரது பல்வேறு அலுவல் சுமை காரணமாக அதுவும் நடக்கவில்லை. அதோடு, என்னுடைய குறும்புக்காரப் பத்திரிகையாளனின் பார்வையில் ஏதேதோ தோன்றுகிறது. அதற்காக என்னை மன்னிக்கவும்.

ஜெய்ஷங்கர் இந்த விழாவை நடத்தி வைத்தால் அது வெறும் அண்டை நாடுகளுக்கிடையே நடந்த ஒரு விஷயமாகவே நின்றுவிடும். சிறிது ப்ரம்மாண்டமாக்கினால் இலங்கையின், அதிலும் தமிழர்களின் மிகச் சிறந்த கலாசாரத்தின் புகழைப் போற்றவும், அதை ஒரு நிரந்தரப் பெருமைக்குரிய சின்னமாக ஸ்தாபிக்கவும் நடத்தப்பட்ட நிகழ்வாக நின்றுவிடும். முருகனும் அண்ணாமலையும் சேர்ந்து நடத்தினால், இந்தச் சிறப்புகளோடு இன்னொரு முக்கியத்துவமும் அதில் அடங்கும். திராவிடத் தமிழகத்தைச் காஷாயமாக்கும் பா.ஜ.க-வின் மாபெரும் அரசியல் யக்ஞத்திற்கு யாழ் விஜயம் ஒரு சத்து டானிக்காக உதவும். இது என்னுடைய கணிப்பல்ல் பா.ஜ.க - வினரின் இனிய கனவு. திருக்கேதீஸ்வரத்தானின் அருளால் அது பலிக்கட்டும், அதற்கு என் வாழ்த்துகள். ஆனால், இதில் ஒரு கசப்பான உண்மை அடங்கி உள்ளதென்பதை அவர்களுக்கும் உங்களுக்கும் எடுத்துக்காட்ட வேண்டியது என் கடமை. இலங்கைக்கு விமானம் ஏறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், பத்திரிகையாளர்களிடம் பேசிய அண்ணாமலை, அரசின் விருந்தினராக அமைச்சர் முருகன் இலங்கை செல்வார் என்றும், தான் இலங்கையின் சில கட்சிகளின் அழைப்பின்பேரில் கூடவே செல்வதாகவும் கூறினார். “இந்தத் தொடர் தொடர்புகள் சிறந்த பலன்களை நல்கி, நமது இந்திய மீனவர்களுக்கு நன்மை பயக்கும் என்று நம்புகிறோம்” என்றார் அவர். இந்த விஷயத்தை இப்போதைக்கு இத்துடன் விட்டுவிடுகிறேன். காரணம், வரும் நாட்களில் தனியாக, விவரமாக மீனவர் விவகாரம் குறித்து உங்களுடன் உரையாட விரும்புகிறேன். வரும் 2024 மே மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளில் (முடிந்தால் பாண்டிச்சேரியின் ஒரு தொகுதியும் சேர்த்து) குறைந்தது 10 இடங்களில் வெற்றி பெறவேண்டும் என்றும், 2026 சட்டமன்றத் தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என்றும் மாபெரும் இலக்கை பாஜக கொண்டுள்ளது. 55 ஆண்டுகளாக ‘திராவிடம்’ என்ற சித்தாந்தத்தில் ஊறிப்போய், ஹிந்தி-வடக்கு-காவி வெறுப்பாளர்களாக இருக்கும் தமிழர்களின் நெஞ்சங்களை ‘தேசியவாத நரேந்திர மோடி’-யின் பக்கம் ஈர்க்க - உத்தி வகுக்க - பாஜக தலைவர்கள் ஒன்று கூடியபோது, அவர்களுக்கு ஈழப் பிரச்னை ஒரு சிறந்த துருப்புச் சீட்டாகத் தோன்றியிருக்கிறது. இந்த ‘உண்மை’யை விடப் பொய்யான பிம்பம் எதுவும் இருக்க முடியாது. இது, நொண்டிக் குதிரையைப் பந்தயத்தில் இறக்குவதற்கு ஒப்பாகும். ‘தமிழக அரசியலில் ஈழம் பங்களிக்கும்’ என்பது உண்மையானால், முத்துவேல் கருணாநிதி, ஜெயலலிதா அம்மையார் அல்லது குறைந்த பட்சம் மு. க. ஸ்டாலினுக்குப் பதிலாகவாவது வைகோ முதல்வராகியிருப்பார். தமிழகத் தேர்தல் வாக்குச் சாவடிகளில் ஈழப் பிரச்னை, பரிவுடன் நோக்கப்பட்ட சமூக - அரசியல் விவகாரமாக இருந்தது, மே 1991இல் சிறிபெரும்புதூரில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோதே முடிந்து விட்டது. இருந்தாலும், முருகன், அண்ணாமலை மற்றும் அவர்களது காவிப்படைக்கு எனது வாழ்த்துகள். தங்களின் யாழ் பயணப் புகைப் படங்களை வரும் நாட்களில், குறிப்பாகத் தேர்தல் பிரச்சாரக் களங்களில் அவர்கள் தமிழகம் முழுவதும் சுவரொட்டிகளாகப் பரப்புவது நிச்சயம். உங்களுக்காகடிபன் காத்திருக்கிறது.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# இரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உரைகளில் ‘13’ என்று சொல்வதை தவிர்த்த ஜனாதிபதி



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை இரு வருடங்களில் கட்டங்கட்டமாக முழுமையாக அரசாங் கம் நடைமுறைப்படுத்தும் என்று யாழ்ப்பாணத்தில் தைப்பொங்கல் விழாவில் வைத்து அறிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு பிறகு ஒரு மாதம் கூட கடந்துவிடுவதற்கு முன்னதாக நாட்டு மக்களுக்கு உரை யாற்றுவதற்கு கிடைத்த இரு தேசிய முக்கியத்துவமுடைய சந்தர்ப்பங்களில் அது பற்றி மீண்டும் எதுவும் குறிப்பிடு வதை தவிர்த்துக்கொண்டார். ஒன்று இலங்கையின் 75 வது சுதந்திர தினத்தன்று மாலையில் தொலைக்காட்சி மூலம் நிகழ்த்திய உரை. மற்றையது பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக தொடக் கிவைத்து நிகழ்த்திய அரசாங்கத்தின் கொள்கை விளக் கவுரை.

ஜனாதிபதியின் தைப்பொங்கல் அறிவிப்பை அடுத்து உடனடியாகவே கடும்போக்கு சிங்கள தேசியவாத சக்தி கள் போர்க்கொடி தூக்க ஆரம்பித்துவிட்டன. இலங்கை அதன் வரலாற்றில் கண்டிராத படுமோசமான பொரு ளாதார நெருக்கடிக்கு காரணமான ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் செய்த கிளர்ச்சியை அடுத்து சில மாதங் களாக ‘ தலைமறைவாக” இருந்த இந்த சக்திகள் மீண்டும் வெளியில் வருவதற்கு வாய்ப்பான தருணத்துக்கு காத்தி ருந்தன. ஜனாதிபதியின் அறிவிப்பு அவர்களுக்கு எதிர் பார்த்திராத ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

இந்த சிங்கள தேசியவாத சக்திகள் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும் ஆபத்து ஏற்படும் என்று எச்சரிக்கை செய்வதுடன் அவ்வாறு நடைமுறைப்படுத்துவதற்கான ஆணை ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு கிடையாது. ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் மக்களிடம் ஆணையைப் பெற்ற பின் னரே அதை அவரால் செய்யமுடியும் என்றும் கூறின.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முன்னெடுக்கப்பட்ட முன்னைய சகல முயற்சிகளுக்கும் எதிராக கிளம்பிய தென்னிலங்கை சக்திகளின் ‘முன்னரங்கப் படையாக’ விளங்கிவந்திருக்கின்ற வரலாற்றைக் கொண்ட மகாசங்கமும் விக்கிரமசிங்கவின் அறிவிப்பை கடுமையாக எதிர்க்கின்றது. முன்னைய ஜனாதிபதிகள் 13 வது திருத்தத்தை முழுமையாக நடை முறைப்படுத்தவில்லை. அவர்களைப் போன்றே இது விடயத்தில் நீங்களும் நடந்துகொள்ள வேண்டும் என்று அவரிடம் பௌத்த பீடாதிபதிகள் கூட்டாக கடிதமூலம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

விக்கிரமசிங்க கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்துக்கு வெளியே ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குமார் பொலிசாருடன் மல்லுக்கட்டிய வண்ணம் 13 வது திருத்தத்தின் பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

13 வது திருத்தத்தை ஆதரிப்பதாக ஏற்கெனவே கூறிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி போன்ற கட்சிகளும் தற்போது கிளம் பியிருக்கும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ‘அடக்கிவாசிக்கத்’ தொடங்கியிருக்கின்றன.

ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கள பௌத்த சக்திகளையும் மகாசங்கத்தையும் மீறி இலங்கையில் எதுவும் செய்யமுடியாது என்று கூறினார். தானும் ஆட்சியதிகாரத்தில் இருந்தபோது 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்று கூறிய அவர் அவ்வாறு நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்படக்கூடிய எந்த முயற்சியும் சிங்கள பௌத்த பெரும்பான்மையினரிடம் இருந்து அரசாங்கத்தை அன்னியப்படுத்தும் என்று எச்சரிக்கை செய்தார். தீர்வு காண்பதற்கு பெருவாரியான பிரச்சினைகள் இருக்கும் இன்றைய கட்டத்தில் இந்த திருத்தத்தை எதற்காக விக்கிரமசிங்க கையில் எடுத்தார் என்று தன்னால் விளங்கிக்கொள்ளமுடியவில்லை என்றும் சிறிசேன சொன்னார்.

முதலில் ஜனாதிபதி சுதந்திரதினத்துக்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு குறித்து இணக்கப்பாட்டைக் காண வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளியிட்டு கடந்த டிசம்பரில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் மகாநாட்டைக் கூட்டினார். அந்த முதற்சுற்று மகாநாட்டிலும் பிறகு தமிழ் கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய சந்திப்புக்களிலும் காணப்பட்ட இடைக்கால இணக்கப்பாடுகளை நடை முறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தவறியதால் தமிழ்த் தரப்பு பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதை தவிர்த்தது. அதனால் சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வைக் காணும் ஜனாதிபதியின் கனவு பலிக்கவில்லை.

ஜனவரி 26 ஆம் திகதி பாராளுமன்ற கட்சிகளின் இரண்டாவது சுற்று மகாநாட்டைக் கூட்டிய ஜனாதிபதி அங்கு 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் தனது யோசனைக்கு எதிர்ப்பை வெளியிட்ட உறுப்பினர்களுக்கு பதிலளிக்கும்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தனக்கு இருக்கிறது என்றும் அந்த திருத்தம் 37 வருடங்களாக அரசியலமைப்பின் அங் கமாக இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டியதுடன் அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்போவதுமில்லை, ஒழிக்கப்போவதுமில்லை என்ற ஒரு இடைநடு நிலைப் பாட்டில் தொடர்ந்து இருக்கமுடியாது. அதை ஒழிக்க வேண்டுமானால் அரசியலமைப்புக்கான 22 திருத்தத்தை எவராவது பாராளுமன்றத்தில் தனிநபர் சட்டமூலமாக கொண்டுவரலாம் என்று யோசனையும் கூறினார்.



**இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளுக்கு எதிரான பிக்குமாரின் எதிர்ப்பைப் பொறுத்தவரை 66 வருடங்களுக்கு முன்னர் நிலவிய சூழ்நிலைக்கும் இன்றைய சூழ்நிலைக்கும் இடையில் உள்ள ஒரேயொரு வித்தியாசம் படங்களின் நிறமே தவிர,வேறு எதுவும் மாறவில்லை என்ற கருத்து அந்த படங்களுக்கு மேலாக பதிவாகியிருந்தது.**

இது விடயத்தில் தீர்க்கமான அறிவிப்பொன்றை பாராளுமன்றத்தில் கொள்கை விளக்கவுரையில் செய்வதற்கு வசதியாக கட்சிகள் அவற்றின் யோசனைகளை சுதந்திரதினத்துக்கு முன்னதாக அனுப்பவேண்டும் என்றும் ஜனாதிபதி மகாநாட்டில் கேட்டுக்கொண்டார். ஆனால், எந்த கட்சியும் அவ்வாறு செய்யவில்லை.

இத்தகைய பின்புலத்திலேயே ஜனாதிபதி சுதந்திரதின உரையையும் பாராளுமன்றத்தில் கொள்கை விளக்கவுரையையும் நிகழ்த்தவேண்டியிருந்தது. இரு சந்தர்ப்பங்க ளிலும் அவர் தனது வழமையான பாணி யில் இனப்பிரச்சினைக்கு தீரவு காணவேண்டிய அவசியம் குறித்தும் வடக்கு கிழக்கில் மக்கள் எதிர்நோக்குகின்ற மனிதாபிமா னப் பிரச்சினைகளை தீர்ப்ப தற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய உடனடி நடவடிக் கைகள் குறித்தும் பேசியதைக் காணக்கூடியதாக இருந்தது.



1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து போராட்டம் நடத்திய பிக்குகள்

ஒற்றையாட்சிக்குள் அதிகபட்ச அதிகாரப்பரவலாக் கத்தைச் செய்து இனநெருக்கடிக்கு தீர்வு காணப்படும் என்று கூறிய அவர் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு விசேட அபிவிருத்தி திட்டங் கள் முன்னெடுக்கப்படும். அதிகாரப்பரவலாக்கல் செயன்முறையை உரியமுறையில் நடைமுறைப்படுத்த குறிப்பிட்ட சில சட்டங்களுக்கான திருத்த வரைவுகள் தயாரிக்கப்படும்.

மாகாணசபை மற்றும் மத்திய அரசாங் கத்துக்கு இடையில் ஒருங்கிணைப்பு பணிகளை முறைப்படுத்துவதற்கு மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் எந்தவிதமான மாற்றமும் செய்யப்படமாட் டாது. மத்திய அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் காரண மாக கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் குறைந்துள் ளதாக கூறப்படும் மாகாணங்க ளின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும் என்று விளக் கம் அளித்தார்.

13 வது திருத்த நடைமுறைப் படுத்தல் என்ற சொல்லைப் பயன்படுத்துவதை தனது இரு உரைகளிலும் தவிர்த்துக்கொள்வதில் மிகுந்த எச்சரிக்கையுடன் ஜனா திபதி நடந்துகொண்டார். அரசியலமைப் பில் மூன்றரை தசாப்தங் களுக்கும் அதிகமான காலமாக இருந்து வரும் திருத்தம் ஒன்றின் நடை முறைப்படுத்தல் பற்றி, (ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாது என்பதை தவிர மற்றும் படி எதையும் செய்வதற்கு சகல அதிகாரங்களையும் கொண்டது என்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன வர்ணித்த) நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் இன்று இருப்பவரால் பேசமுடியாத அளவுக்கு எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது.

ஒன்று மாத்திரம் உண்மை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை விக்கிரமசிங்கவினால் தொடர்ந்து முன்னெடுக்கக்கூடியதாக இருக்குமோ இல்லையோ கடும் போக்கு சிங்கள தேசியவாதிகள் மகாசங்கத்தின் உதவியுடன் சமூகங்கள் மத்தியில் குரோதங்களை தூண்டிவிடும் தங்களது நச்சுத்தனமான பிரசாரங் களை மீண்டும் தீவிரமாக முன்னெடுக்கக் கூடிய சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டு விட்டது.

இதை சாத்தியமாக்கியதில் அரசாங்கத்திற்குள் செல்வாக்குடையவையாக விளங்கும் சக்திகளுக்கு முக்கிய பங்கு நிச்சயமாக இருக்கிறது எனலாம். ஜனாதிபதி கூட்டிய மகாநாட்டின் இரு சுற்றுக்களிலும் அவர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான தனது திட்டங்கள் குறித்து விளக்கம் அளிக்கும் வேளைகளிலும் மற்றைய பிரதிநிதி கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற வேளை களிலும் தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தனவோ அல்லது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவோ எது வும் பேசாமல் மௌனமாகவே இருந்தார்கள். எந்த பிரதி பலிப்பையும் வெளிக்காட்டவில்லை.

அதிகாரப்பரவலாக்கல் மூலம் அரசியல் தீர்வைக் காண்பதற்கு தனது சிறிலங்கா சுதந்திர கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என்று முன்னர் கூறிய மைத்திரிபால சிறிசேன இப்போது 13 வது திருத்தம் தொடர்பில் சிங்கள கடும் போக்கு தேசியவாதிகளினதும் மகாசங்கத்தினதும் நிலைப்பாட்டை முழுமையாக ஆதரித்து சபையில் பேசி யதைக் காணக்கூடியதாக இருந்தது. முன்னாள் ஜனாதிப திகள் அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத் தவில்லை என்றாலும் அதற்கு எதிராக பேசியதில்லை. இந்தியாவிடம் இருந்தும் மேற்குலக நாடுகளிடம் இருந் தும் வேண்டுகோள் விடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக ஒரு ஒப் பாசாரத்துக்காகவேனும் அவர்கள் உறுதியளித்தார்களே தவிர எதிர்ப்பை வெளிப்படுத்தியதில்லை. அதற்கு எதி ராக முழுவீச்சில் வெளிக்கிளம்பிய ஒரேயொரு முன்னாள் ஜனாதிபதி சிறினேவேயாவார்.

இன்னொரு முன்னாள் ஜனாதிபதியான திருமதி சந்திரிகா குமாரதுங்க சகல ஜனாதிபதிகளும் இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படாதிருப்பதை உறுதிசெய்து கொண்டார்கள் என்று இந்திய தலைநகரில் வைத்தே ஒரு தடவை குறிப்பிட்டதை நினைவுபடுத்துவது பொருத்தமானது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# காவல் (துறை) இல்லாத காணி நிர்வாகத்தை முழுமையான அதிகாரப்பகிர்வு எனலாமா?

பனங்காட்டான்

இந்தப் பத்தியை எழுத ஆரம்பிக்கும் போது, கடந்த வாரம் இதே பத்தியில் குறிப்பிட்ட இரண்டு விடயங்களை முன்னிறுத்திச் செல்வது பொருத்தம் போல தெரிகிறது.

'சிங்கள் இனவாதிகள், கோதபாயவின் அறிவாளிகள் (வியத்மக), பௌத்த மகா சங்கங்கள் தனித்தனியாக 13ம் திருத்தத்தை அமுல் செய்யக்கூடாதென கூற ஆரம்பித்து விட்டார்கள். இவர்கள் இனி கூட்டாகக் களத்தில் குதிக்க வேண்டியது தான் மிச்சம்" என்று தெரிவித்தது இப்போது நடைமுறைக்கு வந்துவிட்டது.

'13ம் திருத்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டுமென ரணில் உண்மையாகவே விரும்புகிறாரா, அல்லது இதனை பகிரங்கமாகக் கூறி சிங்கள தரப்பின் எதிர்ப்பை லாபமாக்கி, இதற்கு (13ம் திருத்தம்) முடிவு கட்ட விரும்புகிறாரா என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும்" என்று தெரிவித்திருந்த சந்தேகத்துக்கும் விடை கிடைத்துவிட்டது.

இப்போது இன்னொரு அணியும் 13ம் திருத்த நடைமுறைக்கான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. ராஜபக் சக்களின் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிவிப்பில், 13ம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த ரணிலை தாங்கள் ஜனாதிபதியாக்கவில்லையென்று சாடி யுள்ளார்.

கடந்த மாதம் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங் கர் கொழும்பில் ரணிலைச் சந்தித்தபோது 13ம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவேன் என்று அவர் உறுதியளித்ததாக செய்திகள் வந்தன. இதனை உறுதிப்படுத்துவது போன்று தமிழ் தேசிய அரசியல் கட்சிகளைச் சந்தித்த போது அவர்களிடம் ஜெய்சங்கர் ரணிலின் உத்தரவாதத்தை வெளிப் படுத்தியிருந்தார். அதற்காக தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமென்றும் ரணிலை வலியுறுத்த வேண்டு மெனவும் ஜெய்சங்கர் கூறிச் சென்றார்.

ஜனாதிபதி கதிரையில் அமர்ந்துள்ள ரணில் உண்மையாகவும் நேர்மையாகவும் 13ம் திருத்தத்தை செயற்படுத்த விரும்புபவராகவிருந்தால், அதற்கான ஏற்பாடுகளை தமக்கான நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆரம்பித்திருக்கலாம். அவ்வாறு செய்யாது, அதனை முழுமையாகச் செயற்படுத்துவேனென்று சந்தர்ப்பம் கிடைத்த ஒவ்வொரு வெளியிலும் அழுத்திக் கூறி வந்த போது நியாயமான சந்தேகம் பல தரப்பிலும் ஏற்பட்டது.

சிங்கள பௌத்த இனவாதிகளை உசுப்பேற்றி 13ம் திருத்தத்துக்கு எதிராக களமிறக்குவதே அவரது நோக்க மாக இருந்துள்ளது இப்போது அம்பலமாகியுள்ளது. 'வியத்மக' பிரமுகரான கடற்படை முன்னாள் அட்மிரல் சரத் வீரசேகர, பெரமுனவிலிருந்து வெளியேறியுள்ள விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகிய மூவரும் 13ம் திருத்தத்தை எதிர்க்கும் புதிய அணியொன்றை அடையாளம் காட்டியுள்ளனர். இவர்கள் மூவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவுமிருப்பதால் உள்ளும் புறமும் இப் போது இவர்களுடைய செயற்பாடுகள் 13ம் திருத்தத் துக்கு எதிரானதாகவே காணப்படுகிறது.

இப்போதுள்ள சூழ்நிலையில் தென்னிலங்கை மக்களை எவ்வளவு தூரம் இவர்களால் இவ்விடயத்தில் கூட்டி ணைக்க முடியுமென்று நிச்சயமாக சொல்ல முடியாது. பொருளாதாரப் பிரச்சனையாலும் வாழ்வாதார நெருக்கடியாலும், ஒருவேளை உணவுக்காகவும்



திண்டாடும் நிலைமையிலுள்ள அப்பாவிப் பொதுமக்கள் 13க்கென அறகலயவை உருவாக்குவார்களா என்பதற்கு உத்தரவாதமில்லை.

கோதபாயவை வெளியேற்றுவதற்கு காலிமுகத்திடலில் இயங்கிய அறகலயவின் பின்பலமாகவிருந்த ஜே.வி.பி. 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இப்போது ஆதரவு வழங்கி வருகிறது. இந்த மனமாற்றம் எதன் அடிப்படையிலானது என்பது புரியாதது. மக்களுக்கு அதிகாரப் பகிர்வினால் நன்மை கிடைக்குமென்றால் அது நல்லது என்பது இவர்களின் கருத்து.

இதற்குப் போட்டியாக, 13ஐ அமல்படுத்தினால், "மீண்டும் இரத்த ஆறு ஓடும்" என்று சரத் - விமல் - உதய மும்மணிகள் கூட்டாக அச்சுறுத்தி வருகின்றனர். மீண்டும் இரத்த ஆறு ஓடும் என்று கூறிவருவதன் வழியாக முன்னரும் இனவன்செயல்கள், இன அழிப்புகள் என்பவற்றை முன்னின்று நடத்தியவர்கள் தாங்களே என்று இவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதை அவதானிக்க முடிகி றது.

பெப்ரவரி மாதம் 4ம் திகதி சிங்கள தேசத்தின் சுதந்திர தின விழாவின்போது இனப்பிரச்சனைத் தீர்வு தொடர் பாக தாம் எடுத்துவரும் செயற்பாடுகளை பகிரங்கமாக அறிவிப்பேன் என்று பல தடவை கூறிவந்த ரணில், அன் றைய நிகழ்வில் உரையாற்றாது தப்பிக் கொண்டார். கோடிக்கணக்கான பணம் செலவு செய்து நிகழ்த்திய இவ்வைபவம், சிங்கள தேச அரசின் படைபலத்தை வெளிப் படுத்தும் கண்காட்சி அரங்காக காட்சியளித்தது.

அன்றிரவு நாட்டு மக்களுக்கு ஒலி ஒளி ஊடகங்கள் வாயிலாக உரையாற்றிய ரணில், வழமையான பாணி யில் இனப்பிரச்சனைத் தீர்வை தொட்டுச் சென்றார். இத னால், 8ம் திகதிய நாடாளுமன்ற கொள்கை விளக்க உரை இனப்பிரச்சனைத் தீர்வுக்கான அறிவிப் பாக எதிர்பார்க் கப்பட்டது.

"நான் ஒருபோதும் செய்ய முடியாதவற்றைக் கூறமாட் டேன்" என்று சத்தியவான் பாணியில் தமது உரையை ஆரம்பித்த ரணில், சம்பந்தனும் தானும் நாடாளுமன்றத் தில் இருக்கும் காலத்திலேயே இனப்பிரச்சனைக்கு இறுதி யான தீர்வை வழங்குவோம் என்று குறிப்பிட்ட போது அதில் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தெரிந்தது.

ஆனால், 13ம் திருத்தம் முழுமையாக அமலாகும் என்று இரண்டு மாதங்களாக அவர் கூறிவந்ததன் அர்த்தத்தை, அடுத்த சில நிமிடங்களில் ஒரு வரியில் இல்லாமற் செய்தார். 'பொலிஸ் (காவற்துறை) அதிகாரங்கள் தொடர்பாக எந்தவித மாற்றமும் இடம்பெற மாட்டாது" என்பதுவே அந்த அறிவிப்பு. மாகாணங்களுக்குப் பொறுப்பாக ஒவ்வொரு பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனமாவார் என்பதும், மத்திய அரசினது பொலிஸ்மா அதிபரின் நேரடி நிர்வாகத்தில் அவர்கள் பணி புரிவார்கள் என்பதும் இதனூடாக தெளிவுபடுத்தப்பட்டது.

13ம் திருத்தத்தின் கீழான மாகாண சபை முறைமை என்பது அதிகாரப் பகிர்வுக்காக ஏற்படுத்தப்பட்டது. இதில் காவற்துறை அதிகாரமும், காணி அதிகாரமுமே முக்கியமானவை. ஜே.ஆர் - ராஜிவ் ஒப்பந்தம் இடம் பெற்று 35 ஆண்டுகள் முடிவடைந்த போதிலும் இவ் விரு அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்ப டவில்லை.

**"அரைப்பரப்புக் காணிக்கே எல்லைகளைச் சரியாக வரையறுத்து வேலி கட்டி வாழ்பவர்கள் தமிழர்கள். இவர்கள் தங்கள் காணியை எவரும் அபகரிக்க விடமாட்டார்கள். மற்றவர் காணியையும் அபகரிக்க மாட்டார்கள். காவல்(துறை) இல்லாத காணி அதிகாரத்தை, முழுமையான அதிகாரப் பகிர்வு என்று இவர்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்வர்? தமிழ்த் தேசிய தலைமைகள் என்ன செய்யப் போகிறார்கள்?**

இதனாலேயே தமிழர் பூர்வீக நிலங்கள் அர சாங்க திணைக்களங்களால் தம்மிஷ்டப்படி அபகரிக்கப்பட்டு வந்தன. இன்றும் அந்நிலையே தொடர்கிறது. காவற்துறை இதற்குத் துணைபோவதாகவே இயங்கி வருகிறது.

அதிகாரங்கள் இல்லாத மாகாண சபைகளால் அந் தந்த பிரதேச மக்கள் உப்புச் சப்பில்லாத நிர்வாகத்தில் இருந்து வருகின்றனர். வடக்கு, கிழக்கைத் தவிர்ந்த மற் றைய ஏழு மாகாண சபைகளும் இதனால் பாதிக்கப்பட வில்லை. அவை சிங்களப் பிரதேசங்களில் சிங்கள ஆட்சி பீடத்தின் முகவர் அமைப்புகளாக அந்தந்த மாகாண மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன.

ஆனால், வடக்கு கிழக்கு மாகாண சபைகள் அதிகார மின்றி ஆளுனரின் விருப்புக்கேற்றவாறும், மத்திய அர சின் கடும்போக்குக்கு அடிபணிந்தும் இயங்கி வந்தன. இந்நிலை மாறுவதற்காகவே காவல் மற்றும் காணி அதிகாரங்கள் அனைத்து மாகாண சபைகளுக்கும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது.

மீண்டும் இரத்த ஆறு ஓடுமென்று தமிழருக்கு கொலைப் பயமுறுத்தல் விடுபவர்கள், காவற்துறை மற்றும் காணி அதிகாரங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கு மட்டுமே வழங்கப்படுவது போலவும், இதனால் நாடு துண்டாடப்படுமெனவும், தமிழருக்கு தனி நாடு கிடைக்கப் போவதாகவும் தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஏமாற்று அரசியலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு அடிபணிந்தவராக தம்மைக் காட்டிக் கொள் ளும் ரணில் காவற்துறை அதிகாரங்கள் இல்லாத மாகாண சபை முறைமையை முழுமையான அதிகார நிர்வாகமென ஏமாற்றி செயற்படுத்த முனைகிறார்.

முழுமையான என்பதில் காவற்துறை இல்லையென்றால் எஞ்சியிருப்பது காணி அதிகாரந்தான் அதற்கும் கூட ரணில் ஒரு பூட்டுப்போட எண்ணியுள்ளார். காணி விவகாரங்களுக்கு தேசிய காணிச்சபை ஒன்று தாபிக்கப்படுமென்றும் அதன் வழியாக தேசிய காணிக்கொள்கை வரைபு தயாரிக்கப்படுமென்றும் 8ம் திகதிய கொள்கை விளக்க உரையில் தெரிவித்துள்ளார்.

இது மட்டுமன்றி, மாகாண சபைகளுக்கும் மத்திய அரசுக்குமிடையில் ஒருங்கிணைப்புப் பணிகளை நடைமுறைப்படுத்த நவீன முறையில் மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமையினை எதிர்பார்ப்பதாகவும் அறிவித்துள்ளார். 1981ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அமல்படுத்தி தோற்றுப்போன மாவட்டச் சபை முறைமையை மீண்டும் தூசு தட்டி எடுத்துவர ரணில் விழைகிறார்.

இத்திட்டம் நடைமுறைக்கு வருமானால் மீண்டும் மாவட்ட அமைச்சர்கள் நியமனமாகலாம். அவர்கள் ஆட்சியிலுள்ள அரசியல் தரப்பினராகவே இருப்பர். மாகாண சபைக்கொரு முதலமைச்சர், அதற்கொரு ஆளுனர், அதற்கும் அப்பால் மாவட்ட சபைகள், அவற்றுக்கு மாவட்ட அமைச்சர்கள்.... வேதாளம் மீண்டும் முருக்க மரத்தில் ஏறிய கதைதான்.

மாவட்ட அமைச்சர்கள் முறைதான் ரணிலின் திட்ட மெனில், வடக்கில் ஐந்து மாவட்ட சபைகளும் கிழக்கில் மூன்று மாவட்டசபைகளும் உருவாகும். இவைளில் சில தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் கட்டுப்பாட்டில் அமையும் வாய்ப்புண்டு. மொத்தத்தில், இனப்பிரச்சனைக் கான தீர்வு அல்லது தீர்வுப் பொதியென்பது பூச்சியமா கவே அமையலாம்.

காவற்துறை அதிகாரமில்லாத, தேசிய காணிச்சபை நிர்வகிக்கும் காணி அதிகார மாகாண சபை முறைதான் ரணில் நாடும் இனப்பிரச்சனைத் தீர்வு என்பது தெரிகிறது. இதனைத்தான், 'நீங்கள் உங்களுக்கே விளக்காக இருங்கள்" என்று 8ம் திகதிய உரையில் குறிப்பிட்டாரோ?

அரைப்பரப்புக் காணிக்கே எல்லைகளைச் சரியாக வரையறுத்து வேலி கட்டி வாழ்பவர்கள் தமிழர்கள். இவர்கள் தங்கள் காணியை எவரும் அபகரிக்க விடமாட் டார்கள். மற்றவர் காணியையும் அபகரிக்க மாட்டார்கள். காவல் (துறை) இல்லாத காணி அதிகாரத்தை, முழுமை யான அதிகாரப் பகிர்வு என்று இவர்கள் எவ்வாறு ஏற் றுக் கொள்வர்? தமிழ்த் தேசிய தலைமைகள் என்ன செய்யப் போகிறார்கள்?

# இலங்கை இன பிரச்னைக்கு முட்டுக்கட்டை போடுகிறதா பௌத்த தேசியவாதம்?

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கை இனப் பிரச்னைக்கு தீர்வாக இந்தியாவின் உதவியுடன் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை அமல்படுத்த ரணில் விக்ரமசிங்க திட்டமிட்ட நிலையில், பெரும்பான்மை சிங்களவர்கள் அந்த முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

75வது சுதந்திர தினத்திற்குள் இன பிரச்னைக்கு தீர்வு வழங்கப்படும் என கடந்த நவம்பர் மாதம் 23ம் தேதி நாடாளுமன்றத்தில் ரணில் விக்ரமசிங்க உறுதி வழங்கியிருந்தார்.

இதன் அடுத்த கட்ட நகர்வாக, இன பிரச்னைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் விதம் குறித்து கலந்துரையாடல்களை நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் சர்வகட்சி மாநாடு நடத்தப்பட்டது.

இந்த சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டவர்களில், பெரும்பாலான சிங்கள மக்கள் பிரதிநிதிகள், 13வது திருத்தச் சட்டத்தை அமல்படுத்த தமது எதிர்ப்புக்களை முன்வைத்திருந்தனர்.

13வது திருத்தம் அமல்படுத்தப்படும் பட்சத்தில், அது நாட்டை பிரிக்கும் எனவும், இதனால் இனவாத பிரச்னைகள் வலுப் பெறும் எனவும் பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் பிரதிநிதிகள் அவ்வாறு தமது எதிர்ப்பை வெளியிட்ட நிலையில், கடந்த மாதம் 26ம் தேதி இனப் பிரச்னைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலான சர்கட்சி மாநாடு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இறுதியாக நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள், 13வது திருத்தத்தை அமல்படுத்த வேண்டாம் என ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருந்தனர்.

எனினும், அரசியலமைப்பில் உள்ள 13வது திருத்தச் சட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட தனக்கு உள்ளதாக ஜனாதிபதி இதன்போது கடுமையாக கூறியிருந்தார்.

அதனால், தான் இந்த சட்டத்தை நிறைவேற்றுவதாகவும் அவர் அன்றைய தினம் உறுதி வழங்கியிருந்தார்.

"நான் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். அந்த வகையில் இருக்கும் சட்டத்தை நான் நடைமுறைப் படுத்துவேன். எமது அரசியலமைப்பில் கடந்த 37 ஆண்டுகளாக 13ஆவது அரசியல் திருத்தம் உள்ளடகக்கப்பட்டுள்ளது. நான் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். நான் அதனை நடைமுறைப்படுத்தாமல் இருக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் யாராவது 22ஆவது மறுசீரமைப்பைக் கொண்டு வந்து 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்ய வேண்டும்.

இங்கு என் மீது சத்தம் போடுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. எனவே இரண்டில் ஒன்று நடைபெற வேண்டும். 13ஆவது அரசியல் மறுசீரமைப்பை நீக்குங்கள். அல்லது 13ஆவது அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துங்கள். அதனை இல்லாமல் ஒழிக்காவிட்டால், எமக்கு நடுவில் இருக்க முடியாது. ஒன்றில் அதனை ஒழிக்க வேண்டும் இல்லையேல் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

தனிப்பட்ட பிரேரணையொன்றைக் கொண்டு வந்து யாருக்கு வேண்டுமானாலும் அதனை நீக்க முடியும். அதற்கு பெரும்பான்மையானோர் தமது விருப்பத்தை தெரிவிக்காவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. அபப்டியாயின், 13ஐ நடைமுறைப்படுத்த நேரிடும். ஆனால் இதனால் நாடு பிளவுபடாது.

விசேடமாக 13ஆவது அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பில் ஐந்து நீதிபதிகள் அடங்கிய குழுவின் தீர்மானத்துக்கமைய பார்த்தால் நாம் ஒற்றையாட்சியில் இருக்கிறோம். அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு நான் உடன்படுகின்றேன்." என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ம் தேதி சுதந்திரமடைந்த இலங்கை, தனது 75வது சுதந்திர தினத்தை கடந்த 04ம் தேதி கொழும்பில் மிக பிரமாண்டமாக கொண்டாடியது.

75வது சுதந்திர தினத்தில் இனப் பிரச்னைக்கு தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி உறுதி வழங்கிய போதிலும், அன்றைய தினத்தில் ஜனாதிபதினால் இந்த உறுதிமொழியை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை.

இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் நடைமுறை ரீதியில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுவது வழக்கான விடயம் என்பதனால், பௌத்த பீடங்களில் மகாநாயக்க தேரர்களின் தீர்மானங்கள் அரசாங்கத்தின் தீர்மானங்களாக பெரும்பாலும் அமைவது



யதார்த்தமாக காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம் என பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் கூட்டாக அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருந்தனர்.

13வது திருத்தச் சட்டத்தை அமல்படுத்துவதன் ஊடாக, நாட்டில் பிளவு ஏற்படாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எடுத்துரைத்த போதிலும், அதற்கு எதிராகவே இந்த நிமிடம் வரை பௌத்த பிக்குகள் இருந்து வருகின்றனர்.

## மகாநாயக்க தேரர்கள் எதிர்ப்பு

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை எந்த வகையிலும் அமல்படுத்தக்கூடாது என மூன்று பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மகாநாயக்க தேரர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் சுயாதீனம், ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய பிரச்சினைகளை தோற்றுவிக்கும் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்த கருத்து, நாட்டில் சிக்கல் நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாகவும் மகாநாயக்க தேரர்கள் கூறுகின்றனர்

பொலீஸ் அதிகாரங்கள், காணி, புராதன வரலாற்று சின்னங்கள், மத அமைப்புக்களை ஒழுங்குப்படுத்தும் அதிகாரம் ஆகியவற்றை மாகாண சபைகளுக்கு வழங்குவதன் ஊடாக, நாட்டில் பிரிவினைவாதம் ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பம் உருவாகும் எனவும் மூன்று பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் குறிப்பிடுகின்றனர்.

நாடு எதிர்நோக்கும் பாதகமான நிலைமைகளை கருத்திற் கொண்டு, இதுவரை காலம் ஜனாதிபதிகளாக பதவி வகித்தவர்கள் அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த தவிர்த்துக் கொண்டதாகவும் மகாநாயக்க தேரர்கள் கூறுகின்றனர்.

மத்திய அரசாங்கத்தின் இறையான்மையை சீர்குலைக்கும் இத்தகைய அரசியலமைப்பு திருத்தத்தை நடைடுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையானது, மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துவதற்கான காரணமாக அமையும் எனவும் மகாநாயக்க தேரர்கள் குறிப்பிடுகின்றனர்.

பொருளாதார நெருக்கடியினால் பிராந்திய மற்றும் உலக வல்லரசுகளின் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு சில நிபந்தனைகளுக்கு இணங்குமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும், நாட்டின் ஒருமைப்பாடு, சுயாதீனத்தன்மையை இல்லாது செய்யும் இவ்வாறான நடவடிக்கைகளை நிராகரிக்க வேண்டும் என மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதிக்கு கூறியுள்ளனர்.

## பௌத்த பிக்குகள் போராட்டம்

9வது நாடாளுமன்றத்தின் 4வது அமர்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொள்கை பிரகடன உரை கடந்த 8ம் திகதி இடம்பெற்றது.

ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தில் நிகழ்த்தும் கொள்கை பிரகடன உரையில், 13வது திருத்தத்தை அமல்படுத்துவது குறித்த அறிவிப்பு வெளியிடப்படும் என எண்ணிய பௌத்த பிக்குகள், அன்றைய தினம் நாடாளுமன்ற கட்டட வளாகத்திற்குள் செல்லும் பிரதான வீதியை இடைமறித்து, போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

மாகாண சபைகளுக்கு பொலீஸ், காணி அதிகாரங்களை கொண்ட 13 வழங்கப்படக்கூடாது என தொனிப் பொருளை மையப்படுத்தி, பௌத்த பிக்குகள் இந்த போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பௌத்த பிக்குகள், நாடாளுமன்ற வளாகத்திற்குள் செல்ல முயற்சித்தமையினால், அங்கு பொலீஸாருக்கும், பௌத்த பிக்குகளுக்கும் இடையில் அமைதியின்மை நிலவியது.

"அமைதியாக இருந்த நாட்டில், இனங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கத்தினால் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக" போராட்டத்தில் ஈடுபட்ட பௌத்த பிக்குகள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் உரையில் 13வது திருத்தத்தை அமல்படுத்துவது குறித்து எந்தவித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

எனினும், இலங்கை இனப் பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வொன்றை இம்முறை தான் நிச்சயம் வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளு மன்ற கொள்கை பிரகடன உரையில் தெரிவித்திருந்தார்.

1977ம் ஆண்டு தான் முதல் முறையாக நாடாளுமன் றத்திற்கு தெரிவான சந்தர்ப்பத்திலிருந்து இனப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், அது இன்று வரை வெற்றியளிக்கவில்லை என அவர் கூறுகின்றார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவராக ஆர்.சம்பந்தனும், தானும் 1977ம் ஆண்டு ஒரே சந்தர்ப்பத்திலேயே நாடாளுமன்றத்திற்கு தெரிவானதாக கூறிய அவர், தம் இருவருக்கும் அன்று முதல் இன்று வரை கனவொன்று இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இனப் பிரச்னைக்கு நிலைபேறான தீர்வொன்றை பெற்றுக்கொடுப்பதே தமது கனவு என அவர் கூறுகின்றார்.

இதுவரை நடத்தப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்காத போதிலும், இம்முறை எவ்வாறாயினும், அதனை வெற்றியடையச் செய்வதே தமது எதிர்பார்ப்பு எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

"திரு ஆர்.சம்பந்தன் அவர்களும், நானும் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டோம். நாம் இருவருக்கும் பொதுவான ஒரு கனவு உண்டு. நாம் இருவரும் நாடாளுமன்றத்தில் இருக்கின்ற போதே இலங்கையின் இனப் பிரச்னைக்கு நிலைபேறான ஒரு தீர்வை வழங்குதல் ஆகும். அக் கனவு பற்றி அன்று முதல் இன்று வரை நாம் கலந்துரையாடுகின்றோம். முயற்சி செய்கின்றோம். முன்னைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனாலும் இம்முறை எவ்வாறாயினும் அதனை வெற்றியடையச் செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பினையும் நாம் எதிர்பார்க்கின்றோம்." என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

நாட்டில் காணப்படுகின்ற அனைத்து பிரச்னைகளுக்கும் ஒற்றையாட்சி அரசின் உயர்ந்த பட்ச அதிகாரங்களை பகிர்வதற்கு தான் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை பிரிப்பதற்கு தான் துணை நிற்க போவதில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இனப் பிரச்னை தீர்வு விவகாரத்தை தடுக்கும் வகையிலான செயற்பாடுகளில் பௌத்த பிக்குகளின் தலையீடுகள் தொடர்ச்சியாக இருந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

## ஜனாதிபதி தரப்பின் பதில்

75வது சுதந்திர தினத்திற்குள் இனப் பிரச்னைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என எண்ணத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இருந்த போதிலும், பேச்சுவார்த்தைகளுக்கு தமிழர்கள் தரப்பினர் உரிய வகையில் வருகைத் தராமையே, திட்டமிட்ட வகையில் தீர்வை வழங்க முடியாது போனதாக ஜனாதிபதி தரப்பின் அதிகாரி ஒருவர், தெரிவித்திருக்கிறார்.

சர்வகட்சி மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், தமிழ் மக்கள் பிரதிநிதிகள் உரிய வகையில் பேச்சுவார்த்தைக்கு வருகைத் தரவில்லை என அவர் குறிப்பிடுகின்றார்.

எனினும், இன பிரச்னைக்கு தீர்வு வழங்கும் நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி தற்போது வரை உள்ளதாகவும் ஜனாதிபதி தரப்பிலுள்ள அதிகாரி கூறுகின்றார்.

இலங்கையில் காலம் காலமாக தொடர்ந்துவரும் இனப் பிரச்னைக்கு 75வது சுதந்திர தினத்திற்குள் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதி வழங்கிய போதிலும், தீர்வை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைக்கு தொடர் எதிர்ப்புக்கள் வெளியாகி வருகின்றன.

(பிபிசி)

# 33 வருடங்களாக அஞ்ஞாத வாசம் செய்த தமிழர்கள்



**குரு அரவிந்தன்**

இராமாயணத்தில் இராமபிரான் 14 ஆண்டுகள் அஞ்ஞாத வாசம் இருந்ததாகச் சொன்னபோது பக்தர்கள் கதிகலங்கிப் போனார்கள், இந்தக்கதை பழைய வரலாற்றில் இடம் பெற்றிருந்ததால் அந்த சம்பவம் முக்கியம் பெற்றிருந்தது. ஆனால் அதைவிட அதிக காலம் அதாவது 33 வருடங்கள் வடஇலங்கைத் தமிழ் மக்கள் அஞ்ஞாத வாசம் இருந்ததைக் கேள்விப்பட்ட போது யூரியூப் தொலைக்காட்சி நண்பரான தணூரன் என்பவர் கண்கள் கலங்கி நின்றதைக் காணமுடிந்தது.

'முதன் முதலாக இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்திருக்கின்றேன், காரணம் நான் அப்போது பிறந்திருக்கவில்லை' என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இது இராமாயண காலத்தில் நடக்கவில்லை, சென்ற வாரம் இலங் கைத் தீவின் வடபகுதியில் உள்ள, தமிழர்கள் பரம்பரையாக வாழ்ந்த காங்கேசந்துறையில் நடந்ததொரு சம்பவமாகும். இதைப் பார்த்த இன்னுமொரு நண்பர் சந்துரு என்ற ஊடகவியலாளர் 'புதிய பூமி புதிய வானம்' என்று கைகளைத்தூக்கி மகிழ்ச்சியில் பாடினார். இது அவருக்குப் புதிய பூமியாக இருக்கலாம், ஆனால் இது எமக்கு எங்கள் மூதாதையர் வாழ்ந்த 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே - அதன் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இம் மண்ணே!

யுத்தம் காரணமான வடபகுதியில் வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்திருந்தார்கள். காங்கேசந்துறையை அதிபாதுகாப்பு வலயமாக இராணுவம் பிரகடனப் படுத்தியதால் 1990 ஆம் ஆண்டு பரம்பரையாக அங்கு வாழ்ந்த மக்கள் சொந்த மண்ணைவிட்டு வெளியேற்றப் பட்டார்கள். எங்கே செல்வது என்று தெரியாமல், உறவுகள் எல்லாம் வலி சுமந்த நெஞ்சோடு திக்குத் திக்காய்ப் பிரிந்து விட்டார்கள். மீண்டும் அந்த மண்ணில் காலடி எடுத்து வைக்க இப்போதுதான் சிலருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. உடைந்து சிதைந்து போயிருந்த தங்கள் வீடுகளை, 33 வருடங்களின் பின் பார்த்த மக்கள் சில நிமிடம் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தனர். ஆனாலும் சொந்த மண்ணில் மீண்டும் காலடி வைத்ததில் தாங்கள் மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டனர்.

கங்கேசந்துறையில் சுமார் 108 ஏக்கர் நிலப்பரப்பு மட்டும் சென்ற வாரம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டது. தனிப்பட்ட மக்களுக்குச் சொந்தமான விடுவிக்கப்பட்ட நிலத்தில் 80 ஏக்கர் நிலம் இராணுவத்திடம் இருந்தும், 28 ஏக்கர் நிலம் கடற்படையிடம் இருந்தும் விடுவிக்கப்பட்டன. தற்போது விடுவிக்கப்பட்ட பகுதிகளில் முக்கியமாக 1959 ஆம் ஆண்டு கட்டப்பட்ட காங்கேசந்துறை பட்டின சபையைச் (பிரதேசசபை) சூழ்ந்த பகுதிகளும், அதாவது பழைய துறைமுகம் இருந்த கலங்கரைவிளக்கம் தொடங்கி மேற்கே புதிய துறைமுகம் வரை விடுவிக்கப் பட்டிருக்கின்றது. ஜனாதிபதி மாளிகை இருக்கும் இடம், குறிப்பாகச் சடையம்மா மடத்தடி இன்னும் விடுவிக்கப்படவில்லை. அதேபோல நடேஸ்வராக் கல்லூரிவீதியில் உள்ள நரசிம்மவைரவர் கோயிலைச் சூழ்ந்த தையிட்டியின் சில பகுதிகளும் விடுவிக்கப்பட்ட இடங்களில்



அடங்கும். எங்கள் வீடுகள் இருந்த பகுதியும், நடேஸ்வராக்கல்லூரியும் மக்களின் விடா முயற்சியால் ஏற்கனவே சில வருடங்களுக்குமுன் விடுவிக்கப்பட்டிருந்தன.

நடேஸ்வராக் கல்லூரி வீதியில் கல்லூரியோடு இணைந்த, கிழக்குப் பக்கத்தில் தொடர்வண்டிப் பாதைக்கு அருகே சிறிய பகுதி இன்னமும் 515 வது இராணுவ பிரிவிடம் இருக்கின்றது. அதையும் விட்டுக் கொடுத்தால், தையீட்டிப் பகுதிகளில் குடியிருக்கும் மாணவர்கள் கல்லூரிவீதி வழியாக இலகுவாகக் கல்லூரிக்கு வந்து செல்ல முடியும், இல்லாவிட்டால் நீண்டதூரம் சுற்றி வரவேண்டியிருக்கும். தொடர் வண்டி நிலையத்திற்கு அருகே இருந்த ரோமன் கத்தோலிக்க பாடசாலையும் தற்போது விடுவிக்கப் பட்டிருக்கின்றது. சுமார் 197 குடும்பங்களின் நிலங்களில் மீள்குடியேற்றம் நடைபெறுவதால், இனி வரும் காலங்களில் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கச் சந்தர்ப்பம் உண்டு.

தரைப்பாதை, தொடர்வண்டிப் பாதை, கடற்பாதை மற்றும் விமானப் பாதை ஆகிய நான்குவழிப் பாதைகளைக் கொண்ட நகரமாகக் காங்கேசந்துறை இருந்ததால், ஒரு காலத்தில் மிகவும் பிரபலமான நகரமாக இருந்தது. இயற்கை தந்த வெண்மணற் பரப்பைக் கொண்ட காங்கேசந்துறை கடற்கரையும், கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் கலங்கரைவிளக்கமும், போத்துகேயரைக் கோட்டைகட்ட விடாமல் தடுத்து அத்திவாரச் சுவரோடு நிறுத்திய மக்களின் வீரவரலாறும், அதன் அருகே பழைய துறைமுகமும் அந்த நகருக்கு அழகுசேர்த்தன. விமானத்தையோ, கப்பல்களையோ, அல்லது தொடர் வண்டியையோ அருகே சென்று பார்க்க விரும்பியவர்களின் ஆசைகளை நிறைவேற்றிய நகரமாக அன்று காங்கேசந்துறை இருந்தது. 1970 களில் சுமார் 3000 மேற்பட்ட பணியாளர்கள் அங்கிருந்த சீமெந்துத் தொழிற்சாலையில் பணி புரிந்தார்கள்.


குரு வீதியில் உள்ள எங்கள் வீடு தரை மட்டம் ஆக்கப்பட்டிருந்தாலும், அருகே உள்ள நடேஸ்வராக் கல்லூரி நான் ஆரம்ப கல்விகற்ற பாடசாலை எப்பதாலும், எனது தந்தை நடேஸ்வராக் கல்லூர் அதிபராகவும், பட்டினசபை முதல்வராகவும் இருந்ததாலும் இந்த இடங்கள் விடுவிக்கப்பட்டதில் எனக்கு மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. ஆனால் இதையெல்லாம் பார்த்து மகிழ எனது பெற்றோர்கள் தான் இப்போது உயிருடன் இல்லை. எனக்கு மட்டுமல்ல, பலரும் சொந்தங்களை இந்த யுத்தத்தில் இழந்துவிட்டார்கள். எமது காலத்தில் இனமத வேறுபாடின்றி எல்லா இனத்தவரையும், மதத்தவரையும் அரவணைத்த நகரமாகக் காங்கேசந்துறை இருந்தது. பலவேறு இனத்தவர்களும் தொழில் நிமித்தம் அங்கு வந்து ஒற்றுமையாக வாடகை வீடுகளில் தங்கியிருந்தனர். அவர்களது பிள்ளைகள் நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றனர். எமது காலத்தில் சுமார் 1200 பிள்ளைகள்வரை கல்வி கற்ற இடத்தில் 160 பிள்ளைகள்தன் இப்போது படிக்கிறார்கள்.

இப்பிலிப்பிலி என்று ஒருவகை மரம் பற்றையாக எல்லா இடமும் காணப்பட்டது. படையினர் தங்கள் பாது காப்பிற்காக யுத்தகாலத்தில் அதன் விதைகளை வானத்தில் இருந்து தூவியிருந்தனர். வடபகுதியில் எல்லா இடமும் இப்போது அந்த மரம்தான் காணப் படுகின்றது. விடுவிக்கப்பட்ட இடங்களில் இராணுவம் தங்கியிருந்த வீடுகள் மட்டும் நல்ல நிலையில் இருக்கின்றன. ஏனைய வீடுகள் இடிந்து அழிந்து போனவையாகவும், வளவுகள் முழுதும் பற்றைகள் வளர்ந்து பாதுகாப்பு அற்றவையாக இருக்கின்றன. தெருநாய்களைக் கூட்டம் கூட்டமாகக் காணமுடிந்தது. அவை இரவிலே படையினருக்குக் காவல் நாய்களாக மட்டுமல்ல, இராணுவ முகாங்களின் சாப்பாட்டையும் இதுவரை காலமும் நம்பியிருந்தன.

கோயிற்கடவை என்று அழைக்கப் பட்ட இந்த சுற்றுவட்டாரத்தில் சிறிதும் பெரிதுமாய் 67 இந்துக் கோயில்கள் இருந்தன. தையீட்டி நரசிம்ம வயிரவர் கோயிலைப் பௌத்த கோயிலாக மாற்ற முயற்சிகள் நடந்திருக்கின்றன. சூலம் உடைக்கப்பட்ட நிலையில், மூலவர் அகற்றப்பட்டு இருந்ததை அவதானிக்க முடிந்தது. அங்கிருந்த அரச மரத்தில் பௌத்த கொடிகள் கட்டப்பட்டிருந்தன. சுவர்களில் புத்தரின் படங்கள் வரையப்பட்டிருந்தன. வாசலில் பொலநறுவை சோழர்காலத்து சந்திர வட்டக்கல் அடையாளங்கள் போல, பௌத்த வரலாற்றைச் சொல்லும் அரைவட்டக் கல் ஒன்றையும் பதித்திருக்கிறார்கள். சீமெந்துத் தொழிற்சாலைக்கு முன்னால் இருந்த குமாரகோயில் வளாகத்தில் பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது. கைவிடப்பட்ட வீட்டுச் சுவர்களில் பெரிய அளவில் பெண்களின் ஆபாசப் படங்கள் வரையப் பட்டிருந்ததையும் சில இடங்களில் அவதானிக்க முடிந்தது.

எங்கள் பாரம்பரிய நிலங்களைத் திரும்பப் பெறுவதற்கு யார்யாரிடமோ எல்லாம் மண்டியிட்டுக் கையேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். இங்கே கிணறுகளை வைத்துத்தான் காணிகளை அடையாளப்படுத்த முடிகின்றது. சில கிணறுகள் தொலைக்கப்பட்டு விட்டன. 33 வருடங்கள் வலிசுமந்த நெஞ்சோடு உறவுகளைப் பிரிந்து வாழ்ந்தது போதும், இனியாவது எல்லைச் சண்டை, வேலிச்சண்டைகளைச் சுமூகமாகத் தீர்த்து ஒன்றுபட்டுச் செயற்படுவோம். விழுந்தாலும் மீண்டும் எழுந்து நிற்போம், எங்கள் அடையாளங்களைக் கட்டி எழுப்புவோம் என்பதைச் செய்கையில் காட்டுவோம். எமது மிகுதி நிலங்களையும் மீட்டெடுப்போம். மக்களும், காலமும்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். ●





## ஜெய்சங்கர் வாழ்வு திரைப்படமாகிறது

'தென்னகத்து ஜேம்ஸ்பாண்ட்' என்று போற்றப்பட்டவர் நடிகர் ஜெய்சங்கர். 200 படங்களுக்கு மேல் நடித்த இவர் நடித்துள்ளார். எம். ஜி. ஆர். போலவே கொடை உள்ளம் கொண்டவர் அவர்.

ஜெய்சங்கரின் பிள்ளைகளில் இருவர் மருத்துவர்களாக உள்ளனர். இளைய மகன் சஞ்சய் சங்கர் தற்போது சின்னத்திரை தொடர்களில் நடித்து வருகிறார்.

ஜெய்சங்கரின் வாழ்க்கை வரலாறு பல புத்தகங்களாக வெளிவந்துள்ளது. தற்போது அவரின் வாழ்க்கை சரிதத்தை திரைப்படமாக்கும் முயற்சியை சஞ்சய் சங்கர் தொடங்கியுள்ளார். இதற்கான திரைக்கதை தயாராகி வருகிறது. ஜூலை மாதம் அவரின் பிறந்தநாளில் படம் பற்றிய முழுமையான அறிவிப்பு வெளியாகும்.

## 24இல் வருகிறது போர்டர்

அருண் விஜய் நடித்துள்ள 'போர்டர்' திரைப்படம் எதிர்வரும் 24ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'ஈரம்' படம் மூலம் கவனம் ஈர்த்தவர் அறிவழகன். தொடர்ந்து, 'ஆறாது சினம்', 'குற்றம் 23' படங்களை இயக்கியவர், அருண் விஜயை வைத்து இயக்கியிருக்கும் படம் 'போர்டர்'. ரெஜினா நாயகியாக நடித்துள்ள இப்படத்திற்கு சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார்.







## சாகுந்தலம் ஏப்ரல் 14

குணசேகர் இயக்கத்தில் சமந்தா, தேவ் மோகன் மற்றும் பலர் நடித்துள்ள சரித்திர படம் "சாகுந்தலம்". தெலுங்கில் தயாராகியுள்ள இந்தப் படம் தமிழ், ஹிந்தி, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் வெளியாகிறது.

இப்படத்தின் வெளியீடு இரண்டு முறை அறிவிக்கப்பட்டு, தள்ளி வைக்கப்பட்டது. அடுத்து ஏப்ரல் 14ஆம் திகதி இப்படம் வெளியாகும் என அறிவித்துள்ளார்கள்.

தெலுங்கில் "ஒக்கடு" படத்தின் மூலம் பெரும் வெற்றியைக் கொடுத்தவர் இயக்குநர் குணசேகர். அப்படம்தான் தமிழில் விஜய் நடிக்க "கில்லி" என மீளுருவானது. அவரே இந்தப் படத்தை இயக்கி தயாரித்துள்ளார்.



## வயதாகியும் குறையாத கவர்ச்சி

தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், மலையாளம் என பல மொழிகளிலும் நடித்தவர் ஸ்ரேயா. 2018ஆம் ஆண்டில் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த ஆன்ட்ரேய் கோஸ்சேவ் என்பவரைத் திருமணம் செய்து ஒரு குழந்தைக்கும் தாயாக உள்ளார்.

கடந்த ஆண்டில் அவர் நடித்து "ஆர். ஆர். ஆர்., தட்கா, த்ரிஷ்யம் 2" ஆகிய படங்கள் வெளிவந்தன. அடுத்து "கப்ஜா" என்ற கன்னட படத்தில் நடித்துள்ளார்.


சமூக வலைத்தளங்களில் அடிக்கடி கவர்ச்சிகரமான படங்களைப் பதிவிடுவார் ஸ்ரேயா. 40 வயதைத் தொட்ட பின்னும் அவர் இன்னமும் அதே இளமையுடன் இருக்கிறார் என ரசிகர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்.

## திரையுலகில் 40

நடிகர் திலகம் சிவாஜியின் 'நெஞ்சங்கள்" திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் மீனா. இதன் பிறகு தமிழ், தெலுங்கு என மொழிகள் கடந்தும் கதாநாயகியாக நடித்திருந்தார்.

திரையுலகில் 40ஆவது ஆண்டை கொண்டாடும் மீனாவுக்கு விழா எடுக்க அவரின் நட்பு வட்டத்தினர் தீர்மானித்துள்ளனர். இதற்கான முன்னெடுப்பை நடன இயக்குநர் கலா மாஸ்டர் செய்கிறார். விழா குறித்த அறிவிப்பு விரைவில் வெளிவரும்.






**திரைப்படம் - மைக்கேல்**
**இயக்கம் - ரஞ்சித் ஜெயக்கொடி**
**இசை - சாம் சி. எஸ்.**
**நடிப்பு - சந்தீப் கிஷன், கௌதம் மேனன், திவ்யான்ஷா கவுஷிக்**

'கே. ஜி. எவ்' படத்தைப் பார்த்து அந்தப் படம் போலவே தங்கள் படத்தையும் கொடுக்க ஆசைப்பட்டு முயற்சித்திருக்கிறார்கள் மைக்கேல் படக் குழுவினர்.




'ரௌடி' கதை என்றாலே மும்பைதான் கதைக்களமாக இருக்கிறது. இந்தப் படத்திலும் அப்படியே. 90களில் நடக்கும் கதையாக இந்தப் படத்தின் கதை அமைந்திருக்கிறது. மும்பையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் ரௌடியான கௌதம் மேனன். ஒரு சந்தர்ப்பத்தில் அவரின் உயிரைக் காப்பாற்றுகிற அநாதை சிறுவனை வளர்க்கும்படி தனது உதவியாளரிடம் சொல்கிறார். வளர்ந்து இளைஞனாகும் அந்த சிறுவன்தான் 'மைக்கேல்'. அந்தக் கதாபாத்திரத்தில் சந்தீப் கிஷன் நடித்திருக்கிறார்.

கௌதமை மீண்டும் கொல்ல முயற்சிக்கும் கும்பலிடமிருந்து மீண்டும் காப்பாற்றுகிறார் சந்தீப். தன்னைக் கொல்ல முயன்றவரையும், அவரின் மகளையும் கொல்லும் வேலையை சந்தீப்பிடம் கொடுக்கிறார் கௌதம். அதன் பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

ஏற்கெனவே பல படங்களில் பார்த்த அதே ரௌடிஷ கதைதான் இதுவும். சமீபத்தில்கூட தமிழில் கௌதம் இயக்கிய 'வெந்து தணிந்தது காடு' படம்கூட இதே சாயலில்தான் இருக்கும். புதிதாக எதையும் சொல்ல முயற்சிக்கவில்லை இயக்குநர்.

சண்டைக் காட்சிகளில் அதிரடி காட்டியிருக்கிறார் சந்தீப் கிஷன். திவ்யன்ஷா கௌஷிக் மீது காதல் வந்ததும் கொஞ்சம் மாறுகிறார். சந்தீப், திவ்யன்ஷா இடையிலான காதல் காட்சிகள் ரசிக்க வைக்கின்றன. கௌதம் நடுத்தர வயது ரௌடி குழு தலைவராக நடித்திருக்கிறார்.

படத்தில் விஜய் சேதுபதி கதாபாத்திரம் தமிழில் வெளியிடுவதற்காக திணிக்கப்பட்டதாகவே தெரிகிறது. அவரின் மனைவியாக வரலட்சுமி சரத்குமார். விஜய் சேதுபதி வரும் காட்சிகளில் சுருட்டு புகைத்துக் கொண்டே இருக்கிறார்.

படம் முழுவதும் வன்முறை விளையாடுகிறது. சர்வ சாதாரணமாக துப்பாக்கி எடுத்து கொலைகளை செய்து கொண்டே இருக்கிறார்கள்.

ஒளிப்பதிவாளரும், சண்டை இயக்குநரும் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். சாம் சி. எஸ். பின்னணி இசை சண்டை காட்சிகளுக்கு பலம் சேர்த்திருக்கிறது.


வழக்கமான ஒரு ரௌடிஷ கதை, அப்பா - மகன், அம்மா - மகன் உணர்ச்சிபூர்வ - பழி வாங்கல் என பார்த்தவற்றையே மீண்டும் கொடுத்திருக்கிறார்கள்.

## விஜய் - சாருக் - ஷங்கர்

கமல் நடிக்கும் இந்தியன்-2, ராம் சரண் நடிக்கும் 17ஆவது படம் என இரண்டு படங்களை ஒரே நேரத்தில் இயக்கி வருகிறார் ஷங்கர். இந்த நிலையில் இந்த படங்களுக்கு பிறகு இன்னும் பிரமாண்டமான செலவில் ஒரு படத்தை ஷங்கர் இயக்கவுள்ளாராம். இந்த படத்தின் பட்ஜெட் மட்டும் 900 கோடி இந்திய ரூபாய் என்கிறார்கள்.

இதில் நடிகர் விஜயையும் ஹிந்தி நடிகர் சாருக் கானையும் நடிக்க வைக்க முதல்கட்ட பேச்சு நடப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. தற்போது லியோ படத்தில் விஜய் நடித்து வருகிறார். இதேப்போன்று ஜவான் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் சாருக் கான். இந்தப் படங்களில் அவர்கள் நடித்து முடித்ததும் ஷங்கர் இயக்கத்தில் நடிக்கும் படத்தின் அறிவிப்பு வெளியாகும் என்று சொல்கிறார்கள்.





# கனவை எட்டுமா இலங்கை...!




உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்குள் நுழைவதற்கான வாய்ப்புக்காக இலங்கை அணிக்கு இன்னும் இரு தொடர்கள் கைவசம் உள்ளன. அதேநேரத்தில், ஏனைய அணிகளுக்கும் பாதகமான நிலைமைகள் அமைந்தால் மூன்றாவது இடத்தில் இருக்கும் இலங்கை அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்கு தகுதி பெற்றுவிடும்.

இரண்டாவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் 9 அணிகள் பங்கேற்றுள்ளன. குறிப்பிட்ட இரு நாட்டு தொடர்களின் முடிவுகள் டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. இதில் டெஸ்ட் வெற்றிக்கு 12 புள்ளியும், சமநிலைக்கு 4 புள்ளியும் வழங்கப்படுகிறது. மொத்தம்



எடுக்கும் புள்ளிகள் சதவீதமாக கணக்கிடப்பட்டு அதன் அடிப்படையில் அணிகள் வரிசைப்படுத்தப்படுகின்றன. இறுதிபோட்டி ஜூன்7 ஆம் திகதி லண்டன் தி ஓவல் மைதானத்தில் நடைபெறுகிறது.

தற்போதைய நிலவரப்படி அவுஸ்திரேலியா 75.56 சதவீத புள்ளிகளுடன் முதலிடத்திலும், இந்தியா 58.93 சதவீத புள்ளியுடன் 2ஆவது இடத்திலும் உள்ளன. இறுதிப்போட்டிக்கான வாய்ப்பில் அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் மட்டுமே நீடிக்கின்றன. நடப்பு சம்பியன் நியூசிலாந்து, இங்கிலாந்து உள்பட 5 அணிகள் வாய்ப்பை இழந்து விட்டன.

இந்தத் தொடரில் இன்னும் இந்தியா - அவுஸ்திரேலியா (4 டெஸ்ட்), தென்னாபிரிக்கா - மேற்கிந்தியத் தீவுகள் (2 டெஸ்ட்), இலங்கை - நியூசிலாந்து (2 டெஸ்ட்) ஆகிய தொடர்கள் எஞ்சியுள்ளன. இதன் முடிவில் முதல் இரு இடங்களைப் பிடித்து இறுதிப்போட்டிக்குள் நுழையும் இரு அணிகள் எவை என்பது தீர்மானிக்கப்படும்.

யார் - யாருக்கு எப்படி வாய்ப்புள்ளது என்பதை இங்கு விரிவாக பார்க்கலாம்,

அவுஸ்திரேலியா - 75.56 சதவீத புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ள இந்த அணி கிட்டத்தட்ட இறுதிசுற்றை எட்டி விட்டது என்று தான் சொல்ல வேண்டும். தற்போது நடக்கும் இந்தியாவுக்கு எதிரான 4 டெஸ்ட் போட்டிகளில் ஒன்றை சமன் செய்தாலே போதும் இறுதிப்போட்டியை உறுதி செய்து விடலாம். இதேசமயம் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 0 - 4 என்ற கணக்கில் முழுமையாக பறிகொடுத்து, நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2-0 என்ற கணக்கில் வெல்லும் பட்சத்தில் அவுஸ்திரேலியா புள்ளி பட்டியலில் 3ஆவது இடத்துக்கு சரிந்து இறுதி சுற்று வாய்ப்பை இழக்க நேரிடும். அத்துடன், தாமதமாக பந்துவீசி புள்ளியை அபராதமாக இழக்காமல் இருப்பதும் முக்கியமாகும்.

இந்தியா - 58.93 சதவீத புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ள நமது அணி தற்போது நடந்து வரும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை குறைந்தது 3- 1 அல்லது 3-0 என்ற கணக்கில் கைப்பற்றினால் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட் டிக்கு சிக்கலின்றி முன்னேற முடியும். இல்லாவிட்டால் மற்ற தொடர்களின் முடிவை சார்ந்து இருக்க வேண்டியிருக்கும். தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலையில் முடியும் பட்சத்தில், நியூசிலாந்தில் நடக்கும் டெஸ்ட் தொடரை இலங்கை 2-0 என்ற கணக்கில் வசப்படுத்தினால் இந்தியாவின் இறுதிப்போட்டி கனவு தகர்ந்து விடும்.

இலங்கை - 53.33 சதவீத புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது நமது இலங்கை அணி அடுத்த மாதம் 9ஆம் திகதி கிறிஸ்ட்சர்ச்சில் தொடங்கும் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் வெல்லும்போது அதன் சதவீத புள்ளி 61.11 சதவீதமாக அதிகரிக்கும். அதன் பிறகு இந்திய அணி அவுஸ்திரேலியாவை 4-0 என்ற கணக்கில் தோற்கடிக்க வேண் டும் அல்லது தொடர் சமநிலையில் முடிய வேண்டும் அல்லது அவுஸ்திரே லிய அணி இந்தியாவை சாய்க்க வேண் டும். இவ்வாறு நடந்தால் டாப்-2 இடத் திற்குள் இலங்கை வந்து விடும். ஒரு வேளை, நியூசிலாந்துக்கு எதிரான தொடரை 1-1 என்ற கணக்கில் இலங்கை அணி சமன் செய்தால், அதன் பிறகு மற்ற இரு நாட்டு தொடர்களின் முடிவை பொறுத்து இலங்கையின் வாய்ப்பு அமையும்.

தென்னாபிரிக்கா - கடந்த மாதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 0-2 என்ற கணக்கில் தோற்றதால் தென்னாபிரிக்காவின் இறுதிப் போட்டி வாய்ப்பு மங்கி போய் விட்டது. 48.72 சதவீத புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ள அந்த அணி முதலில் சொந்த மண்ணில் நடக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் வெல்ல வேண்டும். அப்போது அந்த அணியின் புள்ளி 55.56 சதவீதமாக உயரும். அதன் பிறகு நியூசிலாந்துக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை ஒன்றில் தோற்க வேண்டும். இதே போல் இந்திய அணி அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழக்க வேண்டும். அல்லது 1-1 என்று சமனில் முடிந்தாலும் பிரச்னை இல்லை. இப்படி எல்லா முடிவுகளும் சாதகமாக அமைந்தால் மட்டுமே தென்னாபிரிக்காவுக்கு இறுதிப்போட்டிக்கான கதவு திறக்கும். ●

| அணி | போட்டி | வெற்றி | தோல்வி | சமன் | புள்ளி | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 15 | 10 | 01 | 04 | 136 | 75.56 |
| இந்தியா | 14 | 08 | 04 | 02 | 99 | 58.93 |
| இலங்கை | 10 | 05 | 04 | 01 | 64 | 53.33 |
| தென்னாபிரிக்கா | 13 | 06 | 06 | 01 | 76 | 48.72 |
| இங்கிலாந்து | 22 | 10 | 08 | 04 | 124 | 46.91 |
| மே.இ. தீவுகள் | 11 | 04 | 05 | 02 | 54 | 40.91 |
| பாகிஸ்தான் | 14 | 04 | 06 | 04 | 64 | 38.10 |
| நியூசிலாந்து | 11 | 02 | 06 | 03 | 36 | 27.27 |
| பங்களாதேஷ் | 12 | 01 | 10 | 01 | 16 | 11.11 |

# டோனியை வரவேற்க தயார்




இந்தியாவின் ஐ. பி. எல் தொடர் நடைபெறுவதை போல தற்போது தென்னாபிரிக்காவில் ஹஎஸ். ஏ. 20“ தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் ஜனவரி 10ஆம் திகதி தொடங்கியது. இதன் இறுதிப் போட்டி இன்று நடக்கிறது.

”தென்னாபிரிக்காவின் எஸ். ஏ. 20 தொடரில் டோனி பங்கேற்க விரும்பினால், அவரை வரவேற்க தயாராக உள்ளோம்” என்றும், ”வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்கள் இந்தியாவின் ஐ. பி. எல். தொடர்களில் பங்குபெறுவதைப் போல இந்திய வீரர்களும் மற்ற நாடுகளின் உள்நாட்டு தொடர்களில் பங்குபெற இந்திய கிரிக்கெட் சபை அனுமதியளிக்க வேண்டும்” என்று கூறியுள்ளார் தென்னாபிரிக்க கிரிக்கெட்டின் கிரஹம் ஸ்மித்.




இதுபற்றி பேசிய ஸ்மித், ”எம். எஸ். டோனி தென்னாபிரிக்கா கிரிக்கெட்டின் நல்ல நண்பர். அவர் இங்கு வந்து விளையாட முடிவு செய்தால் அவரை இரு கரம் நீட்டி வரவேற்போம். நானும் டோனியும் இரண்டு முறை விமான நிலையங்களில் சந்தித்துள்ளோம். தற்போது அவர் ஐ. பி. எல் தொடரில் சுப்பர் கிங்ஸ் அணிக்காக சிறப்பாகச் செயல்படுவதில் கவனம் செலுத்தி வருகிறார்.

எங்களின் எஸ். ஏ. 20 தொடரின் மீது அவருக்கு ஆர்வம் இருக்கிறது. இந்தத் தொடர் ஆரம்பிக்கும் முன்பே இது ஒரு பெரிய வெற்றி பெறும் என்று நம்புவதாக அவர் கூறினார். தென்னாபிரிக்க கிரிக்கெட்டை ஆற்றல்மிக்க ஒன்றாக பார்க்க விரும்புவதாக டோனி என்னிடம் கூறினார்.”

”இந்திய கிரிக்கெட் ரசிகர்களைப் பற்றி நன்றாகத் தெரியும். இந்தியாவின் திறமையான வீரர்கள் தங்கள் லீக்கில் விளையாடுவதை அனைவரும் விரும்புவார்கள். ஆனால், பி.சி.சி.ஐ இந்த விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. பி.சி.சி.ஐ உடனான எங்கள் உறவு நன்றாக உள்ளது. அவர்கள் மனம் வைத்தால் நாங்கள் எப்போதும் அவர்களுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கிறோம்” என்று கூறியுள்ளார்.



## இலங்கை எழுத்தாளருக்கு தமிழகத்தில் ஒரு இலட்சம் ரூபாய் பரிசு

தமிழகத்திலுள்ள ஸீரோ டிகிரி பதிப்பகம் கடந்த வருடம் சிறு கதை, குறுநாவல், நாவல் போட்டிகளை நடத்தியது. குறுநாவல் போட்டியில் இலங்கை சாவகச்சேரியைச் சேர்ந்த தாட்சாயணியின் குறுநாவலான 'தீநிழல்' பரிசு பெற்றது. யாழ்ப்பாணம், சாவகச்சேரியைச் சேர்ந்த இவர் ஒரு பிரதேச செயலாளர் ஆவார். பரிசளிப்பு நிகழ்வு சென்னையில் கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்றது. இவருக் குரிய விருது, பரிசுத்தொகை இந்திய ரூபா இருபதாயிரம் மற்றும் குறுநாவல் தொகுப்பினை எம் ஜீ ஆர் ஜானகியம்மாள் கல்லூரி முனைவர் குமார் ராஜேந்திரன் பெற்று இலங்கைப் பதிப்பாசிரியர் திரு எச். எச் விக்கிரமசிங்க அவர்களிடம் வழங்கியிருந்தார். கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த திரு. எச். எச் விக்கிரம சிங்க பரிசுத்தொகை இலங்கைப் பெறுமதி ஒரு லட்சம் ரூபாவினையும், விருதையும், பரிசுப்பெற்ற குறுநாவல் வெளிவந்த நூலினையும், தாட்சாயணியிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*நூல் அறிமுகம்:*

# வேல். ஆனந்தனின் 'கனவாகிப்போன இசைத் தமிழ் ஆடல் தமிழ் இலக்கு'

கொழும்பு தமிழ்ச் சங்கம் தனது 80ஆவது ஆண்டு நிறைவில் ஈழத்தின் மூத்த ஆடல் ஆசான் கலைஞர் வேல். ஆனந்தனின் 'கனவாகிப் போன இசைத் தமிழ் - ஆடல் தமிழ் இலக்கு' என்னும் நூலை பெருமையுடன் வெளியிட்டிருக்கிறது.

கொழும்பு தமிழ்ச் சங்கம் தமிழ் இசை, தமிழ் ஆடல் நிகழ்ச்சிகளை மரபுவழிக் கருத்துநிலை சார்ந்து முன்னெடுக்கும் அமைப்பாக தமிழிசை, தமிழ் ஆடல் அளிக்கைகளையும் செயலமர்வுகள், கருத்தரங்குகளையும் நிகழ்த்திவருவதுடன், இவைபற்றிய நூல்களையும் வெளியிட்டுவருகிறது.

கலைஞர் வேல். ஆனந்தன் வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'ஈழத்து ஆடல்' என்னும் எண்ணக்கருவுடனான செயலமர்வுகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் முன்னின்று வழிநடத்திய ஒருவர். குறிப்பாக, தமிழ் ஆடல் வடிவத்தில் நமது அடையாளம் இதுதான் என நிறுவி, ஆற்றுகை ரீதியிலும் புலமை அடிப்படையிலும் தனது ஆற்றலையும் ஆளுமையையும் வெளிக்கொண்டுவரும் தனித்துவமான கலைஞர். இன்று, தமிழ் ஆடல் கலை வடிவத்தின் இயக்கம் குறித்து எம்மைச் சிந்திக்கவும், இயக்க பூர்வமாக செயல்படவும் தூண்டுகிறார். இதனையே இந்த நூல் மூலமாக தனது இலக்காக அதனை மட்டுப் படுத்தாது, நமக்கான இலக்கு என்னும் அடிப்படையிலும் அதனை அடையாளப்படுத்துகிறார்.

ஒரு தேசிய இனத்தின் இருப்பு என்பது அதன் தொல்லியல் கலைவடிவத்தைப் பாதுகாத்து, அடுத்தடுத்த சந்ததியினூடாக அக் கலை வடிவம் கடத்தப்படுவதன் மூலமாகவே தக்கவைக்கப்பட முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கைகொண்டிருக்கும் கலைஞர் வேல். ஆனந்தன், தமிழ்த் தேசியத்தின்



ஊற்றாகவே தமிழ் ஆடல் கலையை உள்வாங்கியிருக்கின்றார். அத்தோடு, ஆறு தசாப்த காலத்துக்கும் மேலான அவரது கலை வாழ்வும் அதனூடாகவே பயணித்திருக்கின்றது. இதன் தொடர்ச்சியாக அவர் ஆக்கிய இந் நூல் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் வெளியீடாகியிருக்கிறது.

**ந. காண்டீபன்**
(தலைவர், கொழும்பு தமிழ்ச் சங்கம்)




# வியுக்தியார் பதில்கள்

**கே. சிவபாலன், கோவில் வீதி. நல்லூர்**

**கேள்வி:** *தமிழ் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாக இருப்பதையே இந்தியா விரும்புகின்றது என்று சொல்லும் தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு வெளியேறியபோது இதனை உணரவில்லையா?*

**வியுக்தியார்:** *அவர் அதனை உணர்ந்த படியால் தானே, தனித்து போட்டியிடுவது என்று தமிழ் அரசு முடிவெடுத்த அந்த மத்திய குழுக்கூட்டத்தில் கண்ணீர் விட்டு மனம்கலங்கினார். அவர் என்ன செய்வது? கட்சி இப்போது யாரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றதோ அவர்கள் இந்தியாவின் விருப்பத்திற்கு மாறாகத்தான் கருமமாற்றுவார்கள் என்பது அவருக்கும் தெரிந்தது தானே. மாவை சேனாதிராசா போன்ற வர்களால் இனி இப்படி ஒப்பாரி வைத்துக்கொண்டு இருக்கத்தான் முடியுமே தவிர கட்சியில் இனி அவர்கள் எதை விரும்பினாலும் அவர்களால் அதனை செய்யமுடியாது.*

---

**டி. நிக்சன், பாசையூர், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** *அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் எங்களுடைய தாயகம் - சரித்திர ரீதியாக எமது தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்கள் படிப்படியாக அபகரிக்கப் பட்டு விடும். எனவே, உடனடியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று தலைவர் இரா. சம்பந்தன் ஐயா எச்சரிக்கை விடுத்திருக்கிறாரே கவனித்தீர்களா?*

**வியுக்தியார்:** *திருகோணமலையில் அவர் தலை வைத்துப் படுப்பதற்கே இப்போது இடம் இருக்குமோ தெரியவில்லை. கிழக்கு மாகாணம் முற்றாக பறிபோய்விட்டது. எழுபத்தியேழாம் ஆண்டிலிருந்து அரசியலில் இருக்கும் சம்பந்தன் ஐயாவுக்கு இந்த சங்கதியே இப்போதுதான் தெரியவந்திருக்கின்றது. நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் ஒவ்வொரு தீபாவளிக்கும் தீர்வு வருகிறது என்று அறிவித்துக் கொண்டிருந்தபோது, தன்னிடமுள்ள பதினாறு எம். பி.க்களின் துணை இல்லாமல் ரணிலால் ஆட்சியத் தொடர முடியாது என்ற நிலையிலும் அவரைக் காப்பாற்றுவதே தமது வேலை என்று இருந்தபோதாவது இந்த விடயத்தைப்பற்றி யோசித்திருக்க வேண்டாமா? இப்போதும் கூட அடைந்ததால் சீதேவி இல்லையென்றால்... என்ற பாணியில் சமஷ்டியைத் தவிர வேறு எதையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று அடம்பிடித்துக்கொண்டிருக்க, பட்டுவேட்டிக்கு ஆசைப்பட்டு கோவணத்தையும் இழந்த கதையாக- பதின்மூன்றையும் கோட்டைவிட்டுவிடுவோம் போல் அல்லவா இருக்கின்றது.*

**சபா. கதிர், குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** *நாடு பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் பொது மக்கள் தமது அன்றாட அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். அவ்வாறிருக்கையில் சுதந்திர தினநிகழ்வுகளுக்காக அரசாங்கம் 200 மில்லியன் ரூபாயை செலவிட்டுள்ளதே. இது தேவைதானா?.*

**வியுக்தியார்:** *200 மில்லியன் ரூபா என்பது 20 கோடி ருபா. ஒரு நாடு தனது சுதந்திரதினத்தை அதுகும் எழுபத்திஐந்தாவது ஆண்டுதினத்தை கொண்டாட முடியாமல் இருக்கின்றது என்று சொல்வதும் மிகுந்த அவமானத்திற்குரியதுதான். அதனால் அதனைக் கொண்டாடத்தான் வேண்டும். அதற்காக தனது படையினரின் படைபலத்தை மாத்திரம் காட்டுவதாக அந்த விழா அமைந்திருந்ததுதான் கவலைக்குரியது. அந்தப் பணத்தை பயன்படுத்தி பாடசாலைக்கு கல்விச் செயற்பாடுகளுக்கான உபகரணங்களை வாங்க முடியாமல் இருக்கும் மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு பாடப்புத்தகங்களை வழங்கியிருந்தாலும் அது பயனுள்ள சுதந்திரதின நிகழ்வாக அமைந்திருக்கும் தான். ஆனாலும் இப்படி செலவுசெய்து விழா நடாத்துவதைக் கண்டிக்கும் சிலர் தான், ஆயிரம் கோடி ரூபாவை செலவுசெய்து இப்போது உள்ளூராட்சி தேர்தலை நடாத்தவேண்டும் என்றும் கேட்கிறார்கள். மக்களின் வாக்குரிமை அவசியமானது தான். ஆனால் அந்த வாக்குரிமையின் மூலம் அரசாங்கத்தை மாற்றமுடியும் என்றால் அதனைச் செய்வது பயன்தரும். அதற்காக இவ்வளவு தொகையை செலவுசெய்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு புதியவர்களை தெரிவுசெய்யவேண்டுமா என்பது தெரியவில்லை. மாகாணசபைகள் பல வருடங்களாக ஆளுனர்களின் நிர்வாகத்தில் இருக்கும்போது இந்த உள்ளூராட்சி சபைகள் சில மாதங்கள் அந்த அந்த செயலாளர்களின் நிர்வாகத்தில் இருந்தால் எதுகும் குறைந்துவிடப்போவதில்லையே.*

---

**சி. ராஜேஸ்வரன், கோயில் வீதி, நல்லூர்.**


**கேள்வி:** *ஒற்றையாட்சிக்குள் அதிகபட்ச அதிகாரப்பகிர்வை வழங்கி இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் அதிகாரம் பகி ரப்படாது என்றும் கூறியுள்ளார். அண்மைக்காலமாக 13ஐ முழுமையாக அமுல்படுத்துவேன் என்று கூறிக்கொகண்டிருந்தவர் திடீரென்று பொலிஸ் அதிகாரம் இல்லாத தீர்வு என்கிறார். என்ன தான் நடக்கின்றது நமது நாட்டில்?*

**வியுக்தியார்:** *நீங்கள் சொன்னதுபோல பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று கூறிக்கொண்டிருந்தவர், இப்போது பதின்மூன்று என்ற வார்த்தையையே மறந்தும் கூறாமல், ஒற்றையாட்சிக்குள் அதிகபட்ச அதிகாரம் என்கிறார். எங்கே 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதென்றால் தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொண்டுவிடுவார்களோ என்ற பயமோ தெரியவில்லை. இப்போது ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்கிறார்.*

*ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்றால் நம்மவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது அவருக்கு தெரிந்ததுதானே. அவரின் நோக்கம் எல்லாம் தான் ஏதோ செய்யநினைப்பதாக உலகம் நம்பவேண்டும். ஆனால் தமிழர் தரப்புத்தான் ஏற்றுக் கொள்கிறார்கள் இல்லை என்றும் உலகம் நம்பவேண்டும் என்று நினைக்கிறாரோ தெரியவில்லை. பாலா அண்ணர், அவரைப்பற்றி சொல்லிச் சென்றதுதான் இப்போதும் ஞாபகத்தில் வந்துபோகின்றது.*

விமல் பரம்

# காலமும் கனியும்



அப்பாவை இழந்து ஒரு வருடமாகி விட்டது. அதன் தாக்கம் இன்னும் எங்களை விட்டுப் போகவில்லை. அன்று நடந்த விபத்திலிருந்து அம்மா மீண்டு வந்ததே அதிசயம். அவளின் உடல்நிலை முழுமையாக குணமாகவில்லை பெரும் பொழுது படுக்கையிலேயே கழிகிறது.

“படிப்பை விட்டிடாதை ஒ எல் சோதினையை எடுத்து பாஸ் பண்ணுடா”

அப்பா போனதில் இருந்து இதையே சொல்லிக் கொண்டிருக்கிறாள். தம்பியைப் படிக்க அனுப்பினேன்.

“நானும் படிக்கப் போனால் குடும்பத்தை ஆரம்மா பாக்கிறது. படிக்கிறதுக்கு உதவி கிடைச்சாலும் நாளாந்த செலவுக்கு நான்தானே உழைக்க வேணும்”

“பதினெழு வயசு படிக்கிற வயசடா. நீயும் படிக்கவேணும் எண்டு அப்பா ஆசைப்பட்டாரே.. படிக்கிற வயசில எந்த வேலைக்குப் போவாய். அப்பா மாதிரி கூலி வேலைக்குத்தான் போக வேணும். வேண்டாமடா அப்பா ஏமாந்ததும் துன்பப்பட்டதும் போதும் நீ படிக்கப் போடா” அம்மா கெஞ்சினாள்.

வருமானம் இல்லாமல் எப்படிப் படிக்கமுடியும். அப்பாவின் இடத்திலிருந்து இனி இவர்களை நான்தானே பார்க்கவேணும் அப்பா இருந்திருந்தால் இந்த நிலைமை வருமா. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தேன் அன்று நடந்ததை இன்றும் என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

அப்பா அதிகம் படித்ததில்லை. குமரபுரத்தில் வீட்டுக் காணியோடு மூன்று ஏக்கர் வயலும் சொந்தமாக இருக்கிறது. வருடத்திற்கொரு முறை மாரி மழையை நம்பி விதைப்பு நடக்கும். நல்ல விளைச்சல் தருகின்ற காணி ஆனால் பணம் செலவழித்து காணியைப் பதப்படுத்தவோ உரிய நேரத்தில் உழுது நெல் விதைத்து பசளை போடவோ முடியாமல் அப்பா திண்டாடிக் கொண்டிருந்தார். கடன் வாங்கி முழுச்செலவும் செய்ய முடியாமல் தனியாளாய் நின்று முடிந்தளவுக்கு வயலோடு போராடுவார். சாப்பாட்டுக்கு நெல் வரும் மற்றச் செலவுகளுக்கு கஷ்டமாயிருக்கும். விதைத்தது கைக்கு வராமல் நட்டப்பட்டதும் உண்டு. ஆனாலும் வயலை விடாது விதைத்துக்கொண்டிருந்தார். வேண்டாம் என்றாலும் கேட்கமாட்டார். மேலதிக வருமானத்துக்காக அடுத்தவர் வயல்களிலும் தோட்டங்களிலும் வேலை செய்தார். நிரந்தர வருமானம் வரக்கூடியதாய் ஏதாவது செய்ய வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருந்தபோது அவருக்கு கரடிப்போக்குச்சந்தியிலுள்ள ஒரு இரும்புக்கடையில் வேலை கிடைத்தது.

அந்த நேரத்தில்தான் லண்டனிலிருந்து நீண்ட நாட்களுக்குப் பின் ஊருக்கு வந்திருந்தார் கேசவன் மாமா. எங்களுக்குச் சொந்தமில்லை என்றாலும் சின்னவயதிலிருந்து மாமா என்று அழைத்துப் பழகி விட்டது. பற்றைக்காடாய் இருந்த தன்னுடைய காணியையும் இடிந்து போயிருந்த வீட்டையும் பார்த்துவிட்டு அப்பாவைத் தேடி வந்தார்.

“பிறந்து வளர்ந்த வீட்டையும் காணியையும் இப்பிடிப் பாக்க கவலையாயிருக்கு. மூண்டு மாத லீவில வந்தனான் காணியைத் துப்பரவாக்கி மரங்கள் வைக்கவேணும் வேலைக்கு வாறியா” அப்பாவிடம் கேட்டார்.

வேலையில்லாமல் அலைந்தபோது கேட்டிருந்தால் உடனே சம்மதம் சொல்லியிருப்பார். மாதவருமானம் வரும் கடைவேலையை விட முடியாது. மறுப்பு சொல்லியும் மாமா விடவில்லை.

“காணி திருத்தி வீடு கட்டின பிறகும் உனக்கு உழைப்பிருக்கும். வைச்ச மரங்களை நீதான் பாக்கவேணும். காணி இனி உன்ர பொறுப்பு. நான் எல்லாம் பாத்து செய்வன். நீ வா”

சின்னவயதிலிருந்து பழகிய உரிமையில் கேட்க மறுக்க முடியாமல் சம்மதம் சொன்னார். அம்மா கடை வேலைக்கே போகச் சொன்னாள் அப்பா கேட்கவில்லை.

அடுத்த நாள் மூன்று பேருடன் வேலைக்குப் போனார். வளர்ந்த பெரிய மரங்களை வெட்டி அடிமரத்தை வேரோடு கிளப்பி அதைத் துண்டாக்கி அப்புறப்படுத்தினார்கள். பற்றையாய் படர்ந்திருந்த புற்களை உழவு யந்திரத்தால் உழுது சமப்படுத்தினார்கள். இடிந்து போயிருந்த வீட்டின் கற்குவியல்களை அள்ளி காணியின் மூலையில் குவித்தார்கள். காணியைத் துப்பரவாக்கி முடிக்கவே இரண்டு மாதங்களாகிவிட்டது.

“அடுத்தமுறை வந்துதான் வீட்டுவேலையைத் தொடங்கவேணும். இப்ப நிழல் இல்லாமல் வெயில் வெக்கை தாங்கமுடியேல முதல் மரங்களை வைப்பம்”

திருத்திய காணியில் தென்னை, மா, தேசி, தோடை தேக்கு என்று இடம் பார்த்து நட்டார்கள். நட்ட கன்றுகளுக்குத் தண்ணீர் விட மோட்டரும் தேவையான பைப்புகளும் வாங்கிக் கொடுத்தார் மாமா. அவர் போகமுதல் வேலைகளை முடிக்கவேணும் என்பதால் நேரகாலமில்லாமல் எந்தநேரமும் காணியில் வேலை செய்து கொண்டிருந்தார் அப்பா. நானும் பள்ளிக்கூடம் முடிய பின்னேரங்களில் அங்கு போய் விளையாடிக் கொண்டிருப்பேன். தினமும் வேலை முடிந்ததும் வேலைக்குரிய பணத்தை அப்பாவிடம் கொடுத்து விடுவார் மாமா.

“இப்பதான் காணியைப் பாக்க நிம்மதியாய் இருக்கு. நட்டதுகளுக்குத் தண்ணி விட்டு பசளை போட்டு நீதான் கவனமாய் பாக்கவேணும். இனி மாதச் சம்பளம் தாறன். தண்ணி போற வாய்க்கால் ஒரங்களில மரக்கறியளை போட்டு நீயும் எடு. பக்கத்தில தம்பின்ர காணியும் இருக்கு. அவனும் காணியைத் திருத்தி மரங்கள் வைக்கிறதுக்கு உன்னோட கதைச்சு செலவுக்கு பணம் அனுப்புவான். இரண்டையும் பாத்துக் கொள். மாதம் பத்தாயிரம் தாறம்”

“சரி அண்ணை. நான் பாத்துக் கொள்ளுறன்” சந்தோஷமாக தலையாட்டினார் அப்பா.

லீவு முடிந்ததும் லண்டனுக்குப் போய்விட்டார் மாமா. கிடைத்த வேலையை விட்டிட்டமே என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்த அப்பாவுக்கு இரண்டு காணிகளையும் தன் பொறுப்பில் விட்டதும் மாத வருமானம் வரும் என்றதும் நிம்மதியைக் கொடுத்தது. கேசவன்மாமாவின் தம்பி மாதவன்மாமாவோடும் கதைத்து அவர் சொன்னபடியே காணியைத் திருத்தி கன்றுகள் வைத்து இரண்டையும் தன் சொந்தக் காணி போலவே பார்த்துக் கொண்டார். சிறு கன்றுகளாக இருப்பதால் காலை மாலை இரண்டு நேரமும் தண்ணீர் விட மோட்டரையும், பைப்புகளையும் சிறு தள்ளு வண்டியில் வைத்து தள்ளிக்கொண்டு போய் இறைத்து விட்டு வீட்டுக்கு கொண்டு வருவார். பட்ட மரங்களை அகற்றி புதிய கன்றுகள் வைத்தார். கிணற்றடியைச் சுற்றி வாழை போட்டார். இறைக்கும் தண்ணீர் வீணாகாமல் கத்தரி வெண்டி மிளகாய் என மரக்கறிகளும் வைத்தார். பகலில் வேறு வேலைகளுக்குப் போனாலும் பின்னேரங்களில் இரண்டு காணிகளிலுமுள்ள வேலைகளை தனியாளாய் நின்று செய்வார். அப்பா விருப்பத்தோடு செய்வதைப் பார்த்து அம்மாவின் மனமும் சமாதானமாகி விட்டது.

கேசவன் மாமா லண்டன் போன பின்பும் அடிக்கடி எடுத்து மரங்களின் வளர்ச்சியையும் அதன் செலவுகளையும் கேட்பார். இரண்டு வருடங்களுக்குப் பிறகு வந்து வீட்டின் வேலைகளைத் தொடங்கினார். நின்ற நாட்களில் வேலைகள் மும்முரமாக நடந்தது. அந்தநேரங்களில் அப்பாவால் வேறு வேலைகளுக்குப் போக முடியவில்லை. மாமா லண்டன் போன பின்பும் அப்பாவின் பொறுப்பில் வேலை நடந்து கொண்டிருந்தது. இடையில் மாதவன் மாமா வந்திருந்து மீதி வேலைகளைப் பார்த்துக் கொண்டார். பண விஷயத்திலும் சரி வேலை விஷயத்திலும் சரி அவர் எப்போதும் கண்டிப்பும் கறாருமாய் இருப்பார். வேலை செய்தாலும் அதில் குற்றம் கண்டு குறை சொல்லிக் கொண்டிருப்பார்.

“காணியைப் பாக்கச் சொன்னால் அதில நீங்களும் பயிரை வைச்சு எடுக்கநிக்கிறீங்கள். அண்ணா சொன்னா ரெண்டு நெடுகவும் செய்யிறதே அதில வாழையைப் போட்டால் காணிச் செலவுக்கு வரும். வைச்ச மரங்களும் வாடிப்போயிருக்கு வாங்கிற பசளையளை என்ன செய்யிறீங்கள்”

“பசளை போட்டு தண்ணி விட்டாலும் இந்த வெயிலுக்கு வாடித்தான் தெரியும் அண்ணை”

“அங்க இருந்து உங்களை நம்பி காசை அனுப்புறம் காணியை கவனமாய் பாருங்கோ” காணியோடு கஷ்டப்படுவது தெரிந்தும் திருப்தி இல்லாத முகத்தோடு சொன்னார். அப்பா ஒன்றும் சொல்லவில்லை. வீட்டு வேலைகளை முடித்து விட்டு லண்டன் போய்விட்டார்.

இரண்டு காணிகளோடும் அதிக நேரங்களைச் செலவழித்தார் அப்பா.

ஆறு வருட உழைப்பில் இரண்டு காணிகளும் பசுமையாகத் தோன்றின. நானும் நேரமிருக்கும்போது அவருடன் போய் குழாய் பிடித்து மரங்களுக்குத் தண்ணீர் விடுவேன். சின்ன சின்ன வேலைகளையும் செய்வேன். அந்தக் காணியோடு அப்பா பட்ட கஷ்டங்களும் அதற்குக் கொடுத்த உழைப்பும் சிந்திய வியர்வையும் எனக்கு நன்றாகவே தெரியும். அப்பாவின் உழைப்பைப் பார்த்த சிலர் தங்கள் காணிகளிலும் மரங்கள் வைக்கவும் பராமரிக்கவும் வேலை கொடுத்தார்கள். இதனால் வீட்டின் நிலைமையிலும் முன்னேற்றம் தெரிந்தது. வரும் பணத்தில் செலவு போக அவசரதேவைக்கென்று அம்மாவாலும் சிறிது சேமிக்க முடிந்தது. காணியில் விளையும் மரக்கறிகளை சந்தைக்கு கொண்டு போவதற்கு இரண்டாம் தரத்திலுள்ள ஒரு மோட்டார் சைக்கிளையும் வாங்க முடிந்தது.

அந்த வருசம் காணியை பார்க்க மாமா இருவரும் வந்திருந்தார்கள். தண்ணீரில் நனைந்து குளிர்ச்சியோடு நிற்கும் மரங்களைப் பார்த்தார்கள். தென்னையில் பாளை விரிந்து கொத்துக்கொத்தாய் காய்த்திருக்கும் தேங்காய்களும், மாமரத்தில் பூவும் பிஞ்சுமாய் தொங்கும் காய்களும், தேசி, தோடையில் சிலிர்த்துப் போயிருக்கும் காய் பழங்களும் அவர்களைப் பிரமிக்க வைத்தன.

“வருமானம் வரத்தொடங்கிட்டு தண்ணை எல்லாம் எழுதி வைச்சிருக்கிறன்” என்றார் அப்பா.

“வருமானத்தில காணியின்ர செலவையும் உன்ர சம்பளத்தையும் எடுக்கக்கூடியதாய் இருக்கவேணும். கைக்காசு போட்டு நெடுகவும் செலவழிக்கேலாது. உன்ர பாடு இப்ப பரவாயில்லை காணியில விளையிற எல்லாத்துக்கும் கணக்குப் போடு”

மாதவன் மாமா ஏற்கனவே சொன்னதை இவர் இப்பொழுது சொல்கிறார். கேசவன் மாமாவிலும் நிறைய மாற்றங்கள் தெரிந்தது எனக்கு.

மாதவன் மாமா தன் காணியைப் போய் பார்த்து விட்டு வந்தார்.

“காணி சோலையாய்தான் இருக்கு. மரங்களெல்லாம் வளர்ந்திட்டுது இனி அதை பராமரிக்கிறது சுகம்.

(அடுத்தவாரமும் வரும்)

# மீண்டும் பிலிப்பைன்ஸில் அமெரிக்க இராணுவ தளங்கள்! தென் சீனக் கடலில் சீன ஆக்கிரமிப்பின் விளைவு!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா




அமெரிக்காவும் பிலிப்பைன்ஸும் கடந்த வாரம் பிப்ரவரி 2 அன்று, தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் அமெரிக்காவின் இராணுவப் பிரசன்னத்தை விரிவுபடுத்தும் திட்டங்களை முழுமையாக அறிவித்துள்ளன. மேலும் நான்கு தளங்களை, தாய்வான் மற்றும் சர்ச்சைக்குரிய தென் சீனக் கடலில் சீனாவின் பெருகிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் நிர்மாணிப்பதாக அமெரிக்காவும் பிலிப்பைன்ஸும் இணைந்து அறிவித்துள்ளன.

**பிலிப்பைன்ஸில் அமெரிக்க ராணுவ தளங்கள்**

பிலிப்பைன்ஸ் ராணுவ முகாம்களில் அமெரிக்கப் படைகள் மற்றும் ஆயுதங்களை நிலைநிறுத்துவது குறித்த பேச்சு வார்த்தைக்காக அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் லாயிட் ஆஸ்டின் மூலம் இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, தற்போதைய ஐந்து தளங்களில் உள்கட்டமைப்பு மேம்பாடுகளுக்கு 82 மில்லியன் டாலர்களை அமெரிக்கா ஒதுக்கியுள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டின் மூலோபாய பகுதிகளில் நான்கு புதிய தளங்களுக்கு தனது இராணுவ இருப்பை தற்போது அமெரிக்கா விரிவுபடுத்தியுள்ளது.

**கொரிய தீபகற்பத்தில் போர் அச்சுறுத்தல்**

இதேவேளை வட கொரியாவின் வளர்ந்து வரும் அணுசக்திக்கு பதிலளிக்கும் விதமாக தென் கொரியப் படைகளுடன் கூட்டுப் பயிற்சியை மேம்படுத்துவதற்காக கொரிய தீபகற்பத்தில் போர் விமானங்கள் மற்றும் குண்டுவீச்சு விமானங்கள் போன்ற மேம்பட்ட ஆயுதங்களை அமெரிக்கா அதிகப்படுத்துவதாக கூறியுள்ளது.

ஆசியாவிலேயே வாஷிங்டனின் மிகப் பழமையான உடன்படிக்கைக் கூட்டாளியும், அமெரிக்கா நடாத்தும் போர்களில் முக்கிய முன்னணியுமான பிலிப்பைன்ஸில், திரு. ஆஸ்டின் தெற்கு ஜாம்போங்கா நகரத்திற்குச் சென்று பிலிப்பைன்ஸ் ஜெனரல்கள் மற்றும் உள்ளூர் இராணுவ முகாம், பிராந்திய பிலிப்பைன்ஸ் இராணுவத்தில் உள்ள அமெரிக்க பயங்கரவாத எதிர்ப்புப் படைகளின் ஒரு குழுவைச் சந்தித்தார்.

100 க்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவ வீரர்கள் பல தசாப்தங்களாக மிந்தானோ முஸ்லீம் கிளர்ச்சியை எதிர்த்துப் போராடும் பிலிப்பைன்ஸ் துருப்புக்களுக்கு பல ஆண்டுகளாக உளவுத்துறை மற்றும் போர் ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

**தென் சீனக் கடலில் சீனா ஆக்கிரமிப்பு**

சமீபகாலமாக, அமெரிக்கப் படைகள், தென் சீனக் கடலிலும், தாய்வான் கடல் வழியாக அதன் வடக்கு லுசோன் பகுதியிலும் பிலிப்பைன்ஸ் துருப்புக்களுடன் போர் தயார்நிலை மற்றும் பேரழிவு பதிலளிப்பதில் கவனம் செலுத்தும் கூட்டுப் பயிற்சியை தீவிரப்படுத்தி விரிவுபடுத்தியுள்ளன.

அமெரிக்காவிற்கு வெளியே நிரந்தரமாக நிலைநிறுத்தப்பட்டுள்ள கடல் நெருக்கடி கால நடவடிக்கை படைப் பிரிவின் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் ஜேம்ஸ் பைர்மேன் கூற்றுப்படி சீனாவுடனான எந்தவொரு மோதலிலும் தமது படையே முன் வரிசையில் இருப்பார்கள் என்றும், தற்போதைய கவனம், மத்திய கிழக்கில் பயங்கரவாதத்தின் மீதான போரில் இனி இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

**கடல் நெருக்கடி கால நடவடிக்கை படைப் பிரிவு**

போர் மூண்டால் 'வான்கடற்போர்' என்று அழைக்கப்படும் சீன இராணுவத் தளங்கள் மற்றும் சீனாவின் மூலோபாயத் தளங்கள் மீது பாரிய விமான மற்றும் ஏவுகணை தாக்குதலுக்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அத்தகைய தாக்குதலுக்கு போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆதரவளிக்கும். பென்டகன் தனது சொந்த ஏவுகணைகள் மற்றும் போர்க்கப்பல்களைக் கொண்டு, தனது பிராந்தியத்தை பாதுகாப்பதற்கும், அண்டைய கடல்களை பாதுகாப்பதற்கும் அமெரிக்கா அதிக அக்கறை கொண்டுள்ளது.

**ஜப்பானுடன் இணைந்த அமெரிக்க போர் தயாரிப்புகள்**

தற்போது ஜப்பானுடன் இணைந்து அமெரிக்க போர் தயாரிப்புகள் வேகமாக நடந்து வருகின்றன. அமெரிக்க தளபதி பைர்மன் பெருமையாகக் கூறியது போல், இரண்டு இராணுவங்களும் அதிவேக வளர்ச்சியை கண்டுள்ளன.



சமீபத்திய பயிற்சிகளின் பின்னர் அமெரிக்க கடற்படையினர் ஒரு ஜப்பானிய கட்டளை புள்ளியுடன் தொடர்புகொள்வதற்கு பதிலாக, முதன் முறையாக இருதரப்பு தந்திரோபாய ஒருங்கிணைப்பு மையங்களை தரையில் நிறுவியுள்ளனர்.

அதிபர் மார்கோஸின் முன்னோடியான ரோட்ரிகோ டுடெர்டேயின் கீழ் நெருக்கடியான காலகட்டத்திற்குப் பிறகு, நவம்பரில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸூக்குப் பிறகு பிலிப்பைன்ஸூக்குச் சென்ற சமீபத்திய மூத்த அதிகாரி அமெரிக்கப் பாதுகாப்புத் தலைவர் ஆவார்.

ரோட்ரிகோ டுடெர்டே சீனா மற்றும் ரஷ்யாவுடன் இணக்கமான உறவுகளை வளர்த்து வந்தார், மேலும் ஒரு கட்டத்தில் வாஷிங்டனுடனான உறவுகளைத் துண்டிக்கவும், வருகை தரும் அமெரிக்கப் படைகளை வெளியேற்றவும் மற்றும் ஒரு பெரிய பாதுகாப்பு ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் அச்சுறுத்தினார் என்பதும் அறிந்ததே.

**தாய்வான் மீது சீனா இராணுவ நடவடிக்கை?**

தாய்வான் மீது சீனா இராணுவ நடவடிக்கை எடுத்தால், அனைத்து ஆசியான் பிராந்தியமும், பெரும்பாலும் ஜப்பான் மற்றும் தென் கொரிய பாரிய பாதிப்புக்களை முகங்கொள்ள வேண்டி டும்.

பிலிப்பைன்ஸ் மற்றும் ஆசியான் உறுப்பினர்களான புருனே, மலேசியா மற்றும் வியட்நாம், தாய்வானுடன் சேர்ந்து, தென் சீனக் கடலில் சீனாவுடன் அதிகரித்து வரும் பதட்டமான பிராந்திய மோதல்களை எதிர் கொள்ள வேண்டிடும்.

இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்கா சீனாவிற்கு எதிரான ஒரு முக்கியமான எதிர்ப்பாளராகக் கருதப்படுகிறது மற்றும் பிலிப்பைன்ஸ் படைகள், கப்பல்கள் அல்லது விமானங்கள் தென்சீனக்கடல் பகுதியில் தாக்குதலுக்கு உள்ளானால், பிலிப்பைன்ஸின் பாதுகாப்பிற்கு வருவதாக உறுதியளித்துள்ளது.



அமெரிக்காவின் பிரதான நிலப்பகுதிக்கு வெளியே இரண்டு பெரிய அமெரிக்க கடற் படை மற்றும் விமானப்படை தளங்களை பிலிப்பைன்ஸ் அமைத்துள்ளது.

முன்பு பிலிப் பைன்ஸ் செனட் முடிவின் படி 1990 களின் முற்பகுதியில் அமெரிக்க தளங்கள் மூடப்பட்டன. பிலிப்பைன்ஸ் அரசியலமைப்பு வெளிநாட்டு துருப்புக்களை நிரந்தரமாக நிலைநிறுத்துவதையும் உள்ளூர் போரில் அவர்கள் ஈடுபடுவதையும் தடை செய்தது.

ஆனால் அமெரிக்கப் படைகள் 1999 புதிய ஒப்பந்தத்தின் கீழ் பிலிப்பைன்ஸ் துருப்புக்களுடன் பெரிய அளவிலான போர்ப் பயிற்சிகளை வழங்கி வருகின்றன.

சீனாவுடனான போருக்கான மேம்பட்ட செயல்பாட்டுத் திட்டத்தை பைர்மன் முன்னிலைப்படுத்துவதானது, அமெரிக்காவும் ஜப்பானும் இராணுவச் செலவினங்களை பெரிதும் அதிகரிப்பதுடன் பொருந்துகிறது.

கடந்த மாதம் ஜனாதிபதி பைடனால் அங்கீகரிக்கப்பட்ட புதிய அமெரிக்க பாதுகாப்பு வரவு - செலவுத் திட்டத்தில் புதிய இராணுவ உள்கட்டமைப்பு மற்றும் பசிபிக்கில் மூலோபாய முன்முயற்சிகளுக்காக பில்லியன் கணக்கான டாலர்கள் அடங்கும் என்று இராணுவ செய்தித்தாள் ஜனவரி 2 இதழில் தெரிவித்து உள்ளது.

இந்தோ-பசிபிக் கட்டளையகத்தில் ஏற்கனவே சுமார் 375,000 இராணுவம் மற்றும் சிவிலியன் பணியாளர்கள் இப்பகுதியில் பணிபுரிகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அமெரிக்க பாதுகாப்பு வரவு - செலவுத் திட்டம்**

ஹவாயில் உள்ள கட்டளை தலைமையகம், இராணுவ குடியிருப்புக்காக 87.9 மில்லியன் டாலரை புதிய அமெரிக்க பாதுகாப்பு வரவு-செலவுத் திட்டம் மூலம் பெறுகிறது. அத்துடன் ஏவுகணை சேமிப்பு வசதிகளை மேம்படுத்த 103 மில்லியன் டாலர், நிறுவனத்தின் செயல்பாட்டு வசதிக்காக 111 மில்லியன் டாலர், மற்றும் இராணுவ தேசிய காவலர் தயார்நிலை மையத்திற்காக 29 மில்லியன் டாலர் என நிதிகளை மேலும் பெறுகிறது.

சீன ஆயுதங்களை எதிர் கொள்ள, இராணுவம் பீரங்கி மற்றும் ஏவுகணை அமைப்புகளை மேம்படுத்தி வருவதுடன், புதிய தொலைதூர பீரங்கிகளையும் ஹைபர்சோனிக் ஆயுதங்களையும் நாடுகிறது, அதே வேளை விமானம் மற்றும் கடல் ஏவுகணைகள், மற்றும் கப்பல் ஏவுகணைகளை இராணுவப் பிரிவுகள் மூலம் தரையில் ஏவுவதற்கு மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

**கடந்த ஆகஸ்டில் தாய்வான் பதட்டம்**

கடந்த ஆகஸ்டில் வெள்ளை மாளிகையால் அனுமதிக்கப்பட்ட அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசியின் தாய்வான் விஜயம், கடுமையான பதட்டங்களைத் தூண்டியதுடன் சுற்றியுள்ள கடல் பகுதிகளில் இரு தரப்பிலிருந்தும் ஒரு ஆபத்தான மோதல் முனைப்பை ஏற்படுத்தியது. தாய்வான் வர்த்தக மற்றும் இராணுவ உறவுகளை வலுப்படுத்துவதன் மூலம், அமெரிக்கா முன்கூட்டியே இப்பிராந்தியத்தில் வலுவாக காலூன்றிக் கொள்கிறது.



அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் யாழ். கம்பன் விழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நல்லூர் துர்க்கா மணி மண்டபதில் இடம்பெற்றபோது.... (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

கல்வி tv CHANNEL-1

**12.02.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**12.02.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# கற்பிட்டியில் ஒதுங்கிய 14 பைலட் திமிங்கலங்கள்

கொழும்பு, பெப். 12

கடலோர நகரமான புத்தளம் கற்பிட்டியில் கரையொதுங்கிய 14 பைலட் திமிங்கலங்களைக் காப்பாற்றும் பாரிய மீட்புப் பணி மேற்கொள்ளப் பட்டது.

நேற்று சனிக்கிழமை அதிகாலை பைலட் திமிங்கலங்கள் கரை ஒதுங்கின. இதில் மூன்று திமிங்கலங்கள் இறந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எஞ்சிய 11 திமிங்கலங்களை மீட்பதற்கான முயற்சிகள் இலங்கைக் கடற்படை, பொலிஸார் மற்றும் வனவிலங்கு அதிகாரிகள் மேற்கொண்டனர்.

(அ)

# வெளிநாட்டு வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 12

வெளிநாடுகளில் உள்ள இலங்கை பணியாளர்கள் அனுப்பும் பணத்தின் அதிகரிப்பு நம்பிக்கையை தருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஒப்பீட்டளவில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு இலங்கையின் மீட்சிக்கான பாதையில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

இலங்கைப் பணியாளர்கள் இந்த நாட்டுக்கு அனுப்பிய பணம் 437.5 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)


# மரண அறிவித்தல்



## திருமதி
## திருஞானபாக்கியம் கணபதிப்பிள்ளை

யாழ். உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், 'திருப்பதி' கோப்பாய் வீதி உரும்பிராய், ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானபாக்கியம் கணபதிப்பிள்ளை கடந்த 25-01-2023 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார், உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மயிலைப்பிட்டி ஆறுமுகம் – முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சின்னத்தங்கம் தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும்,மனோகரன், கௌரி, ஸ்ரீதரன், ஜெயகௌரி(வதனி), காமேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராஜீவி, மகேந்திரரத்தினம், பிரணவஈஸ்வரன், சுஜோ, காலஞ்சென்ற தர்மதா, ஜனனி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, லட்சுமி, சபாரத்தினம், சிவபாக்கியம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை, தில்லையம்பலம், செல்வத்துரை, தையல்முத்து, தில்லையம்மா, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், காயத்திரி – பிரசாந்த், காத்யாயினி, நிரோஷா – சாம், மாலன் – அலசன், அனுஷன், ஜோயல், பிரியங்கா – றதீஸ், சாயகி, வாஷினி, கஜானனன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், கிரன், ஐலா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2023) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**


# நீதிமன்றால் வழங்கப்பட்ட தீர்ப்பு மக்களுக்கு கிடைத்த பெரு வெற்றி

## ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 12

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு, மக்களுக்குக் கிடைத்த வெற்றி என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

சுயாதீனமாக தீர்மானம் எடுத்து திட்டமிட்டபடி தேர்தலை நடத்த உறுதியளித்த இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு ரஞ்சித் மத்தும பண்டார பாராட்டுகளைத் தெரிவித்தார்.

தேர்தலை தாமதப்படுத்த அரசாங்கம் பல்வேறு தந்திரோபாயங்களை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்ட அவர், மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நீதிமன்றத்தை நாடத் தயாராக இருப்பதாக கூறினார்.

(அ)

# இரு தேசிய முக்கியத்துவம்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்னாலும் கூட 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது என்பதை அவர் வெளிப்படையாகவே ஒத்துக் கொண்டார்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது இனப்பிரச்சினை தீர்வுக்காக கடந்த வருட முற்பகுதியில் (மக்கள் கிளர்ச்சிக்கு முன்னதாக ) சர்வகட்சி மகாநா டொன்றைக் கூடியதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். அவர் கூட 13வது திருத் தத்தை எதிர்ப்பதாக கூறவில்லை. மாறாக அதில் உள்ள தங்களால் ஏற்றுக் கொள்ள முடியாத குறைபாடுகள் இருப்பதாகவே அவர் கூறினார்.

தமிழ் தலைவர்கள் அரசாங்கங்களுடன் செய்து கொண்ட முன்னைய ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டதே வரலாறு. இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையை அடுத்து மாகாணசபைகளை அறிமுகப் படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட காரணத்தினால் மாத்திரமே 13 வது திருத்தத்தில் அரசாங்கங்கள் கைவைக்கவில்லை. இப்போது 37 வருடங்கள் கழித்து அதை முழுமையாக நடைமுறைப் படுத்தும் தனது விருப்பத்தை ஜனாதிபதி விக்கிரமசிங்க வெளியிட் டதை அடுத்து அதற்கெதிராக தென்னிலங்கையில் எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. அதையும் கூட விட்டு வைக்கக்கூடாது என்று சிங்கள தேசாயவாத சக்திகளும் மகாசங்கமும் கூறுகின்ற நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகியிருககிறது.

13 வது திருத்தம் சம்பந்தப்பட்ட விவகாரத்தைப் பொறுத்தவரையில் ஒரு விசித்திரமான விடயம் என்ன வென்றால், அது நாட்டைப் பிளவுபடுத்திவிடும் என்று சிங்கள கடும்போக்காளர்கள் கூறுகின்ற அதேவேளை தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் அது இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு அல்ல என்று ஆரம்பத்தில் இருந்து கூறி வருவதே யாகும். சமஷ்டி அடிப்படையிலான - நிலைபேறான அர சியல் தீர்வொன்றை நோக்கிய பயணத்தில் ஒரு முதற்படியாக 13 வது திருத்தம் முழுமையாக நடை முறைப்படுத்தப்படவேண்டும் என்பதே அந்த கட்சிகளின் நிலைப்பாடு.

ஜனாதிபதி கூறியதைப் போன்று 13 வது திருத் தத்தை ஒழிக்க அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை தனிந பர் சட்டமூலமாக எந்த பாராளுமன்ற உறுப்பினரும் கொண்டுவரும் சாத்தியமில்லை. ஏனென்றால் அத்தகைய முயற்சி இந்தியாவுடனான உறவுகளில் நெருடலை ஏற்ப டுத்தும் என்பதே பல அவதானிகளின் அபிப்பிராயமாக இருக்கிறது. தற்போது தென்னிலங்கையில் கிளம்பியிருக்கும் எதிர்ப்புக்கு மத்தியில் இந்தியா எத்தகைய பிரதிப லிப்பை வெளிக்காட்டும் என்ற கேள்வியும் எழுகிறது.

அண்மையில் கொழும்பு வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தமிழ் கட்சிகளின் தலைவர்களுட னான சந்திப்பின்போது 13 வது திருத்தத்தையே நடை முறைப்படுத்தாமல் இருப்போரிடம் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை எவ்வாறு நீங்கள் எதிர்பார்க்கமுடியும் என்று கேட்டார். அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று கொழும்பிடம் புதுடில்லி 37 வருடங்களாக வலியுறுத்தியும் எந்த நகர்வையும் காணமுடியவில்லை.

அமெரிக்க தமிழர் நடவடிக்கைக் குழு (USTAG) ருவிட்டர் சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட இரு படங் கள் இந்த சந்தர்ப்பத்தில் கவனத்தை பெரிதும் ஈர்த்தன. 1957 செல்வா - பண்டா ஒப்பந்தத்தை எதிர்த்து அன்று பிக்குமார் நடத்திய கூட்டமொன்றின் கறுப்பு வெள்ளை படமும் கடந்தவாரம் பிக்குமார் பாராளுமன்றத்துக்கு வெளியே 13வது திருத்தத்தின் பிரதிகளை எரித்ததைக் காண்பிக்கும் வண்ணப் படமும் அதில் பதிவாகியிருந்தன.

இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளுக்கு எதிரான பிக் குமாரின் எதிர்ப்பைப் பொறுத்தவரை 66 வருடங்களுக்கு முன்னர் நிலவிய சூழ்நிலைக்கும் இன்றைய சூழ்நிலைக்கும் இடையில் உள்ள ஒரேயொரு வித்தியாசம் படங்களின் நிறமே தவிர,வேறு எதுவும் மாறவில்லை என்ற கருத்து அந்த படங்களுக்கு மேலாக பதிவாகியிருந்தது.


# மரண அறிவித்தல்



## திருமதி
## மங்கையற்கரசி முத்துக்குமாரசுவாமி

யாழ். சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மங்கையற்கரசி முத்துக்குமாரசுவாமி நேற்று முன்தினம் (10-02-2023) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமா னார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பையா உடையார் – தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான திரு. திருமதி சின்னையா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரசுவாமி அவர்களின் அன்பு மனைவியும், சிறீகாந்தா, ரவீந்திரா, சுபோதினி, தாரகன், சுதர்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,விமலா, சுபத்திரா, தயானந்தா, நந்தினி, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான சண் முகசுந்தரம், இராஜரட்ணம் மற்றும் செல்வபாக்கியம்(ஐக்கிய அமெரிக்கா), Dr. கதிர்காமத்தம்பி (பிரித்தானியா), Dr. இராமச்சந்திரன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. சகுந்தலை, மாணிக்கவாசகர் ஆகியோரின் சிறிய தாயாரும்,கபிலன், அபிராமி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும்,சிவமயூரன், காயத்திரி, கௌதமி, ஜனகன், கவிந்தன், லக்ஸ்மன், ஹரினி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (14.02.2022) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

**தொடர்புகளுக்கு :**
**சுபோ (மகள் - கனடா) - Mobile : +16474011081**
**தாரா (மகன் - கனடா) - Mobile : +16475889542**
**சுதா (மகன் - கனடா) - Mobile : +14165676209**
**நித்தியானந்தா மனுநீதி (பெறாமகன்) - +94 77 621 7550**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## தமிழ், சிங்கள....

இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது தலைவர் பொன்னம்பலம் இராமநாதன் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சிங்கள மற்றும் தமிழ்த் தலைவர்கள் இணைந்து செயற்பட்டால் நாட்டை வேகமாக முன்னோக்கி கொண்டுச் செல்ல முடியும் எனவும் கூறினார்.

இந்திய அரசின், ஆயிரத்து 350 கோடி ரூபாய் நன்கொடையில் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, 'கலாசார மத்திய நிலையம்' நேற்று முற்பகல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது 75ஆவது தேசிய சுதந்திர தினத்தை கொழும்பில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலும் கொண்டாட நாம் தீர்மானித்தோம். அந்த வேலைத்திட்டத்தை நாம் இந்த கலாசார மையத்திலிருந்தே ஆரம்பிக்கின்றோம். இது எமக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பெற்றுக் கொடுத்த பரிசு ஆகும். அதனால் அவருக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் நன்றி தெரிவிப்பதே நான் செய்யும் முதல் விடயம்.

இந்தியாவும் இலங்கையும் முன்னெடுத்து வரும் வேலைதிட்டங்களில் பிரதானமானதொரு அம்சம் இதுவாகும். ஒரு புறத்தில் இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலும் மறுபுறத்தில் விசேடமாக திருகோணமாலை துறைமுகத்தின் பாரிய அபிவிருத்தி வேலைதிட்டம் தொடர்பிலும் நாம் கலந்துரையாடி வருகின்றோம்.

வலு சக்தி தொடர்பிலும் நாம் பேச்சு நடத்தி வருகின்றோம். அதுபோலவே எமது பொருளாதார நெருக்கடியின் போது இந்த கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கும் இந்திய அரசாங்கம் எமக்கு வழங்கிய ஒத்துழைப்பை நாம் பாராட்டுகின்றோம்.

இக்கலாசார மையம் ஒரு பொதுவான மையமாகும். நான் எப்போதும் கூறுவேன் எம்மிடையேயுள்ள கலாசாரத்தை வேறு பிரிக்க முடியாது என்று. ஒரு நாயணத்தின் ஒரு பக்கம் இலங்கை என்றால் மறுபக்கம் இந்தியாவாகும்.

எம்மிடமுள்ளது ஒரு கலாசாரம். அதனை நாம் பாதுகாத்து மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும். அதனால் இந்த மையத்தை பொது மக்களிடம் கையளிப்பதை முன்னிட்டு உங்கள் அனைவர் சார்பிலும் இந்தியாவுக்கும் இந்தியாவின் பிரதமருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் மக்களிடமிருந்து எமது சுதந்திரப் போராட்டத்துக்கு கிடைத்த ஒத்துழைப்புக்காகவே 75ஆவது சுதந்திர தினத்தை நாம் இம்முறை யாழ்ப்பாணத்தில் கொண்டாட தீர்மானித்தோம்.

யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் ஆரம்பித்த இந்து மறுமலர்ச்சி வேலைத்திட்டத்தை தொடர்ந்தே ஹிக்கடுவே சிறி சுமங்கல தேரர் பௌத்த மறுமலர்ச்சியை ஆரம்பித்தார். எனவே ஆறுமுக நாவலர் முன்னெடுத்த பணிகளில் இருந்து தான் எமது சிங்கள தலைமைத்துவமும் உருவாகியது.

பொன்னம்பலம் இராமநாதனுக்கு நன்றி கூறும் வகையிலேயே வெசாக் தினம் விடுமுறை தினமாக பிரகடனப் படுத்தப்பட்டது.

இலங்கையர்களால் தெரிவு செய்யப்பட்ட முதல் தலைவரே பொன்னம்பலம் இராமநாதன் ஆவார். 1915 ஆம் ஆண்டு குழப்பங்கள் நிலவிய காலத்தில் எமது சிங்கள பௌத்த தலைவர்களை பாது காத்துக் கொடுத்தவர் பொன்னம்பலம் இராமநாதன் என நான் இவ்விடத்தில் கூற விரும்புகிறேன்.

பொன்னம்பலம் அருணாச்சலம் இலங்கை தேசிய சபையை உருவாக்கினார். தொழிற்சங்கங்களுக்கு தலைமைத்துவம் தாங்கினார். சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியிருந்த போதும் துரதிஷ்டவசமாக அவர் 1924ஆம் ஆண்டு உயிரிழந்தார். அதிலிருந்து ஒரு வருடத்துக்குப் பின்னர் எப்.ஆர் சேனாநாயக்க காலமானார்.

அவர் வாழ்ந்திருந்தால் இதை விடவும் வித்தியாசமானதொரு வரலாற்றை நாம் கண்டிருந்திருப்போம். சிங்கள கலையை எமக்கும் உலகுக்கும் தெரியப்படுத்தியவர் ஆனந்தகுமார சுவாமி . அவரின் காலத்திலேயே இது மேம்படுத்தப்பட்டது.

அருணாச்சலம் மஹாதேவாவும் இந்நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்திருந்தார். அது போலவே இந்து தர்மத்தை முன்னேற்றுவதற்கும் கொழும்பு சிவன் கோவிலை கட்டுவதற்கும் இங்கு கோவில்களை உருவாக்கவும் இந்த குடும்பம் உதவி செய்தது. இந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையின் சிங்களம், தமிழ், பௌத்தம், இந்து ஆகிய பிரிவுகள் முன்னேற உதவி செய்தனர்.

இலங்கையர் சார்பாகவும் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற மக்கள் சார்பாகவும் அக்குடும்பத்துக்கு நன்றி கூற நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அவர்களைப் போலவே வைத்திய லிங்கம் துரைசாமியையும் எம்மால் மறக்க முடியாது. சுதந்திரத்தைப் பெறுவதற்காக டி.எஸ் சேனாநாயக்க அவர்களுக்கு உதவிய அமைச்சர் சி. சுந்தரலிங்கம் , அமைச்சர் சி.சிற்றம்பலம், அமைச்சர் நல்லையாஆகியோரையும் நாம் இந்த இடத்தில் நினைவு கூரவேண்டும்.

நாம் ஜி.ஜி பொன்னம்பலத்தையும் இங்கே நினைவு கூரவேண்டும். நாம் செல்வநாயகத்தையும் இங்கே நினைவு படுத்த வேண்டும். அதுபோலவே அமைச்சர் எம்.திருச்செல்வத்தையும் நினைவுபடுத்துகின்றோம்.

இந்த தலைவர்களே ஏனைய தலைவர்களுடன் இணைந்து இலங்கையை உருவாக்குவதற்காக பணியாற்றினர். அதன் காரணமாகவே இப்பிரதேசத்தில், இந்த யாழ்ப்பாணத்தில் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாட இந்த அரசாங்கம் தீர்மானித்தது-என்றார். (அ)

## சிவாஜிலிங்கமும்...

எதிர்ப்பு தெரிவித்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள காந்தி சிலையின் அருகில் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுதந்திரதின நிகழ்வு நடக்கும் இடத்துக்குள் அவர் நுழையக்கூடும் என்பதால் அங்கு பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டனர்.(அ)

## றெமீடியஸ்...

முடியப்பு றெமீடியஸ் நேற்று காலமானார்.

கடந்த 8ஆம் திகதி பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டியில் இடம்பெற்ற வீதி விபத்தில், பலத்த காயங்களுக்கு உள்ளான அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மூளையில் ஏற்பட்ட கடுமையான சிதைவு மற்றும் இரத்தக் கசிவுகள் மூளையின் செயற்பாடுகளை கடுமையாக பாதித்ததன் விளைவாக சத்திர சிகிச்சை மற்றும் அதிதீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டபோதும் அது பலனளிக்கவில்லை.

சிறுப்பிட்டி பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது, நாய் குறுக்கே ஓடியதால் அவர் விபத்துக்குள்ளாகியிருந்தார்.

அவர் விபத்துக்குள்ளான இடத்தில் மற்றொரு தலைக்கவசம் காணப்பட்டதாக கூறப்பட்டதை அடுத்து, சம்பவம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கும்படி யாழ்.நீதிமன்ற பதில் நீதிவான் பா.தவபாலன் உத்தரவிட்டார். (அ)

## வடக்கில்....

இந்திய மத்திய இணை அமைச்சர் கலாநிதி. எல் .முருகன்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற யாழ்.கலாசார நிலையத் திறப்பு விழாவில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய நாள் எமது இரு நாடுகளுக்கும் மிகச் சிறப்பானதாகும். ஏனெனில் யாழ். கலாசார மையம் இன்று பொதுமக்களிடம் கையளிக்கப்படுகிறது. இந்த வரலாற்று நிகழ்வின் ஒரு பகுதியாக எனக்கும் இதில் கலந்து கொள்ள கிடைத் தமையை பெரும் பாக்கியமாக கருதுகிறேன். இது எங்கள் உறவில் முக்கிய மைல் கல்லாக நினைவில் கொள்ளப்படும்.

2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த அற்புதமான வசதிகள் நிறைந்த கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நாட்டினார் என்பதை நான் இந்நேரத்தில் மகிழ்ச்சியுடன் நினைவுகூறுகின்றேன்.

இத்திட்டத்தை நிறைவு செய்து பொது மக்களிடம் கையளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந் நிலையம் மக்களின் கலை மற்றும் கலாசாரத்தை மேம்படுத்த உதவும்.

திரையரங்கு பாணியில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கம் , மிதக் கும் மேடை, பதினொரு மாடிகள் உள்ளிட்ட பல வசதிகளைக் கொண்ட இம்மையம் இலங்கை மக்கள் மீது இந்தியா கொண்டுள்ள உறுதிப்பாட்டின் நீடித்த அடையாளமாக இருக்கும்.

நான் இங்கே தங்கியிருந்த காலப் பகுதியில் வீட்டு வசதி, கல்வி, சுகாதாரம், விவசாயம் அதற்கும் அப்பாலென இந்தியாவின் நிலையான அர்ப் பணிப்பை அனைத்து மாகாணங்களிலும் தெட்டத் தெளிவாகக் கண்டேன்.

துரையப்பா மைதானத்தின் புனரமைப்பு மற்றும் புனிதமான திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மறுசீரமைப்பு ஆகிய இரண்டும் நான் நேரில் கண்ட உதாரணங்கள் ஆகும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் 'அயலவர்களுக்கு முன்னுரிமை' என்ற கொள்கைக்கு மையவே இந்த அர்ப்பணிப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இக்கொள்கையின் கீழ் இலங்கை ஒரு முக்கிய இடத்தைப் பெறுவது இயற்கையானது.

2022ஆம் ஆண்டு இலங்கை மக்களுக்கு இந்தியா வழங்கிய 04 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நிதி மற்றும் பொரு ளாதார உதவிகளை விட பெரிய விட யம் எதுவும் இல்லை.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துக்கு எழுத்து மூலமான நிதி உத்தரவாதத்தை வழங்கிய முதல் நாடு இந்தியா என்பதில் பெருமை கொள்கிறோம். இதுபோன்றே, இலங்கையிலுள்ள எமது நண்பர்களுக்கு இந்தியா பல தடவைகள் துணை நின்றுள்ளது. இது மக்களுக்கிடையிலான உறவுகளையும் கலாசார உறவுகளையும் மென்மேலும் வலுவூட்டுவதாக அமையும்.

இரு நாடுகளும் கடல் எல்லைகளைப் பகிர்ந்து கொண்டாலும் இந்தியாவின் தெற்கு பகுதியிலிருந்து இலங்கையின் வடக்கிற்கு பயணிப்பதில் சிரமம் இருந்தது. இரு நாடுகளதும் முயற்சியால் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான நேரடி விமான சேவையை நாம் மீண்டும் தொடங்கினோம். இது இரு நாடுகளுக்கும் இடையிலான மக்கள், வர்த்தகம், சுற்றுலா மற்றும் கலாசார நிகழ்வுகளை மேம்படுத்துவதற்கான உந்து சக்தியாக அமையும்.

உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பது போன்றே படகுச் சேவையை ஆரம்பிக்கவும் நாம் பணியாற்றி வருகின்றோம். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டலின் பேரில் வட மாகாணத்திலுள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 100 பிள்ளைகளுக்கு இந்திய அரசின் சார்பில் புலமைப்பரிசில் வழங்கும் திட்ட மொன்று அறிமுகம் செய்யப்படும்.

2047ஆம் ஆண்டில் இந்தியா தனது 100ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ளது. அதனை நோக்கிய பயணத்தை இந்தியா ஆரம்பித்துள்ளது. இலங்கையும் அதே குறிக்கோளுடன் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது. எனவே இந்த அபிவிருத்தி நோக்கிய பயணத்தில் இலங்கை இந்தியாவை அரவணைத்துச் செல்லும் என நான் நம்புகிறேன்-என்றார். (அ)

## யாழ்.கலாசார..

பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

அபிவிருத்தி பயணத்தில் இலங்கையையும் இந்தியா அரவணைத்து முன்னோக்கிச் செல்லும் என இதன் போது இந்திய இணை அமைச்சர் கலாநிதி லோகநாதன் முருகன் உறுதியளித்தார்.

இந்த நிகழ்வில் இந்திய இணை அமைச்சருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பில் நன்றி பரிசும் வழங்கப்பட்டது.

600 பேர் வரை அமரக்கூடிய வகையில் 13 தளங்களுடன் யாழ். கலா சார மத்திய நிலையம் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

குறித்த நிலையத்தில், மாநாட்டு மண்டபம், நவீன திரையரங்கு வசதிகள், டிஜிற்றல் நூலகம் ஆகியனவும் உள்ளன.

1.6 பில்லியன் ரூபா செலவில் யாழ். கலாசார நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ்...

பின்னர் அங்கிருந்து கந்தர்மடத்தினூடாக மீண்டும் பல்கலைக்கழகத்தைச் சென்றடைந்தது.

இந்த போராட்டத்தில் தவத்திரு வேலன் சுவாமிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டனர். (அ-03)

## கஜேந்திரன்...

தேசிய மக்கள் முன்னணியினரால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தநிலையில், நீதிமன்ற உத்தரவை மீறியமை மற்றும் அதிஉயர் பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

முன்னதாக குறித்த பகுதியில் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபடுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திர குமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட 8 பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது.

யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலையத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (அ-03)



ஈழநாடு
Eelanadu

# நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பு மிகவிரைவில் வீழ்ச்சியடையும்

## மயக்க மருந்து நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.12

**நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் உள்ளிட்ட உள்ளீடுகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக இலங்கை மயக்க மருந்து நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இந்நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தாது விடின் சுகாதார கட்டமைப்பு மிக விரைவில் வீழ்ச்சியடையும் என்று அந்த சங்கத்தின் தலைவி திருமதி அனோமா பெரேரா தெரிவித்துள்ளார்.

சத்திர சிகிச்சைக்கு தேவையான மருந்துகள் மருத்துவ விநியோக பிரிவில் தீர்ந்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவசர அறுவைச் சிகிச்சை மற்றும் சிசேரியன் கூட செய்ய முடியாது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)



# சிறிதரன் - அண்ணாமலை பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 12

நான்கு நாள் பயணமாக இலங்கை வந்துள்ள பா.ஜ.வின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை நேற்று பல தலைவர்களுடன் சந்திப்பை நடத்தினார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனை அவர் சந்தித்து கலந்துரையாடினார்.

அத்துடன் அவர் ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான ஆலோசகர் ருவான் விஜயவர்தனவுடன் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளித்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்த பாடுபடுவோம் என்றும் அண்ணாமலை இங்கு குறிப்பிட்டார்.

இதன்போது தமிழ் மக்கள் தொடர்பான பிரச்னைகள் குறித்தும் அவர் கலந்துரையாடினார். இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானும் கலந்துகொண்டார்.

இதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார். (அ)

# பருத்தித்துறை மீன்பிடி துறைமுகத்தை பார்வையிட்ட இந்திய இணையமைச்சர்




யாழ்ப்பாணம், பெப். 12

இந்திய இணை அமைச்சர் பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்தை பார்வையிட்டார்.

இந்திய தகவல் ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர் எல்.முருகன் தலைமையிலான குழுவினர்கள் நேற்று யாழ். பருத்தித்துறை மீன்பிடித்துறை முகத்திற்கு விஜயம் செய்தனர்.

பின்னர் மீனவ சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாகவும் கேட்டறிந்ததுடன் அதற்கான ஆலோசனைகள்,மற்றும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான மானிய உதவிகளும் வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

யாழ். இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கர் மற்றும் இந்திய தூதர அதிகாரிகள் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய தகவல் ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணையமைச்சர் எல்.முருகன் தலைமையிலான குழுவினர்கள் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வருமான வரித்துறைக்கு ரூ.201 பில்லியன் இழப்பு!

கொழும்பு, பெப்.12

உள்நாட்டு வருவாய் திணைக்களத்துக்கு 201 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வருவாய் நிர்வாக மேலாண்மை தகவல் அமைப்புக்கு சொந்தமான ரமிஸ் மற்றும் லீகசி கணினி அமைப்புக்களுடன் தொடர்புடைய நிறுவனங்களிடம் இருந்து வரி, அபராதம் மற்றும் வட்டி வருமானத்தின் மொத்த நிலுவைத் தொகையான 20,140 கோடி ரூபாயை அறவிட உள்நாட்டு வருவாய்த் திணைக்களம் தவறிவிட்டதாகத் தெரியவந்துள்ளது.

வருமான வரி, அபராதம் மற்றும் வட்டி வருமானத்தில் 57,256 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளதாக விளக்கி, உள்நாட்டு வருவாய் நிர்வாக மேலாண்மை தகவல் அமைப்பு மற்றும் நிறுவனங்களின் அறவீடு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக விளக்கி அறிக்கை ஒன்று அரசு கணக்குகள் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரியுள்ள தகவலின் மூலம் இது தெரியவந்துள்ளது.

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மதிப்புக் கூட்டு வரியாக 11,635 கோடி ரூபாய்கள் முறையாக செலுத்தப்படவில்லை.

மேலும், ரமிஸ் மற்றும் லீகசி அமைப்புகளுடன் தொடர்புடைய, 249 கோடி ரூபாய் பெறுமதியான 4,831 பெறுமதியான காசோலைகள் உள்ளூர் வருமான வரித் திணைக்களத்திடம் உள்ளதாகவும், அதில் 3,817 காசோலைகள் மூன்று வருடங்களுக்கும் மேலானவை எனவும் தெரியவந்துள்ளது.

பத்து வருடங்களாக செயல் இழந்திருந்த ரமிஸ் மென்பொருள் அமைப்பை இந்த வருடம் தொடக்கம் நடைமுறைப்படுத்த முடியும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கடந்த ஜனவரி 28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

டிசெம்பர் 31, 2015 வரையிலான வரிக் காலம் தொடர்பான வரி ஆவணங்கள் லீகசி கணினி முறையின் கீழும், ஜனவரி 1, 2016 முதல் ரமிஸ் கணினி அமைப்பின் கீழும் கட்டுப்படுத்தப்படுவதாக உள்நாட்டு வருமான வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**வருவாய் நிர்வாக மேலாண்மை தகவல்**

மென்பொருள் அமைப்பு, 2014 இல் தொடங்கப்பட்டு, 10 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு, அது முறையாக செயற்படவில்லை என்று அரசாங்க கணக்குகள் தொடர்பான குழு (கோபா) ஊடாக ஜனவரி, 24 இல் தெரியவந்துள்ளது.

எனினும், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வை தொடங்கி வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி, செலுத்தும் வரியை நீக்கினால், நாட்டுக்கு 16,300 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும் என்று தெரிவித்தார்.

வரி வரம்பு 2 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டால் நாட்டுக்கு 63 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுவதாகவும், அதன்படி மொத்தமாக 163 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது போன்று வரிகளை விதிக்க தமது அரசாங்கம் தயாராக இல்லை என்றும் அவ்வாறு செய்யாதது நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தலதா மாளிகை சொத்துக்களை விற்று பணம் எடுத்தவர் மகிந்த!

## தலதா மாளிகை அதிகாரி பரபரப்பு தகவல்

கொழும்பு, பெப்.12

50 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கமும், ஒன்பது கோடி ரூபா மதிப்பிலான நிலமும் விற்பனை செய்யப்பட்டு, முன்னாள் பிரதமரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டதாக கண்டி தலதா மாளிகையின் அதிகாரி ஒருவர் பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக சிங்கள இணையத்தளம் தலதா மாளிகையின் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

50 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கமும், ஒன்பது கோடி மதிப்பிலான நிலமும் விற்பனை செய்யப்பட்டு, முன்னாள் பிரதமரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டது.

அந்தப் பணத்தினை எடுத்துச் செல்வதற்காக நான்தான் மூட்டைகளாக கட்டினேன். அவற்றினை தியவதன நிலமே எடுத்துச் சென்று மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக வீடு வீடாகச் சென்று பரப்புரை செய்ய வந்த குழுவினருடன் தலதா மாளிகையின் அதிகாரி இந்த கருத்துக்களை வெளியிட்ட போது, அவற்றினை பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சிறிலங்கன் எயார்லைன்ஸை பரமாரிக்க முடியாத நிலைமை

## கைவிரிக்கிறார் அமைச்சர் நிமல்



கொழும்பு, பெப்.12

சிறிலங்கன் எயார்லைன்சின் மூன்று வானூர்திகளின் இயந்திரம் பழுதடைந்து தற்போது தரையில் நிறுத்தப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் வானூர்திகள் சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் பாராளுமன்றத்தில் மேலும் கூறியதாவது:

நூறு மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான கடனில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் சிக்கித் தவிக்கின்றது. இந்தக் கடனையும் வட்டியையும் செலுத்திய பின்னர் நிறுவனத்திற்கு எந்த இலாபமும் இல்லை.

பணம் இல்லாததால் பழுதடைந்த வானூர்திகளின் இயந்திரங்களை பராமரிக்க முடியாத நிலையில், அவற்றின் குத்தகைத் தவணையை முன்பு போலவே செலுத்தி ஒப்பந்தப்படி செய்ய வேண்டும். இந்த பிரச்னைக்கு தீர்வாக வானூர்தி சேவையை சீரமைக்க வேண்டும்- என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.